No. M-3660

# கிருஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை


47.

1st MAY 1937



# GRIHALAKSHMI

VOL. 1 ILLUSTRATED LADIES' MAGAZINE No. 5




## ஜுரங்களுக்கு

ரோகங்களில் முதன்மையானது ஜுரம். பலவித ஜுரங்களினால் நாம் தாக்கப்படுகிறோம். வாதஜுரம், பித்த ஜுரம், கபஜுரம் முதலிய எல்லா வித ஜுரங்களையும் ஆச்சர்யப்படும்படி நிவர்த்திசெய்வதில் முதன்மையானது

## அர்க்கா

இந்த அர்க்காவை கடந்த 25 வருஷங்களாய் ரோகிகளும், வைத்தியர்களும் உபயோகித்து இதன் குணாதிசயத்தை நன்கு உணர்ந்து புகழ்ந்திருக்கின்றார்கள். இளங் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். இன்புளூயென்ஸாவை கண்டிப்பதில் கீர்த்தி பெற்றது.

ஜுரம் கண்டவர்களுக்கு இதை எந்த ஸ்திதியிலும் கொடுக்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இதன் விலை | 6 | அவுன்ஸ் புட்டி | ரூ. 2 | 8 | 0 |
| ,, | 3 | ,, | ,, 1 | 8 | 0 |
| ,, | 1 | ,, | ,, 0 | 8 | 0 |

**கேஸரி குடீரம் - எழும்பூர் - மதராஸ்**

# கிருஹலக்ஷ்மி

**ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை**

பிரசுரிப்பவர்

டாக்டர் கே. என். கேசரி.

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ., (ஆனர்ஸ்)

மலர் 1] மே 1937 [இதழ் 5

PRINTED AT THE LODHRA PRESS, EGMORE, MADRAS.

# கிரஹலக்ஷ்மி

### சந்தா விவரம்

வருடசந்தா ரூ. 3, ஆறு மாதம் 1-8-0. 6 மாதத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பர்மாவுக்கு வருட சந்தா ரூ. 4-8-0. தனிப்பிரதி விலை அணு 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணு போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. வீண் அதிகச் செலுவுதான்.

### விளம்பர விகிதம்

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு 12½ % கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

### ஏஜண்டுகள்

பிரிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

### வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் [illegible] மையினால் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனுவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

### பத்திரிகை

பத்திரிகை கிடைக்கப் பெறாத சந்தாதார்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதார்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

### சந்தா

சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோருகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட வேண்டியது. இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

### குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே.என். கேசரி, பிரசுரிப்பவர், தபால் பெட்டி நெ. 752, எழும்பூர், சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும்.

5794







போலிகளைக் கண்டு உஷார்!!!

**அமிர்தாஞ்சனம்**

சகல வலிகளையும் போக்கும்


இந்திய திவ்யாமிர்தம்

**அமிர்தாஞ்சனம் லிமிடெட்,**

பம்பாய், மதராஸ், கல்கத்தா.



**LONG SERVICE PRESENTATIONS**





When the time comes for the retirement of a good and faithful servant, what finer token of esteem can his friends offer than a Solid Gold Watch - - - a daily reminder of those happy times spent with his colleagues.

We have a large Selection of WATCHES, CLOCKS and TIMEPIECES

Ours Quality Style & Value

**Star Watch Coy.**

MOORE MARKET MADRAS.

சிறந்த கெடியாரங்கள்! மலிவான விலை!!

நாங்கள் எல்லாவிதமான கைகெடியாரம், டைம்பீஸ்கள், பெரிய சுவர் கடியாரங்கள் நேரே தருவித்து மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்று வருகிறோம். கவர்மெண்டுக்கும் சப்ளை செய்து வருகிறோம். ரோல்டுகோல்டு கை வளயல், எங்களிடம் கிடைக்கும். கெடியார சில்லரை சாமான்களும் கிடைக்கும்.

| | |
|---|---|
| நெப்போலியன் பெரியசைஸ் ரவுண்டு லீவர் கைவாச் | ரூ. 4 12 0 |
| நாக்டேவி லீவர் மீடியம் ரவுண்டுசைஸ் கைகெடியாரம் | ரூ. 5 12 0 |
| நாக்டேவி லீவர் சதுரசைஸ் கெடியாரம் | ரூ. 10 0 0 |

எங்களிடத்தில் எல்லாவிதமான கடியாரங்களும் கிடைக்கும். இன்றே எழுதுங்கள்.

**ஸ்டார் வாட்ச் கம்பெனி, மூர்மார்கட், மதருஸ்.**

# பொருளடக்கம்


1. முக்கிய வேலை .... .... .... 295
2. ஸ்ரீதனம் .... .... .... 298
3. கதம்பம் .... .... .... 301
4. திலகவதி — "மைதிலி" .... .... .... 303
5. சம்பங்கி புஷ்பம் — "புஷ்பலீலா" .... .... 306
6. கத்தரிக்காய் — ஸ்ரீமதி ஜி. சரஸா .... .... 308
7. ருமேனியா — ஸ்ரீமதி ஜி. கிரிஜா .... .... 311
8. துளசியின் மருத்துவ பிரயோஜனம் — ஸ்ரீமதி எஸ். கமலா .... 316
9. அவளடங்கிய விதம் — "ராஜம்" .... .... 319
10. பால்ய விவாஹம் — திரு. கே. வி. எஸ். வாஸ் .... .... 322
11. ஸ்ரீமதி ருக்மணியம்மாள் பி. ஏ. — ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயலக்ஷ்மி .... 327
12. மதனலீலையார் — ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள் .... 331
13. வரதக்ஷிணை — "ஞானு" .... .... 338
14. விடுகதை வினு — திரு. ஸி. எஸ். ஜகதீசசுந்தரம் .... .... 340
15. பெண்கல்வி — ஸ்ரீமதி வி. ராதாமணி .... .... 341
16. தெய்வ பக்தி — ஸ்ரீமதி நாகலக்ஷ்மி .... .... 343
17. உமாசங்கர் — "ஜயம்" .... .... 345
18. கிழமைகள் கண்டுபிடிக்கும் விதம் .... .... 350
19. மதுராபுரி — திரு. எஸ். ஆர். வெங்கோபராவ் .... .... 351
20. ஸரஸாவின் சாதுர்யம் — ஸ்ரீமதி பத்மாஸனி .... .... 354
21. விசித்திரம் ஆனுல் வாஸ்தவம் .... .... 359
22. செய்தித்திரட்டு .... .... .... 361
23. ஆசிரியர் குறிப்புகள் .... .... .... 363
24. பஞ்சாங்கம் .... .... .... 365
25. பிரசவ அட்டவணை .... .... .... 366
26. சினிமா குறிப்புகள் .... .... .... 367

மூவர்ணப்படங்கள்

1. கிரஹலக்ஷ்மி
2. தெய்வ பக்தி



Willingdon SOAP

சோப்புகளின் ராணி—லார்ட் வில்லிங்டன் தம்பதிகள் உபயோகித்து மகிழ்ந்தது. அவர்களின் அன்பான அனுமதியின் பேரிலேயே இந்த பெயர் கொடுக்கப்பட்டது.



GUARANTEED

பரிசுத்தமானது—உத்தமமானது.

கேரளா சோப் இன்ஸ்டிடியூட்,
கள்ளிக்கோட்டை.

அழகான
அச்சு வேலைகள்

மூவர்ணப் படங்கள் வியாபார விளம்பரங்கள் லெட்டர் பேப்பர்கள் கேட்லாக் புஸ்தகங்கள் முதலிய

எல்லா விதமான கலர் அச்சு வேலைகளும், இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு அச்சு வேலைகளையும் உங்கள் அவஸரத்துக்கு தக்கபடி நாங்கள் நன்ருக செய்வோம் என்று உங்கள் அனுபவத்திலேயே தெரிந்து கொள்வீர்கள். ஒரு தடவை பரீக்ஷித்து பாருங்கள்.

விபரத்திற்கு எழுதவும்.

லோத்ரா பிரஸ்
சென்னை

சௌந்தரிய அபிவிருத்திக்கு

குந்தலகாந்தி தைலம்

ஸ்திரீகளுக்கு மிகவும் விலையுள்ள ஆபரணங்களைக் காட்டிலும் மயிர் அதிசயமாக இருக்கிறது. இம்மயிர்கள் கறுத்த நிற முடையதாகி,நீண்டும் இருப்பது அபூர்வமாக இருக்கிறது. இத் தைலத்தை தினத்திற் கொரு முறை மயிர்களுக்குத் தடவி வாரிக்கொண்டு வந்தால் மயிர்கள் கறுத்து நீண்டும் வளர்ந்து பார்வைக்கு அழகு தரும்.

புட்டி 1க்கு விலை அணு 12.

கேஸரி போமேட்

இதை தலை வாருவதற்கு முன் கொஞ்சம் கையிலெடுத்து தலையில் தடவி வாரிக்கொண்டால் மயிர் ரேகைகள் மினுமினுப்பாகவும், அழுகாகவும் இருக்கும். இந்துதேச பேர்போன அத்தர் சேர்த்து தயார் செய்யப்பட்டது. வாசனையுள்ளதும், வாசனை யில்லாததுமாக இரண்டு விதங்களில் கிடைக்கும்.

புட்டி 1க்கு விலை அணு 4.

கேஸரி குடீரம், எழும்பூர், மதருஸ்.

# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

**பெங்களூர் :** மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மென்ட்.
சாஸ்திரி ஹோட்டல் அண்டு ரெஸ்டாரன்ட், 89, சிக்பெட், சிடி.

**திருப்பதி :** மிஸ்டர். அப்துல் அஸீஸ், நியூஸ் ஏஜன்ட்.
மெஸர்ஸ். ஓய். வி. சுப்பையா அன் கோ., மெர்ச்சென்ட்.

**சேலம் :** எம். எஸ். கோபால், கோபால்ஸ் நியூஸ் மார்ட், சின்னக்கடைத் தெரு.

**திண்டிவனம் :** திரு. எஸ். என். கோபாலதேசிகன், சுப்ரமண்யஸ்வாமி கோயில் தெரு.

**கடலூர் :** மெஸர்ஸ். கமலா அன் கோ., புதுப்பாளையம், நியூடவுன்.

**வேலூர் :** திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெருவு, கோட்டை.

**திருச்சிக்கோட்டை :** திரு. எஸ். அஜீபா சாஹிப், நியூஸ் ஏஜண்டு, வைரவன் கோவில் தெருவு.

**மதுரை :** திரு. ஜி. வெங்கட நாராயண அய்யர், ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர், 248, மேலமாசி வீதி.

**திருநெல்வேலி டவுன் :** திரு. ஆர். வி. பதிராவ், 12, கீழரத வீதி.

**தூத்துக்குடி:** மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட்.

**பீமாவரம் :** திரு. வி. அச்சுத ராமய்யா, பிராஞ்சு மானேஜர், அஸ்வின் குமார் பார்மஸி.

**நிடதவோல் :** திரு. கே. ஸி. சென்ன கேசவய்யர், வியாபாரி.

**ஹனுமகொண்டா :** திரு. கே. அச்சுதானந்தம், ஆனந்த ஆயுர்வேதாஸ்ரமம்.

**சென்னை :** மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.

**கொழும்பு :** திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191,—193, நார்ரிஸ் ரோட்.

**யாழ்பாணம் :** திரு. ஏ. எஸ். அந்தோனி பிள்ளை, நார்த் ஸிலோன் நியூஸ் ஏஜன்ஸி, இரண்டாவது கிராஸ் தெரு.


**ரங்கூன் :** திரு. வி. பகவதி சாஸ்திரி, 244, பேர் தெரு.


**கோலாலம்பூர் :** திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட்ரோட் F.M.S.

ஹிஜ்ஜின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.

இன்னும் எல்லா விடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**கிரஹலக்ஷ்மி காரியாலயம்,**
தபால் பெட்டி நெ. 752,
**எழும்பூர், : : சென்னை.**





# முக்கிய வேலை

குமாரியே! பார். இப்படத்தைப்பார்! நான் அதிகம் சொல்ல வேண்டிய தில்லை. ராட்டினத்தில் நூல் நூற்கும் பெண் யாரென்று உனக்குத் தெரியுமா? அவள் ஒரு தேசாபிமானி, தேச சேவகி.

நாம் அணியும் ஆடைகள் அன்னிய ஆடைகள். சுமார் 60 கோடி ரூபாய் நம் தேசத்தை விட்டு அன்னிய நாடுகளுக்கு விதேசித் துணிக்காகச் செல்லுகின்றது. அவ்வளவு அவர்களுக்கு லாபம்! நமக்கு நஷ்டம்!!

நாம் சுத்த சுதேசி உடைகளையும், கதர் ஆடைகளையும் அணிவோமானால் நம் நாட்டிலுள்ள ஏழை நெசவாளரும், அவரது மனைவி மக்களும் உண்ண உணவு கிடைத்து பசிப்பிணி நீங்கி வாழ்வார்கள். அது எவ்வளவு நன்மையானது, உத்தமமானது, லாபகரமானது என்பதை யோசித்துப்பார் பாப்பா!

ஜரிகைகளும், விதேசப் புடவைகளும் நம் அன்னை பாரதமாதாவைக் கழுத்தை அறுத்துக் கொல்லுகின்றன. ஆனால் ஓரிருதடவைகள் வண்ணானுக்குப் போட்டீர்களானால் வண்டவாளம் வெளுத்து விடும். அந்த பகட்டுத்துணிகள் பஞ்சு பஞ்சாகப் பறந்து போய் விடும். பின்னர் அவைகள் விளக்குத்திரிகள் செய்வதற்குக்கூடப் பயன்பட மாட்டா. இது மாதிரி அனியாய விலை கொடுத்து வாங்கும் புடவைகள் அதி சீக்கிரம் கிழிந்து போகுமானால் நாம் எப்படிப் பிழைப்பது சொல்லம்மா?

கைராட்டைக் கையிலெடுத்து காந்தி போதனையை மேற்கொண்டு நூல் நூற்க ஆரம்பித்தோமேயானால் தரித்திரம் தலை காட்டாது ஓடிப்போம். நமக்கு வேண்டிய தினுசு தினுசான ஆடைகளை நமக்குத் திருப்திகரமாய் நாமே தயார் செய்து

கொள்ளலாம். யந்திரங்களில் நூற்கப்படும் நூல் உறுதியாக இருக்க முடியாது. அந்த நூல்களால் நெய்யப்பட்ட ஆடைகளை எவ்வளவு ஜாக்கிரதையாக வைத்திருந்த போதிலும், அதிகமாகப் போனால் ஆறு மாதங்களுக்கு மேல் தாங்காது. பின்னர் அவைகள் பெட்டியில் பூட்டி வைக்கத்தான் லாயக்கு.

கைராட்டையில் நூற்ற நூலைக் கொண்டு கைத்தறியில் நெய்யப்பட்ட துணிகள் பல வெளுப்புகளினால் நன்றாக மூறுக்கு ஏற்றப்பட்டு உறுதியாக இருந்து வெகு நாட்கள் உழைக்கின்றன.

எது நல்லது! எதை நீ விரும்புகிறாய்!

சிலர், குழந்தை குட்டிகள் உள்ள பெண்களுக்கு நூல் நூற்க நேரம் கிடைக்காது என்று கருதலாம். ஆனால் படத்தைப்பாருங்கள். அது அவ்வித எண்ணம் ஆதாரமற்றது என்று தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. எவ்வளவு அலுவல்கள் இருந்த போதிலும் இந்த கிரஹலக்ஷ்மி நூல் நூற்கும் வழக்கத்தைக் கைவிடுவதில்லை. நீங்களும் மனமிருந்தால் அவ்வாறு செய்ய முடியும். மனம்போல் மாங்கல்யம். உள்ளத்தில் ஆசையிருப்பின் வழிதானே தெரியும். நம் நாடு தரித்திரத்தில் மூழ்கியிருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள். தாய்மார் மட்டுமல்ல, குழந்தைகளும், சிறுமிகளும், எல்லோரையும் கூட்டுவித்து ராட்டினத்தின் ரீங்காரத்தொனியின் மேன்மையை எடுத்துக்காட்டி அவர்களும் அதன் இன்னிசையை உண்டாக்குமாறு செய்ய வேண்டியது சகோதரிகளின் கடமையாகும்.

குமாரியே! நீ சிறுமி. உலகத்திலிருந்து வரும் கஷ்ட நிஷ்டூரங்களை நீயறிய முடியாது. ஹிமயபர்வதத்திலிருந்து குமரி முனைவரை கோடிக்கணக்கான மக்கள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி தத்தளித்து தவித்து நிற்கிறார்கள். நாம் வெள்ளையரைப் பார்த்து, அவர்களின் நாகரிகத்தின் பகட்டான அம்சங்களை மட்டும் கண்மூடித்தனமாய் கையாண்டு வந்து நாளாவட்டத்தில் ஒரு நெருப்புக் குச்சிவேண்டுமென்றாலும், அன்னியரின் உதவியை எதிர்பார்த்து நிற்கின்றோம். என்ன கேவலம்! அக்கினி மூட்டுவதற்கும், அடுப்பு மூட்டுவதற்கும் அன்னிய தேச நெருப்புக்குச்சி வந்தால் தான் முடியும்! நாடு இந்நிலைக்கு வரக் காரணம் யார்? நாகரிகப்படிப்பு படித்தவர்கள்தான் என்று சொல்லலாம். பெரியவர்கள் ஒருவருக்கு ஒருவர் சாரமற்ற விஷயங்களுக்காக சச்சரவுகள் செய்வதால் அல்லலுறுவோர் ஏழைமக்களே.

தேச க்ஷேமத்தை நீங்கள் உண்மையில் விரும்புவீர்களேயானால் சுதேசியத்தைக் கடைப்பிடியுங்கள். நம் நாட்டில் நம் மக்களால் உற்பத்தி செய்யப்பட்ட சாமான்களை வாங்கி உபயோகியுங்கள். "சுதேசியில் நமக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் இல்லையே. நம் நாட்டில் அகப்படாத பொருள்கள் அனேகம் நமக்கு வேண்டியதிருக்கிறதே" என்று சிலர் நினைக்கலாம். ஆனால் இன்று அது மாதிரி கூறுபவர்கள் அறியாமையில் மூழ்கியிருக்க வேண்டும். சிறிது பொறுமையோடு விசாரிப்பரேல் சுதேசியில் அவர்களுக்கு எல்லா வஸ்துக்களும் இன்று கிடைக்கும். நிதானமாக ஒவ்வொருவரும் சிந்தியுங்கள். ஒரு பொருள் வாங்குமுன் அப்பொருள் சுதேசியில் கிடைக்குமா? என்று பாருங்கள்.





கைத்தொழில் செய்து வந்த அனேக குடிசைத் தொழிலாளரும், கைத்தொழில் ஊழியர்களும் இன்று சோற்றுக்கு வழியின்றி பசிப்பிணியால் வாடி வதங்குகிறார்கள். அவர்களின் குழந்தை குட்டிகளும், மனைவி மக்களும் பஞ்சத்தால், பட்டினியால் மெலிந்து நலிந்து மடிகிறார்கள். அவர்களின் தீனக்குறல் நாடெங்கும் ஒலிக்கிறது. அவர்கள் செய்து வந்த பொருள்களை வாங்குவாரற்றுப் போனதே அவர்களின் க்ஷீணதிசைக்கும், தரித்திரத்துக்கும் காரணம். அவர்கள் படும் கஷ்டத்தைக் கண்டு நாம் அவமே இருப்பது ஆண்டவனுக்கு அடுக்குமா? சுதேசப் பொருள்களை வாங்கி உபயோகிப்பதால் அவர்களுக்கும், அவர்களின் சிசுக்களுக்கும் அரை வயற்றுக்காவது கஞ்சி கிடைக்கும். தரித்திர நாராயணர்களாகிய இந்திய ஏழைமக்களுக்குக் கொஞ்சமாவது விடுதலை கிடைக்கும். சுதேசியத்தைக் கையாண்டு ஏழைமக்களுக்கு உதவியளித்தல் புண்யமா, பாபமா? நீங்களே யோசித்துப் பாருங்கள்!

எவ்வளவு காலம் நம் சொந்தச் சகோதரர்களும், சகோதரிகளும் பசித்துன்பத்தினால் புழுக்கள் போல் சாவதைக் கண்டும் சிந்தை யிரங்காமல் பகட்டு விதேசப் பொருள்களை வாங்கி உங்களை அலங்கரித்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள். பாரதர் புழுக்கள் போல் துடிதுடித்து துஞ்சுவதை தினம் பார்த்தும் கேட்டும் இன்னும் சுதேசிக் கைத்தொழிலை ஆதரிக்காமல் இருப்பது முறையோ? தருமந்தானோ? நீதியோ?

மாதர் மனதுவைத்தால் சுதேசியம் இல்லத்து மட்டுமல்ல எங்கு பார்த்தாலும் இலங்கும். நம் சகோதரிகள் இந்த ஒரு சிறு தொண்டைச் செய்ய முன்வர வேண்டியது அத்தியாவசியம். இந்த தேசத்தில் பிறந்த ஒவ்வொருவருடைய முக்கிய வேலையும் சுதேசியத்தை ஆதரிப்பதாகும். எனவே தாயைக் கொல்லும் பஞ்சத்தை தடுக்க முயற்சி செய்யும் வனிதையர் யாவரும் நாட்டுத் தொழில்களின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும், குடிசைத் தொழிலின் விருத்தியிலும் போதிய சிரத்தை எடுத்து அவைகளை புனருத்தாரணம் செய்யவேண்டும்.

# ஸ்ரீதனம்

ஸ்திரீகள் சொத்துரிமை ஒரு பரந்த பிரச்சினையாகும். ஹிந்து ஸ்திரீகளுக்கு சொத்து பாத்தியதை மிகவும் குறைவு என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அக்குறைவுகள் நீங்கி நங்கையருக்கும் ஆடவர்களுக்குச் சரிசமமாக பொருளாதார உரிமைகள் கொடுக்கப்படவேண்டும் என்று ஸ்திரீகளும், சீர்திருத்தக்காரர்களும் இன்று கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இந்நிலையில் இந்தப்பெரிய பிரச்சினையின் ஒரு அம்சமாகிய ஸ்ரீதனத்தைப் பற்றி நாம் கவனிப்போம்.

ஸ்ரீதனம் அல்லது ஸ்திரீதனம் என்றால் ஸ்திரீகளின் பிரத்தியேக சொத்து, செல்வம் என்பதாகும். அதாவது அந்த சொத்துக்களை யுடையவளுக்கு அவற்றின் அனுபோக கிரயவிக்கிரய பாத்தியதைகள் யாவும் பூரணமாக இருக்கின்றன. ஸ்ரீதனத்தை ஒருமாது தனதிஷ்டப்படி விற்கலாம். யாருக்கு விருப்பமோ அவர்களுக்கு இனாமாக அளிக்கலாம். அதன் வருமானத்தை தன்னிஷ்டப்படி செலவு செய்யலாம். அது விஷயத்தில் கட்டின கணவன்கூடத் தலையிட முடியாது. ஒரு ஸ்திரீ பரிபூரண பாத்தியதையுடன் ஆண்டு அனுபவித்து அளிக்கக்கூடிய சொத்துகளுக்கும், பொருள்களுக்கும் ஸ்ரீதனம் என்று பெயர். ஒரு ஸ்திரீ தன் சொத்துக்களில் எவற்றில் சர்வ உரிமை கொண்டாட முடியுமோ அவை ஸ்திரீதன சொத்துக்களாகும்.

இந்த ஸ்திரீதனம் என்பது எப்பொழுது யாரால் ஆரம்பிக்கப்பட்டுக் கையாளப்பட்டு வந்ததென்பதுபற்றி பலவித அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. இதைப்பற்றி ஆராய்ச்சி செய்த சட்ட நிபுணர் ஹென்ரி மெயின் என்பவர் ஸ்ரீதனம் ஆதியில் ஆரியர்கள் தான் கைக்கொண்டிருந்தார்கள் என்றும், கல்யாணம் செய்து கொள்ளுமுன் மாப்பிள்ளையால் பெண்ணுக்குக் கொடுக்கப்படும் (பெண் விலை—Bride price) பரிசத்தில் பாதி பெண்ணுக்கு சர்வ உரிமையுடன் வழங்கப்பட்டதென்றும் அதுவே ஸ்ரீதனம் என்றும் கூறுகிறார்.

"பெண்ணுக்கு சாந்தி அக்னிக்கு முன்னும், ஊர்வலத்திலும், அவளிடத்து பக்ஷமுள்ளவர்களாலும், அவள் தந்தை, தாய், சகோதரர்களாலும் இனாமாகக் கொடுக்கப்பட்ட பொருள்கள் ஸ்திரீயின் தனமாகும்" என்று மனு கூறுகிறார். இதை யஞ்ஞவல்கியர் வெகு விரிவாகக் கூறியிருக்கிறார். ஒரு ஸ்திரீக்கு கல்யாணத்துக்கு முன்னரும், பின்னரும் தாய், தந்தையர், சகோதரர்கள், இதர சுற்றத்தார்களால் அளிக்கப்படும் பொருள்களும், அவள் பெற்ற வதுசுல்கமும் அவளுடைய ஸ்ரீதனமாகுமென்று யஞ்ஞவல்கியர் மனுவின் பாகுபாட்டை விரிவுபடுத்திக் கூறுகிறார். ஸ்ரீதனத்தைப்பற்றி வியாக்கியானம் செய்ய முற்பட்ட விக்னேஸ்வரர் தனது மீதாக்ஷரத்தில் பிதுரார்ஜிதம், பாகசொத்துக்கள் முதலியனவும் ஸ்திரீக்கு வந்து சேருமானால் அவைகளும் ஸ்திரீதனத்தைச் சார்ந்தவைகளே என்று கூறுகிறார். ஸ்ரீதனத்தைப் பற்றி பரந்த நோக்கத்துடன் விரிவாக எழுதிய விக்னேஸ்வரரின் பாகுபாடே மிகவும் சிறந்ததும் நியாயமானதும் ஆகும். அவரது வியாக்யானத்தில் குறிப்பிட்டுள்ள இனங்கள் எல்லாம் ஸ்ரீதனத்தில் சேர்க்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுமாயின் அதுவே எவ்வளவோ நன்மை பயக்கும். சென்னை ஹைகோர்ட் நீதிபதிகள் ஒரு வழக்கில் தீர்ப்புக் கூறும்போது விக்னேஸ்வரரின் பாகுபாட்டை ஒப்புக்கொண்டு அதை ஆதரித்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் 1912-ம் வருஷம் ஒரு வழக்கில் முடிவு கூறும்போது பிரீவி கௌன்ஸில் இந்த சென்னை முடிவை நிராகரித்துவிட்டது. அதனால் முற்போக்குக்கும் ஸ்திரீகள் சொத்துரிமைகளுக்கும் தடை ஏற்பட்டது. இதை ஆதாரமாகக்கொண்டு சில சுயநலமிகள் சூத்திரங்களுக்கும் வியாக்கியானங்களுக்கும் குறுகிய அர்த்தம் கற்பிக்கிறார்கள். இது விரும்பத்தக்கதல்ல.

தற்சமயம் ஸ்ரீதனம் என்பது என்ன என்று திட்டமாகக் கூறமுடியாதபடி பலவித சட்ட நிபுணர்களிடம் பலவாறான அபிப்பிராயபேதங்களிருந்து வருகின்றன. ஒரு மாகாணத்தில் ஓர் விதமுறை, இன்னொரு மாகாணத்தில் வேறு ஒரு முறை அமுலிலிருந்து வருகிறது. ஒழுங்குபடுத்தப்படவில்லை. ஒரு சொத்து ஸ்ரீதனமா இல்லையா என்று திட்டம் செய்ய அச்சொத்து எந்த சந்தர்ப்பத்தில், எந்த பந்துவால் ஒருவளுக்கு அளிகப்பட்டது என்று முதலில் தெரியவேண்டும். கல்யாணத்துக்கு முன்னரா அல்லது பின்னரா என்று பார்க்க வேண்டும். அவள் கன்னிகையா, விதவையா, சுமங்கிலியா என்பதையும் பொருத்திருக்கிறது. சொத்தின் தன்மையையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஸ்தாவர சொத்தா சங்கம சொத்தா என்று கவனிக்க வேண்டும். சில இடங்களில் ஸ்திரீகளுக்கு எவ்வித வழியில் கிடைத்திருந்த போதிலும் ஸ்தாவர சொத்துகளில் பூரண உரிமை யில்லை யென்றும் அதை ஸ்ரீதனமாக சாதாரணமாகக் கருதக்கூடாதென்றும் நினைக்கிறார்கள். தீவிரவாதிகள் ஸ்ரீதனத்தில் ஸ்திரீகளுக்குக் கிடைக்கும் பிதுரார்ஜித சொத்துக்கள் பாகப்பொருள்கள் எல்லாம் சேர்ந்தனவே என்று கூறுகிறார்கள். வேறு சிலர் இந்த இனங்களை ஸ்ரீதனத்துடன் சேர்க்கக்கூடாதெனஅபிப்பிராயப் படுகிறார்கள். ஒரு பெண்ணிடமிருந்து வாரிசாகப் பெற்ற சொத்துக்களை ஸ்திரீ தன்னிஷ்டப்படி செய்யலாம். ஆனால் ஒரு ஆடவனிடமிருந்து கிடைக்கப்பெற்ற சொத்தில் அவளுக்குப் பூரண பாத்தியதை இல்லை யென்றும் சிலர் கூறியிருக்கின்றனர். எந்த எந்த இனங்கள் ஸ்ரீதனத்தில் சேர்ந்தவைகள், எவைகள் இல்லை என்பதைப்பற்றி மாறுபட்ட அபிப்பிராயங்களும், நீதிமன்ற முடிவுகளும் இருக்கின்றன. ஒரு சிலர் ஸ்திரீகள் தாங்களாகவே கன்னிப்பருவத்திலோ, சுமங்கிலியாக இருக்கும்போதோ, அன்றி அமங்கிலியான பின்னரோ சம்பாதித்த சொத்துக்கள் ஸ்திரீதனமாகக் கருதப்பட வேண்டும் என்று கருதுகிறார்கள். வேறு சிலர் கல்யாணமான பின் அவள் சுயமாக சம்பாதித்தாலும் அதில் அவள் உரிமையைத் தன் கணவனுடன் கூட்டாகவே அனுபவிக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

இவ்வாறு ஒருவித அங்கீகரிக்கப்பட்ட பாகுபாடு இல்லாமையால் ஸ்ரீதன விஷயம் மிகச் சிக்கலான நிலையில் இன்று இருந்து வருகிறது. இதை இவ்வாறே வழவழா

வாக விட்டிருத்தல் ஸ்திரீகளின் நன்மைக்கு நல்லதல்ல. தகுந்த நிபுணர்கள் ஒன்று கூடி இந்தப் பிரச்சினையைப் பற்றி நன்கு ஆராய்து எந்த எந்த விதங்களில் இப்பொழுதிருக்கும் சட்டங்களைச் சீர்திருத்த வேண்டுமோ அப்படிச் சீர்திருத்தி எல்லா அம்சங்களையும் தெளிவுபடச் செய்ய வேண்டும். கூடிய வரையில் இந்து சமூகம் பூராவும் இது விஷயத்தில் முற்போக்கான கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட சட்டங்களைக் கையாளும்படி செய்ய வேண்டியது கிளர்ச்சிகள் செய்துவரும் ஆண் பெண் இருபாலாரின் கடமையாகும்.

இன்று எல்லாமாகாண சட்டசபைகளிலுமுள்ள ஸ்திரீ பிரதிநிதிகள் ஒன்று கூடி, இது போன்ற சமூக சீர்திருத்த விஷயங்களைப் பற்றி விவரமாக ஆராய்ந்து நிபுணர்களின் உதவிகொண்டு சட்டங்களை எழுதி, அவைகளை சட்ட சபைகளில் புகுத்தி ஆதரவுதேடி நிறைவேற்றி கூடிய விரைவில் அமுலுக்குக் கொண்டு வரும் மார்க்கத்தைத் தேடுமாறு நாம் கேட்டுக் கொள்ளுகிறோம். நம் சகோதரிகளுக்கு எவ்வளவுக்கெவ்வளவு பொருளாதார உரிமைகள் கிடைக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களின் அந்தஸ்தும், கௌரவமும், மரியாதையும் உயரும் என்பதை வனிதாரத்தினங்கள் உணர்ந்து அவைகளைப் பெறும் மார்க்கங்களைத் தேடுவார்களாக. முயற்சி திருவினையாக்கும். அவர்களது நியாயமான கோரிக்கைகளை வழங்க யாவரும் மறுக்க மாட்டார்கள். வெற்றி நிச்சயம்.

## பர்தா வேண்டாம்

ஹங்கேரியைச் சேர்ந்த ஹன்னா மைக்ஸ் என்ற சீமாட்டியை அல்பானியா ஜோகூ மன்னர் காதலிக்கிறார் என்ற செய்தியை முன்னரே வெளியிட்டிருக்கிறோம். அவர், "நான் அல்பானியாவின் இராணியாக வர வேண்டுமானால், நூற்றாண்டுக் கணக்காக அங்குள்ள முஸ்லிம் ஸ்திரீகள் பர்தா அணியும் வழக்கத்துக்கு ஆட்படுத்தப்பட்டிருப்பதை ரத்து செய்ய வேண்டும். அதனுடன் ஏக தாரத்துடன்தான் ஆண்கள் இருக்கவேண்டுமென்பதையும் கட்டாயச் சட்டமாக்க வேண்டும்" என்று நிபந்தனைகள் விதித்துவிடவே, அதற்கிணங்கித்தான் ஜோகூ மன்னர் நாம் ஏற்கெனவே அறிவித்துள்ளபடி அல்பானிய முஸ்லிம் ஸ்திரீகள் பர்தா அணிய வேண்டுமென்பது கட்டாயமில்லை என்று உத்தரவிட்டார். அல்பானியாவில் சுமார் ஐந்து லக்ஷம் முஸ்லிம் பெண்மணிகள் இருக்கின்றனர். அல்பானியப் பெண்மணிகள் பர்தா அணியும் வழக்கம் பல நூற்றாண்டுக் காலமாக அங்கிருந்து வந்தது. இப்போது சில மாதங்களுக்கு முன் ஜோகூ மன்னர் அதை ரத்து செய்து விட்டார்.



# கதம்பம்

## இங்கிலாந்தில் கோடீஸ்வரர்கள்

சென்ற வருஷம் இங்கிலாந்தில் 824 கோடீஸ்வரர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் வருஷ வருமானம் 30000 பவுன்களுக்கு மேற்பட்டே. 75000 பவுன்களுக்கு மேலும், 100,000 பவுன்களுக்கு உட்பட்டும் வருஷ வருமானம் உள்ளவர்கள் 60 பேர்களிருக்கிறார்கள்.

... ... ...

## ஜிப்ஸி நியாயம்

புகாரெஸ்ட் நகரில் ஒரு ஜிப்ஸி தன் பெண்ணை மணக்க விரும்பிய மூன்று காதலர்களிடமும் 20 பவுன் வீதம் வாங்கிக்கொண்டு பெண்ணையும் கூட்டிக் கொண்டு ஓடிவிட்டானாம். மூவரும் வழக்குத் தொடர்ந்ததில் அவனுக்கு சவுக்கடி தண்டனையும் பணத்தை வாபஸ் செய்யும்படியும் உத்திரவானது. பணம் கொடுக்க அவனுக்கு வழியில்லை. உடனே பெண் ஏலம் போடப்பட்டு பணம் கொடுத்தவர்களுக்குப் பணம் செலுத்தப்பட்டு ஏலம் எடுத்தவன் அவளை மணந்து கொண்டான்.

... ... ...

## தலை வாங்கும் சிந்தாமணிகள்

பிரிட்டிஷ் நியுகினியாவில் பெண் தன்னை மணக்க விரும்புபவன் ஒரு மனிதனையாவது கொன்றுவிட வேண்டும் என்று கூறுகிறாள். அதற்கு அடையாளமாக இறந்தவன் விரலை அவளுக்குப் பரிசாகத் தர வேண்டும். அதை அவள் விரலில் அணிந்து கொள்ளுகிறாள்.

## புஸ்தகம் விற்கும் அரசர்

ருமேனியா தேசத்து அரசர் கேரோல் ஒரு புஸ்தகக் கடையை தன் அரண்மனைக்கு எதிரில் திறந்து வைத்துத்தானே நடத்துகிறார். இருபத்திரிகைகளும் பிரசுரிக்கிறார். அவைகளில் அவரும், அவர் புதல்வரும் வியாசங்கள் எழுதிவருகிறார்கள்.

... ... ...

## ஆப்பிள்

ஆகாரத்துக்குப்பின் ஒரு ஆப்பிள் பழமாவது, ஆரஞ்சாவது சாப்பிட்டுவந்தால் பல் வெகு சுத்தமாக இருக்குமென்று லண்டன் ராயல் டென்டல் ஆஸ்பத்திரி டாக்டர் அலெக்ஸாந்தர் கிரிகர் சொல்லுகிறார். மிருதுவான உணவு பற்களை அசுத்தம் செய்கின்றது.

... ... ...

## ஸ்திரீ ராஜதந்திரி

சைனா தேசத்தில் ஸ்தானீக இலாக்காவில் உத்தியோகம் கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்திரீ மிஸ் அன்னா ஏ. எல். ஹாவாங். இவர் லண்டனிலுள்ள சீன ஸ்தானிகருக்கு மூன்றாவது காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

... ... ...

## 4000 மைல்கள் நடந்த நங்கையர்

ரஷ்யாவைச் சேர்ந்த ஐந்து இள நங்கையர் தங்கள் சொந்த ஊராகிய உலான் உதே (சைபீரியாவின் தலைநகர்) யிலிருந்து ரஷ்யா தேசத்துத் தலைநகரமாகிய மாஸ்கோவுக்கு ஸ்கேட் பண்ணிக் கொண்டே (சருக்குக்கட்டையிலேயே) போய்ச்சேர்ந்து

விட்டார்கள். இப்படி சருக்கிச் செல்வது இதுதான் அதிக தூரம். யூரல் மலையில் புயற்காற்று, பனிமழை முதலியவற்றை இப்பெண்கள் சகித்துத்தப்பினர்.

... ... ...

## பெருச்சாளி பால்

அமெரிக்காவில் சீமைப் பெருச்சாளியின் பாலை உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள். அதன் பால் கொழுப்பு சத்திலும், வலுவு கொடுப்பதிலும் பசும்பாலை விட மேலானது என்று சிலர் கருதுகிறார்கள். இந்தப்பால் கறக்கவும் ஒருவித யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

... ... ...

## குள்ள டிரைவர்

இங்கிலாந்திலுள்ள மோட்டார் ஓட்டிகளுள் மிகவும் குள்ளமானவர் நாலு அடி உயரமுள்ளவர். வயது பதினெட்டு. இருந்தாலும் கார் ஓட்டுவதில் சமர்த்தர்.

... ... ...

## மண்டை ஓடு மியூஸியம்

நியூயார்க் நகரில் இயற்கைப் பொருட்காட்சி சாலையில் (Natural History Museum) 13,000 மண்டை ஓடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

... ... ...

## வயறு வாய்

சிகாகோ நகரில் ஒரு சிறுவன் உணவருந்தத் தன் வாயை உபயோகப்படுத்துவதில்லை. அவன் ஆகாரம் வயிற்றின் மூலமே சாப்பிடுகிறான். 1935ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஏதோ விஷம் அருந்தியதற்காக சிகிச்சைக்கு ஆஸ்பத்திரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டான். அது முதல் அவன் வாய் அடைபட்டுப் போய் விட்டது. எனவே அவன் வேறுவழியில் சாப்பிடுகிறான்.

## மணியடிக்கும் டயர்

இங்கிலாந்தில் மோட்டாரின் சக்கரங்களில் காற்றுக் குறைந்து விட்டால், அது மோட்டார் ட்ரைவருக்குத் தெரிவதற்காக புதுவிதமான டயர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் காற்றுக் குறைந்தால் மணி அடிக்கின்றன.

... ... ...

## காகித மிஷின்

காகிதம் செய்யும் யந்திரங்கள் நிமிஷம் ஒன்றுக்கு ஒரு மைல் நீளம் காகிதம் உற்பத்தி செய்கின்றனவாம்.

... ... ...

## ரப்பர்

ரப்பர் மரங்களிருந்து பால் எடுக்கப்பட்டு ரப்பர் செய்யப்படுகிறது. ஆனால் சிலர் சூரியகாந்திப்புஷ்பத்திலிருந்து ரப்பர் செய்யும் புதுவழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

... ... ...

## காதலுக்கு கிரீடம் பலி

ருமேனியாவின் வாரீசு இளவரசர் ப்ரின்ஸ் நிக்கொலஸ் தனது சிம்மாசன உரிமையைத் துறந்து விட்டார். அவர் சாதாரண வகுப்பு மங்கை சாலி என்ற மாதை மணந்தது சரியல்லவென்றும், அவ்விவாஹத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் மந்திரிசபை வற்புறுத்தியதே இளவரசரின் முடி துறவுக்குக் காரணம்.

... ... ...

## வாரம் 8,755 பவுன் சம்பளம்.

அமெரிக்காவில் மேவெஸ்ட் என்ற சினிமா நடிகை வாரம் 8,755 பவுன் சம்பளம் பெறுகிறாள். ஆனால் அவள் வருடத்துக்கு எட்டு அல்லது பத்து வாரங்கள் தான் வேலை செய்கிறாள். நல்ல கொள்ளை!.

# திலகவதி

## "மைதிலி"

'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்று ஔவையார் கூறியுள்ளவாறு ஆண் பெண் இரு பாலருள்ளும் பலர் சிவனடியாராய் சிறப்பு மிகுந்து விளங்குகின்றார்கள். இவ்விருவகையினருள் ஓர் திலகமாய் விளங்கியவள் திலகவதி என்னும் பெண்மணி. திருமுனைப்பாடியில் சிவனடியாருள் சிறந்தவர் என கருதப்பட்ட புகழனார்க்கும் அவர் மனைவி மாதினியார்க்கும் தவப் புதல்வியாயவதரித்தவள் திலகவதி. மெய்த் தொண்டின் மேன்மையை நன்குணர்ந்தவள். பரமேஸ்வரனிடத்தில் குன்றயாவன்பு பூண்டவள்.

பால்மணமாறாத பருவத்திலேயே பாவையாம் திலகத்திற்கு நேர்ந்த கஷ்டங்கள் பல. தாயையும் தந்தையையும் இழந்தனள். ஒரே தம்பியை வளர்த்துவரும் பொறுப்பைத் திலகம் ஏற்றுக் கொண்டாள். 'பட்டகாலிலேயே படும்' என்றவாறு திலகத்திற்கென்று கணவராக நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையார் என்னும் ஆண்டகை தன்னரசனுணையின்படி பகைவர்மேல் தண்டெடுத்துச் சென்று போர்க்களத்தில் தன்னுயிரை நீத்தார். தொடர்ந்துவரும் துன்பங்களைச் சகியாத மெல்லியலாள் தனக்கென்று நிச்சயிக்கப்பட்ட கணவன் இறந்து பட்டமையின் தானும் உடன் கட்டையேற நிச்சயித்தாள்.

"என் பெற்றோர் என்னைக் கலிப்பகையாருக்கே மணம்செய்து கொடுக்க நிச்சயித்தார். ஆகையால் அவரே என்னுயகராவர். அவர் இறந்து பட்டமையின் யானும் உடன் கட்டையேறலே முறை" என்று தீர்மானித்தாள் திலகம். என்னே கற்பின் திண்மை. தன்னுள்ளத்தை ஒருவர்க்களித்தபின் மீட்டும் அதை வேறொருவரிடம் மாற்றுவது அசாத்தியம். மலர்ந்த மல்லிகை மறுமுறையும் மலருமா? காதலென்பது ஒருவருக்கே அளிக்கக்கூடிய அரிய செல்வம்.

தம்பி ஒருவனை அநாதியாக விட்டுவிட்டு உடன் கட்டையேறல் முறையல்ல. திலகவதியின் தீர்மானத்தைக் கேட்டார் திலகத்தின் சகோதரன் மருணீக்கியார். திலகத்தின் பாதங்களில் வீழ்ந்து, "அன்னையும் ஐயனுமகன்றபின் உம்மையே நான் ஆதரவென்று நம்பியிருக்க, தாம் என்னைத் தனியே விட்டுச் செல்லல் முறையல்ல. அவ்வாறு செல்லத் துணிவீரேல் உமக்கு முன் யான் உயிர் நீப்பேன்" என்றார் மருணீக்கியார். தம்பியினிடம் வைத்த பேரன்பினால் தன் எண்ணத்தை மாற்றினாள் திலகம். ஆயினும் உலக விஷயங்களிலும் ஆடையாபரண ஆடம்பரங்களிலும் தன் எண்ணத்தைச் செலுத்தாது பரகதியை அடைவதற்குரிய வழியைத் தேடுவாளாயினாள். உலக வாழ்விலும் நிலையா வின்பத்திலும் நினைவு கொள்ளாது, வினைப்பயனை நீக்கி, அடைதற்கரிய பதவியை அளிக்கும் மேலான தவவாழ்க்கையை மேற்கொண்டாள் திலகம்.

அவள் புரிந்த தவம் வீடு நீங்கி காடடைந்து உணவின்றி மெய் வருந்தச் செய்யும் தவமல்ல. தன்னிடமுள்ள செல்வத்தை தரும காரியங்களில் செலவிட்டு எந்நேரமும் எங்கும் நிறைந்த பரம்பொருளைச் சிந்தித்த வண்ணம், சிவனடியார்க்குத் தொண்டு புரிவதே மேலான தவம். அறிவிலுயர்ந்த திலகம் இத்தத்துவத்தை நன்கு உணர்ந்திருந்தாளாதலின் சீரிய இச்செய்கையையே முறைவழுவாது புரிந்து வரலாயினள்.

திலகவதியின் தம்பி மருணீக்கியார் பல நூல்களையும் வேதாகம சாஸ்திரங்களையும் நன்கு கற்றிருந்தும் விதி வசத்தாலும், இறைவனதருளின்மையாலும் மருள் உண்டாக்கும் சமணமதத்தைத் தழுவினார். சமண நூல்களைப் பயின்றார். சமண பள்ளியில் ஓர் சிறந்த ஸ்தானத்தைப் பெற்றார். ஆயினும் ஞானத்தை ஊட்டும் திருநீற்றைத் துறந்ததன் பயனாக அஞ்ஞானமென்னும் இருளில் உழல் வாராயினர். அஞ்ஞானத்தினால் சிறிது இன்பம் ஏற்படினும் அவ்வின்பம் நிலையானதல்ல. மேலும் அவ்வின்பம் பின்வருந் துன்பத்திற்கு ஒரு தூதனைப் போன்றதாம். ஆகையால் அஞ்ஞானவின்பத்தில் மூழ்கிய மருணீக்கியார் அவ்வின்பத்தின் உண்மை நிலையையும் அதன் துன்பங்களையும் அறியாதவராய்ச் சமண மதத்தில் சலியாப் பற்றுடன் வாழ்ந்து வரலானார்.

தம்பியின் செயல் நோக்கி மனமுடைந்தாள் திலகம். இகபர சுகங்களுக்கும் மேலான ஓர் பதவியை அளிக்கும் சைவ சமயத்தைத் துறந்து, 'மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு' என்று திருஞான சம்பந்தர் சிறப்பித்துக் கூறியத் திருநீற்றைத் துறந்து வலியச் சென்று வான் பேரிருளில் சிக்கி வழி தெரியாது அவ்விருளையே சதமென நம்பி மருள் நீங்கப் பெறாது நிற்கும் சகோதரனை நல்வழியில் திருப்ப விரும்பினாள் திலகம்.

அடியார்க் கரியது எது? சர்வஜீவ தயாபரனான சங்கரனைத் துதித்தாள் திலகம்.

"என்னை
ஆண்டருளு நீராகிலடியேன் பின்வந்தவனை
ஈண்டுவினை பரசமயக் குழிநின்று மெடுத்தருள
வேண்டும்"

என்று வேதங்கள் மொழிந்த பிரானை வேண்டினாள் திலகவதி. ஈஸ்வரனுடைய அன்பு தன் இனத்தவர்க்கும் கிடைக்க வேண்டுமென்று ஒருவன் விரும்பினால் அவன் தன்னை ஈஸ்வரனோடு தியானமென்னும் கயிற்றினால் பிணைத்துக் கொள்வானாகில் அவனைச் சார்ந்தோரும் சர்வேஸ்வரனருளுக்குப் பாத்திரராவர் என்று பெரியோர் கூறிய வண்ணமே திலகம் தன் தம்பியை ஆட்கொள்ளுமாறு சிவபிரானை வேண்டினாள்.

அன்பெனுமையினால் தன் அடியாரால் வசீகரம் செய்யப்பட்ட சிவபெருமான், திலகவதியின் வேண்டுகோளுக் கிணங்கி அஞ்ஞானத்தைப் போக்கும் அரிய மருந்தாகிய சூலை நோயை மருணீக்கியாருக்கு வருவித்தார். திடீரென்று உண்டான அருள் நிறைந்த கொடிய நோயினால் துடித்தார் மருணீக்கியார். சமணர்கள் தங்களால் இயன்றமட்டும் அந்நோயைத் தீர்ப்பதற்குப் பலவித உபாயங்களைச் செய்தார்கள். அத்தனளித்த நோயை அவனன்றி வேறு யாராலும் நீக்கமுடியாது. சமணர்களின் முயற்சி வீணாக





மருணீக்கியாரின் மனதில் இனி உதிக்கப் போகும் ஞானசூரியனின் வரவை அறிவிக்கும் ஞானோதயம் திகழ சைவபிழும்பாகிய தன் சகோதரியிடம் செய்தியைக் கூற ஆளை அனுப்பினார்.

தம்பியின் துன்பம் கேட்டு வருந்தினாள் திலகம். ஆயினும் சமணபள்ளியை அணுக மனமில்லாதவளாய்த் தம்பியைத் தன்னிடத்தே வருமாறு சொல்லி அனுப்பினாள். ஞானமுதயமாகின மனத்தினராய் மருணீக்கியார் தமக்கையை வந்து கண்டவுடன் தன் மனதிலுள்ள இருள் அறவே நீங்கப்பெற்றுச் சிவனாருளுக்குப் பாத்திரவானானார். திலகவதி தன் கரங்களால் புனிதமான திருநீற்றை மருணீக்கியாருடலில் பூசவே, அவரை வருத்திய கொடிய நோய் நீங்கினது. சகோதரியினருளால் அஞ்ஞானம் நீங்கப்பெற்று சிவபக்தியில் சிறந்து, சைவ சமயாசாரியருளொருவராய்த் திகழ்ந்து, திருநாவுக்கரசராய் விளங்கினார் மருணீக்கியார்.

இவ்வாறு புருடனாலும் செயற்கரிய செயலாகிய மருணீக்கியாரை மதமாற்றல் என்னும் செய்கையைச் செய்து, சிவபக்தியின் பெருமையை உலகத்தாருக்கு விளக்கி பரதகண்டம் எனக் கூறப்படும் நம் பரத நாட்டிற்கோர் மணங்கமழும் திலகமாய் இன்றைக்கும் விளங்குகின்றாள் திலகவதி

## மதிப்புரை

### ப்ரஸந்நகுமாரி

ப்ரஸந்நகுமாரி என்ற பெயருள்ள ஒரு இனிய செந்தமிழ் நாடகத்தை ஸ்ரீமதி வி. ராதாமணி அம்மாள் பிரசுரித்திருக்கிறார்கள். இது பழங்கால சமூக சம்பந்தமானது. இந்நூலை வாசிக்குந்தோறும் மனதுக்கு இன்பமாயிருக்கிறது. கதைப்போக்கு வெகு அழகாக அமைந்திருக்கிறது. "சத்தியமே ஜெயம்", "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்", வஞ்சகர்கள் சூழ்ச்சிகள் பயன்படா என்னும் உண்மைகளை இந்த நாடகத்தின் மூலம் ஸ்ரீமதி ராதா நன்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். டாக்டர் வே. சாமிநாதய்யர் அவர்கள் கூறுவது போல், இந்நவீனம் " இதனை எழுதியவருடைய பரந்த பாஷா ஞானத்தையும், கற்பனா சக்தியையும், பெண்கல்வி வரவர இந்நாட்டில் விருத்தியடைந்துள்ள தென்பதையும் தெரிவிக்கின்றன." இந்நூலை ஸ்திரீ புருஷர் யாவரும் ஆதரிப்பது மன்னியில் இவ்வாசிரியை வெளியிட உத்தேசித்திருக்கும் "அபிஷேகவல்லி" "திருக்குறள் அறத்துபால் நிதர்சன வெண்பா" வென்னும் நூல்களும் வெளிவரும்படி ஊக்கமளிப்பார்களாக. "ப்ரஸந்நகுமாரி" ஒரு பிரதி விலை அணா 12. கிடைக்குமிடம், "ஸ்ரீராம நிலையம்" 28, நடுத்தெரு, மைலாப்பூர், மதராஸ்.

# சம்பங்கி புஷ்பம்

"புஷ்பலீலா"

காடுகளில் நாம் பலவித விருக்ஷங்களைக் காண்கின்றோம். ஆனால் நகரங்களிலோ வனங்களில் காணும் மரங்களில் பத்தில் ஒரு விதம் கூடக்காண முடியாது. நாகரிகத்தில் மிகுந்து கிடக்கும் நகர வாசிகளின் மனதைக்கவரும் தன்மையுள்ள புஷ்பச் செடிகள் அநேகமாகக் காடுகளில் தான் காணப்படுகின்றன. அம்மாதிரியான மலர் மரங்கள் சிறிது சிறிதாக நகரங்களிலும் கொண்டு வரப்பட்டுப் பயிர் செய்யப்படுகின்றன.

அப்படி ஆரண்யங்களில் வளரும் விருக்ஷங்களில் சிறந்தது சண்பகமரமே. அதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். இதற்கு மரசம்பங்கி யென்றும் பெயர். இப்பொழுது நகரங்களில் சாலைகளிலும், வீடுகளிலும், தோட்டங்களிலும் சம்பங்கி பயிராக்கப்படுகிறது. இது அதிக உயரமாக இருக்காது. மித சீதோஷ்ணமான பிரதேசங்களில் ஓங்கிவளருவதும் உண்டு. அங்கு புஷ்பமும் அதிகமாகப் பூக்கும். இம்மரங்கள் ஆந்திரதேசத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. விசேஷமாக விசாகப்பட்டணத் தருகிலிருக்கும் சிம்ஹாசலத்தில் எதேஷ்டமாக இவ்விருக்ஷங்கள் காணப்படுகின்றன. சம்பங்கிப் புஷ்பங்களை வாழைப்பட்டைகளில் கட்டி விசாகப்பட்டணத்துக்கும், இன்னும் அருகிலுள்ள இதர ஊர்களுக்கும் அனுப்பி வியாபாரம் நடத்துகிறார்கள். வால்டேர் ரயில்வே ஸ்டேஷனில் இவைகள் வந்திறங்கிய மறு நிமிடமே வாரிக்கொண்டு போகப்படும் காட்சியை இன்னும் நாம் காணலாம். வந்த உடனேயே எல்லோரும் ஆவலுடன் வாங்கிச்சென்று விடுகிறார்கள். ஜனங்களுக்கு இப்புஷ்பத்தின் மீதிருக்கும் ப்ரீதியைக் காட்டவேறு சாக்ஷியம் வேண்டியதேயில்லை.

பெங்களூர், மைசூர், பூனா, மலையாளம் முதலிய இடங்களின் சீதோஷ்ண ஸ்திதி இம்மரங்களின் வளர்ச்சிக்குகந்ததாக இருப்பதால் அவ்விடங்களில் சம்பங்கி மரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. பெங்களூரில் பசவங்குடியிலிருந்து மல்லேஸ்வரம் வரை ரோடு பூராவும் இருபுரங்களிலும் இந்த விருக்ஷங்கள் வரிசையாக வைத்துப் பயிராக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் நன்றாகப்பூத்துக் காய்த்து செழித்து நிற்பது கண்களுக்கோர் காட்சி விருந்தாகும். சுவர்ணமயமான மலர்களுடன் விளங்கும்போது அவைகளிடையே போகும்போது யாவர் மனதும் குதூஹலம் அடைகிறது. இந்த பாட்டையை சம்பங்கிரோடு என்று ஜனங்கள் கூறுகிறார்கள்.

இப்புஷ்பங்கள் பொன்னிறமாக இருப்பதால் தான் சமஸ்கிருத பாஷையில் இம்மலருக்கு "சுவர்ணபுஷ்பம்," "காஞ்சன மலர்" "ஹேம குசுமம்" என்ற பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆங்கிலத்தில் இதற்கு சுவர்ண புஷ்பச்செடி (Gold flower tree) என்று பெயர். வைத்திய சாஸ்திரத்தில் சண்பகம், சாம்பேய ஹேம புஷ்பகம், உக்ரகந்தா, குசுமாதிபா, விசுர புஷ்பம், குசுமாதி ராஜா, புண்யகந்தா, சுவர்ணபுஷ்பா, பிருங்கமோகினி, சுபகா, சுரபி, சிரகந்தா, அதிகந்தா, சுகுமாரா, வனதீபா என்ற பெயர்கள் சம்பங்கியையே குறிக்கின்றன.

கவிகளும், நூல்வல்லோர்களும் சண்பகப்புஷ்பத்தை நங்கையரின் நாசிக்கு (மூக்கு) ஒப்பிட்டுப் பலகாவியங்களில் கூறியிருக்கிறார்கள். கற்றோர், மற்றோர் எல்லோரின் மனதையும் தன் வ்யப்படுத்தி விட்டது. பலவித மருந்துகள் செய்வதற்குப் பயன்படுவதால் வைத்தியர்களும் இந்நறுமலரைப் போற்றிப் புகழ்கிறார்கள். பார்வைக்கு அழகாக் பொன்னிறமாகத்திகழ்வதால் நாரீமணிகள் அதைத் தங்கள் கூந்தலில் வைத்து இன்புறுகிறார்கள். இம்மலர்களின் உதவியினால் செய்யப்படும் வாசனைத்திரவியங்களை விற்பனை செய்து வியாபாரிகள் நல்ல லாபம் அடைகிறார்கள்.

சண்பக மரத்தின் ஒவ்வொரு உருப்புகளும் ஏதாவது ஒருவித மருந்து செய்ய உதவுகிறது. இம்மரத்தின் வேர், பட்டை, இலைகள் அனைத்தும் வைத்தியர்களுக்கு உபயோகப்படுகின்றன. இதன் வேர் பேதி மருந்தாக உபயோகப்படுகிறது. புஷ்பம் தேக ஆரோக்கியத்தையும், பலத்தையும் தருகிறது. பட்டையைப் போட்டு சுரத்துக்குக் கஷாயம் செய்து சாப்பிட்டு வந்தால் சுரம் நீங்கும். இதன் இலைகளுக்கும், துளிர்களுக்கும் கர்ப்பப்பையில் உள்ள எல்லாவிதமான ரோகங்களையும் கண்டிக்கும் சக்தி இருக்கிறது. புண்களுக்கும் இதன் இலையை வாட்டி வைத்துக் கட்டினால் புண்ணிலுள்ள பூச்சிகள் செத்துப்போய் புண் ஆறிவிடும். இதன் விதைக்கும் கிருமிகளை நசிக்கச் செய்யும் குணமிருக்கிறது.

## கஷாயம்

சண்பகப் புஷ்பத்தின் கஷாயம் அஜீர்ணம், மலக்கட்டு, ஜுரம் முதலிய வியாதிகளைப் போக்கடிக்கும். வேளைக்கு அரை அவுன்ஸ் முதல் இரண்டு அவுன்ஸ் வரையில் சாப்பிடலாம். கனோரியா என்னும் ஸ்திரீ சம்பந்தத்தினால் ஏற்படும் வியாதிக்கு இக்கஷாயம் கைகண்ட ஔஷதம்.

## லேகியம்

இப்புஷ்பங்களை ஆலிவ் எண்ணெயுடன் கலந்து நன்றாய் அரைத்து வைத்துக் கொண்டு சில நோய்களுக்கு உபயோகப்படுத்தலாம். இந்த மருந்தை தலைவலிக்குப் பத்துப் போட்டால் எவ்வித தலைவலியும் நின்று போகும். கண் எரிச்சல், சிவந்திருத்தல், தண்ணீர் வடிதல் முதலியவைகட்குக் கண்களைச் சுற்றி புஷ்பங்களை மேற்சொன்னவாறு நன்றாய் நேராய் அரைத்துப்பத்துப் போடவேண்டும். மூக்கில் வலி, துர்கந்தம், சுவாசம்விட முடியாதிருத்தல் போன்ற கோளாறுகளையும், வாதசம்பந்தமான நோய்களையும் கண்டிக்கும் தன்மை இப்புஷ்பங்களுக்கு உள்ளது. சம்பங்கித் தைலத்தை உபயோகித்தால் அநேகவித வாதநோய்கள் நீங்கும்.

சம்பங்கிப்பட்டையை நன்றாக உலர்த்திப் பின் பட்டுப்போல் தூள் செய்து சூரணமாகச் செய்து சுமார் பத்து முதல் முப்பது குண்டுமணி எடை அளவு சாப்பிட்டால் ஜுரங்களைக் கண்டிக்கும். இப்பட்டையைக் கஷாயம் செய்து ஜுரத்துக்கும் அஜீர்ணத்துக்கும் சாப்பிட்டால் ரொம்பவும் நல்லது.

சம்பங்கியின் வேரை அல்லது பட்டையை வெந்நீரில் அரைத்து உடைந்து போன புண்களில் தடவி வந்தால் ரணம் காய்ந்து புண் சீக்கிரம் ஆறிவிடும்.

## துளிர் சுரசம்

சம்பங்கியிலையின் ரசத்தை எடுத்து வடிகட்டி தேனுடன் கலந்து சாப்பிட்டு வந்தால் எல்லாவிதமான சூதக நோய்களும் கண்டிக்கப்படும். இதன் கொளுந்தின் சாரைக்கண்ணில் பிழிந்தால் கண்கள் குளிர்ச்சியடைவது மன்னியில் அவைகளின் பிரகாசமும் அதிகரிக்கும். கண்களை யொட்டிய நோவுகள் தீரும். பிரசவித்த ஸ்திரீகளுக்கு உண்டாகும் ஜன்னி, அலரல் போன்ற வியாதிகளுக்கு சம்பங்கி இலைகளை நன்றாக நெய்யில் வதக்கி தலையில் கட்டிவந்தால் ஜன்னி, அலரல் நீங்கும். மனதுக்கும், கண்ணுக்கும், காட்சிக்கும், உடலுக்கும் இவ்வளவு நன்மைகளைத் தரும் சம்பங்கியை நாம் நமது தோட்டங்களில் வளர்த்துப் பலன் அடைவோமாக.

# கத்தரிக்காய்

ஸ்ரீமதி ஜி. சரஸா

[போன இதழில் கத்தரிக்காய் எப்படி பயிர் செய்வது என்றும், அதற்கேற்படும் வியாதிகள் என்ன வென்பதையும், அவற்றை எப்படி நிவர்த்திக்க வேண்டு மென்றும் நான் எழுதினேன். இப்பொழுது கத்தரிக்காயின் சமையல் உபயோகங்களைப்பற்றி எழுதப் போகிறேன்.]

நாம் அநேக காய்கறிகளை அவைகள் மலிவாகக் கிடைக்கும் காலங்களிலும், அவைகள் ஏதேஷ்டமாக அகப்படும் சமயங்களிலும் வாங்கி அவைகள் கிடைக்காமல் போகும் காலங்களில் உபயோகப் படுத்துவதற்காக வத்தல் போட்டு ஸ்டாக்காக வைத்துக்கொள்ளுகிறோம். வெயிலில் காயவைத்து பிற்கால உபயோகத்துக்காக வைத்துக்கொள்ள ஹேதுவான காய்கறிகளில் கத்தரிக்காய் முக்கியமானது. இதைப்போல அவரைக்காய், வெண்டிக்காய், கொத்தவரங்காய், சுண்டக்காய், மிதுக்க வத்தல், மாங்காய் முதலியவற்றையும் வத்தல் போட்டு வைத்துக்கொள்ளலாம்.

வத்தல் போடுவதில் இருவகை இருக்கின்றன. ஒருவகை காய்கறிகளைப் பச்சையாகவே துண்டு துண்டுகளாக நறுக்கிப் போட்டுக் காயவைப்பது. மற்றொரு வழி அவைகளை உப்புப் போட்டு வேகவைத்துப் பின்னர் காயவைப்பது. சில தற்கால உணவு பயிற்சியாளரும், நிபுணர்களும் வேகவைத்துப் பின் காய வைப்பதனால் அந்தந்த கறிகளில் உள்ள சத்துப் பொருள்கள் (vitamins) மறைந்து போய் விடுகின்றன வென்றும், அவை பின்னால் உண்பதற்குத் தயார் செய்யப்படும் போது மறுபடியும் வேக வைக்கப்படுவதால் அதன் சத்து அடியோடு போய் விடுகிறதென்றும், ஆகையால் வத்தல் போட கறிகளை பச்சையாக சூரிய உஷ்ணத்தில் காய வைப்பதுதான் ஆரோக்கிய விருத்திக்கான முறை என்றும் கருதுகிறார்கள். இந்திய சீதோஷ்ண ஸ்திதி வத்தல்கள் போட்டு வைத்துக் கொள்வதற்கு ஏற்றதாகவே இருக்கிறது. சிலர் அரைவேக்காடாக வேக வைத்துக் காய வைத்தல் நலமென்று கூறுகிறார்கள்.

வத்தல் போடுவதற்குக் கத்தரிக்காய் உயர்ந்ததும், ருசியானதுமான ரகமாய் இருக்க வேண்டும். ரொம்பவும் முத்திப் போனதோ அல்லது வெம்பி அடிபட்டதோ வத்தல் போட லாயக்கில்லை. வத்தலுக்கு காயில் விதை நன்றாக முத்துவதற்கு முன், பிஞ்சாக இருக்கும் காய்களே நல்லது. கால் அங்குலம், அல்லது அரை அங்குல நீளமுமுள்ள சிறு சிறு துண்டாகக் கத்தரிக்காயை நறுக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு காலனுக்கு ¾ அவுன்ஸ் உப்புக் கலந்த **(Soduim bisulphate)** சுத்த ஜலத்தில் அந்தத் துண்டுகளை சுமார் பதினைந்து நிமிஷங்கள் வரை ஊரவைக்க வேண்டும். பின் அவற்றை எடுத்து ஒரு சல்லடையில் போட்டு ஆவியில் அரை நிமிஷம் வைக்க வேண்டும்.

இப்பொழுது இவைகள் உலர வைப்பதற்குத் தயாராக இருக்கின்றன. நம் வீடுகளில் ஸ்திரீகள் சாதாரணமாக அந்தத்துண்டுகளை, வாசலிலோ முற்றத்திலோ, அல்லது மாடி வெளிகளிலோ



தரையை விளக்குமாறு கொண்டு கூட்டி விட்டுப் பரப்பிப்போட்டு விடுகிறார்கள். இதனால் தரையில் உள்ள தூசிகள் எல்லாம் கத்தரிக்காயில் ஒட்டிக் கொள்ளுகின்றன. ஆதலால் ஒரு உயர்ந்த இடத்தில் ஏதாவது தட்டுகளில் போட்டு வைத்தால் காற்றடித்தாலும் தூசிகள் அவைகள் மீது படாது. ஒரு புறம் மட்டும் காய்ந்து மற்றப்பக்கங்கள் போதிய அளவு காயாமலிருப்பதைத் தடுக்க ஓரிருதடவைகள் அவற்றைப் புரட்டிவிட வேண்டும். அவைகள் நன்றாகக் காய்ந்து வத்தலாக எட்டு அல்லது பத்து மணி நேரம் நல்ல உஷ்ணத்தில் உலரவேண்டும். அதற்குள் அவைகள் தகுந்த பக்குவம் அடைந்திருக்கும். நூறு பவுண்டு பச்சைக்காய் வத்தலாகும்போது ஐந்து அல்லது ஆறு பவுண்டு தான் ஆகும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. அம்மாதிரி நன்றாய் உலர வைத்த வத்தல் ருசியாக இருக்குமென்று சொல்லப்படுகிறது. அது கெடவும் கெடாது.

இப்படி நன்றாகக் காயவைத்து எடுத்த வத்தல்கள் வியாபாரத்துக்காகக் கூட உபயோகப்படுத்தப் படுகிறது. வியாபாரத்துக்கு வேண்டி பத்திரப் படுத்த நல்ல டின்களில் காற்று நுழையாதபடி பேக் செய்யவேண்டும். சிலர் மறுபடியும் உலர்ந்ததை லேசாக ஆவியில் வைத்து எடுத்து அரைப்பவுண்டு, ஒரு பவுண்டு எடைச் செங்கல் மாதிரி அடித்து மறுபடி உலர்த்தி தகுந்த டின்களில் போட்டு பத்திரப் படுத்துகிறார்கள்.

இந்த வத்தல்களை உபயோகப்படுத்து முன் அவைகளை வென்னீரிலாவது, சுத்த ஜலத்திலாவது வெகு நேரம் ஊரவைக்க வேண்டும். உலர வைத்ததினால் கத்தரிக்காயில் உள்ள தண்ணீரில் 91.1 ஆவியாகப்போய் விட்டதென்பதை சமையல் செய்வோர் மறந்துவிடக் கூடாது. நன்றாய் ஊரவைத்தால்தான் கறி நன்றாக இருக்கும். அது சீக்கிரம் வேகும்.

கத்தரிக்காய் வத்தல் நம் நாட்டில் பெரும்பாலும் குழம்பு வைத்துச் சாப்பிடுவதற்கே உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. கத்தரிக்காய் வத்தலைத் தனியாகக் குழம்பு வைத்துச் சாப்பிட குழம்புக்குத் தகுந்த ஜலம், புளி, உப்பு, மிளகாய் முதலிய கலந்த குழம்பில் வத்தலைப்போட வேண்டும். சீக்கிரம் குழம்பை அடுப்பை விட்டு இறக்கக் கூடாது. அது மாதிரி இறக்கிவிட்டால் குழம்புக்கு ருசியே இருக்காது. வத்தலும் வெந்தும் வேகாததுமாய் கல்லுப்போலிருக்கும். உப்பு உரப்பும் சாடி இருக்காது. ஆகவே அவசரப்பட்டுக் குழம்பை இறக்காமல் நன்றாகக் கொதிக்க வைத்து அது தேன்பாகுபோல் கெட்டியான பின் எடுத்தால் குழம்பும் வத்தலும் உண்பதற்கு வெகு ருசியாக இருக்கும்.

எண்ணை ஸ்நானம் செய்த தினங்களில் கத்தரிக்காய் வத்தலுடன் வெள்ளைப் பூண்டையும் (Garlic) போட்டு வத்தல் குழம்பு செய்து சாப்பிடுகிறார்கள். அதுவும் ருசியாகவே யிருக்கிறது.

ஆங்கிலேயர்கள் இந்த வத்தல்களைத் தனியாகவே நெய்யில் போட்டு வதக்கி இதர பதார்த்தங்களுடன் கலந்து உண்கிறார்கள்.

## கத்தரி இலையின் உபயோகம்

கத்தரிக்காய் பலவித கறிகள் செய்து சாப்பிடப் பயன் படுகிறது என்பது எல்லோரும் உணர்ந்த விஷயம்தான். ஆனால் அதன் இலை மருந்தாக உபயோகப்படுகிறதென்பது அநேகருக்குத் தெரியாது. ஏதாவது இடறி, விழுந்ததாலோ அல்லது வெட்டுக் காயங்களோ ஏற்பட்டால் உடனே வேறு நல்ல மருந்து அகப்படாவிட்டால் கத்தரி இலையைப் பறித்துத் தூசியை நன்றாகத் துடைத்து வெட்டுப் புண்மீது வைத்துக் கட்டிவிட்டால் ரத்தப் பெருக்கு உடனே நின்று விடும். இரத்தத்தில் விஷம் பரவாமல் தடுக்கவும், புண் அழுகாமல் தடுக்கவும் கத்தரி இலைக்கு சக்தி இருக்கிறது. பர்மாவில் குடியானவர்களும், கிராம வாசிகளும் கத்தி, அரிவாள் வெட்டுக் காயங்களுக்குக் கூடக் கத்தரி இலையை உடனே உபயோகிக்கிறார்கள். அதனால் புண் சீக்கிரம் ஆறி விடுகிறதென்று அவர்கள் அனுபவ பூர்வமாகக் கூறுகிறார்கள்.

திருஷ்டிதோஷத்துக்கும், கண் நோவுகளுக்கும் இந்த இலையை நன்றாகக் களிபோல் அரைத்துக் கழுத்தில் பத்துப் போட்டு வந்தால் அந்நோவுகள் தீரும்.

கத்தரிக்காய் சமையல் செய்வதில் பல பிரதேசங்களில் பலவித எண்ணெகளை உபயோகித்து வருகிறார்கள். அவரவர்கள் சக்திக்கும், ருசிக்கும் ஏற்ற எண்ணெகளை உபயோகிப்பது நல்லதே. ஆனாலும் இதைக்கொண்டு செய்யும் பதார்த்த வகைகளுக்கு நல்ல எண்ணெயை உபயோகிப்பதே உடம்புக்கும் நல்லது. பதார்த்தங்களும் ருசியாகவும் வாசனையாகவும் அமையும். பணக்காரர்களானாலும் நெய்யை உபயோகிப்பதனால் இதன் ருசி நல்லெண்ணெயைப் போல் அவ்வளவு நன்றாக இருக்காது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சிலர் ஆலிவ் எண்ணெயிலும் பதார்த்தங்களைத் தயார் செய்கிறார்கள். அது நம் நாட்டு ருசிக்கு அவ்வளவு பொருத்தமல்லாதிருப்பது மட்டுமன்றி ஆலிவ் எண்ணெயின் விலையும் நல்ல எண்ணெயைவிட அதிகம். மலையாளிகளுக்கு கோகோ ஜெமில் செய்து உண்ணவே விருப்பமாக இருக்கலாம். நல்ல தேங்கா யெண்ணெயை உபயோகிப்பதற்கு யாதொரு ஆட்சேபனையும் கிடையாது. அது ஒத்துக்கொள்பவர்கள் இது விஷயத்திலும் அதையே உபயோகிக்கலாம்.

அடுத்த இதழில் கத்தரிக்காய் ரசம், பாத், சூப், பஜ்ஜி இன்னும் அநேக வித கறிகள் செய்வதைப் பற்றி விவரமாக எழுதுகிறேன்.



# ருமேனியா

ஸ்ரீமதி ஜி. கிரிஜா

ருமேனியா தேசம் தென்கிழக்கு ஐரோப்பாவில் கருங்கடலுக்கருகில் உள்ள ஒரு சிறு தேசம். இது ஒரு பண்டை நாடு. இதற்கு வடக்கில் போலந்தும், ஸெக்கோஸ்லவக்கியாவும், வடகிழக்கில் உக்ரெயினும், மேற்கில் ஹங்கேரியும் யூகோஸ்லோவியாவும் இருக்கின்றன. தெற்கில் பல்கேரியா தேசம் இருக்கிறது. இத்தேசத்திலுள்ள முக்கிய மலைத்தொடரின் பெயர் கார்பதியன் மலைத்தொடர் என்பதாகும். இம்மலைத் தொடரில் சில நதிகள் உற்பத்தியாகின்றன. இத்தேசத்துக்கும் பல்கேரியாவுக்கும் எல்லையாயிருப்பது டேன்யூப் நதியே. இந்த தேசம் இயற்கை வளங்கள் சிறந்து விளங்குகிறது. குதூகலமான இயற்கை விநோதங்கள் ருமேனியாவில் ஏதேஷ்டமாகக் காணலாம். இதன் பரப்பளவு சுமார் 122,000 சதுர மைல்கள். ஜனத்தொகை ஏறக்குறைய 17,000,000. இதில் பெரும்பான்மையோர் விவசாயிகள்.

### அரசியல்

ருமேனியாவை பரம்பரையாக வரும் அரசர்களே ஆண்டு வருகிறார்கள். ஆனால் அரசர் தன்னிச்சைப்படி ஏதேச்சாதிகாரம் செலுத்த முடியாது. கட்டுப்பட்ட அரசர் ஆட்சியே **(Constitutional monarchy)** இன்று அமுலிலிருந்து வருகிறது. அரசருக்கு யோசனை கூறி ராஜ்ய நிர்வாகங்களைக் கவனிக்க மன்னரால் நியமிக்கப்பட்ட மந்திரி சபை ஒன்று இருக்கிறது. வயது வந்த எல்லாப் பிரஜைகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட இரு சபைகளடங்கிய பார்லிமெண்டு சபையே சட்டதிட்டங்களைச் செய்து வருகிறது. ஜனப்பிரதிநிதி சபைக்கு சேம்பர் ஆப் டெபுடீஸ் என்றும் உயர்தர சபைக்கு செனட் என்றும்



இருமங்கையர் அலங்காரமாக நிற்கின்றனர்.

பெயர். ஸ்தல சுய ஆட்சிக்குத் தகுந்த விதம் ருமேனியா பல ஜில்லாக்களாகவும், மாகாணங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது.



ருமேனிய வனிதை தக்ளியில் நூல் நூற்றல்.

## படைபலம்

இத்தேசத்தில் கட்டாய ராணுவப் பயிற்சியும், ராணுவ சேவையும் அமுலில் இருந்து வருகிறது. 21 வயதிலிருந்து 46 வயதுவரை யுள்ளவர்கள் எல்லோரும் கட்டாயம் ராணுவ சேவை செய்யக் கடமைப் பட்டுள்ளார்கள். இருவருஷங்கள் காலாட்படையிலும், மூன்று வருஷங்கள் இதரப்படை அம்சங்களிலும் ஒவ்வொருவரும் பயிற்சி பெற்று அவசியமான காலங்களில் சர்க்கார் உத்திரவிடும் காலம்வரை சேவை செய்தாக வேண்டும். படை சமாதான காலத்திலேயே சுமார் மூன்று லக்ஷம் பேர்கள் கொண்டதாக இருக்கிறது.

## வியாபாரம், கைத்தொழில்

விவசாயமே பிரதான தொழில். நூற்றுக்கு 85 பேர் விவசாய ஜீவனம் செய்பவர்களே. அதிலும் முக்கியமாக வாலேஷியச் சமவெளியில் விவசாயம் தான் முக்கிய தொழிலாக இருக்கிறது. முக்கியவிளை பொருள்கள் மக்காச்சோளம், பார்லி, கோதுமை, ஓட்ஸ் (கொள்), கம்பு முதலியன. கோதுமை பயிரிடும் நாடுகளில் ருமேனியா முக்கியமானது. ஆடுமாடுகள் வளர்த்து, அவைகளினால் ஏற்படும் பொருள்களையும் வியாபாரம் செய்கிறார்கள். ட்ரான்ஸில்வேனியா மாகாணத்தில் புகையிலை அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறது. தவிர மாவரைத்தலும், மது காய்ச்சலும் சில பிரதேசங்களில் செய்து வரப்படுகின்றன. இப்பொருள்களிலும், சித்திரத்தையல் வேலைகளிலும் வெளிநாடுகளுடன் வியாபாரம் நடத்துகிறார்கள்.





## போக்குவரத்து சாதனம்

சர்க்காருக்குச் சொந்தமான சுமார் 7000 மைல் ரயில்வே யிருக்கிறது. சாதாரண ரோடுகளும் போதிய அளவு சர்க்காரால் போடப்பட்டிருக்கின்றன. தந்தி, டெலிபோன், தபால் வசதிகளும் இருக்கின்றன.

## மதம்

இத்தேசத்தினர் பெரும்பாலோர் கிறிஸ்தவ மதத்தை தழுவி நடக்கின்றனர். பண்டைய பழக்க வழக்கங்களை கடுமையாகக் கையாளுகின்றனர். மத பக்தி பொதுவாக அதிகமென்றே சொல்லலாம். பாதிரிமார்களும், குருக்களும் நன்கு மதிக்கப்படுகின்றனர். விவசாயிகள் தாங்கள் பட்டினி கிடந்தாலும், முக்கிய விசேஷங்களில் குருக்களுக்கும் கோவிலுக்கும் செலுத்த வேண்டிய காணிக்கைகளை தவராமல் செலுத்தி விடுகின்றனர். தங்கள் மதத்தில் அத்தியந்தப் பற்றுள்ளவர்களாய் இருந்தபோதிலும் ருமேனியர் இதர மதங்களையும் மதஸ்தர்களையும் வெறுப்பதில்லை. ருமேனியாவில் யூதர்களும், மகமதியர்களும் அனேகரிருக்கின்றனர். அவர்கள் தங்கள் மதத்தை யாதொரு தடையின்றி அனுஷ்டித்துவர சுதந்திரம் இருந்து வருகிறது.

## கல்வி

பிரஜைகளிடத்தில் கல்வியை போதிப்பது சர்க்காரின் முக்கிய கடமைகளில் ஒன்றாகப் பாவிக்கப்படுகிறது. பொதுக் கல்வி, தொழிற் கல்வி அரசாங்கத்தாரால் எல்லா சிறுவர்களுக்கும் கட்டாயமாகப் போதிக்கப்பட்டு வருகிறது. இலவசக் கட்டாயக் கல்விமுறையை அனுஷ்டிக்க ஜனங்களுக்குப் போதிய வசதிகளை சர்க்கார் ஏற்படுத்தியிருக்கின்றனர். உயர்தரக்கல்வியும் பரவியிருக்கிறது. புகாரெஸ்ட், ஸெர்னோவிட்ஸ், கோலோஸ்வர், ஜாஸ்ஸி என்ற நான்கு நகரங்களிலும் யுனிவர்சிடிகள் இருக்கின்றன.

## முக்கிய நகரங்கள்

ருமேனியாவின் தலை நகரம் புகாரெஸ்ட். இதர முக்கிய பட்டணங்கள் கிஷேனேவ், ஜாஸ்ஸி, காலதி, தெமேஸ்வார், ப்ரெயிலா முதலியன. ட்ரான்ஸில்வேனியா, தோப்ருஜா, மால்டேவியா,



அருவடை செய்கிறாள்.

வாலேஷியா, பெஸ்ராபியா, புகோவினு, பானட் முதலியன முக்கிய மாகாணங்களாகும்.

## சரித்திரம்

ருமேனியா ஒரு பண்டை நாடு. முதலில் டேஷியர்கள் அந்நாட்டை ஜெயித்துக் குடியேறினர். பின்னர் ரோமர் ஆளுகைக்குச் சுமார் இருநூற்றாண்டுகள் ருமேனியா உட்பட்டிருந்தது. கோத், ஹன், ஆவார் முதலிய ஜாதியார்கள் முறையே அந்நாட்டைக் கைப்பற்றினர். 1352ம் வருஷம் வாலேஷியாவும், மால்டேவியாவும் ஒன்றுபட்டன. பின்னர் இருநூறு வருஷங்கள் துருக்கியர்கள் தொல்லை புரிந்து வந்தனர். இவர்களுடன் எதிர்த்துப் போராடிய மன்னருள் முக்கியஸ்தன் பெயர் ஸ்டீபன். பின்னும் ருமேனியாவின் கஷ்டங்கள் நீங்கின பாடில்லை. ஹங்கேரியர், ஆஸ்திரியர், போலந்து தேசத்தினர், ரஷியர்கள் முதலியவர்கள் தங்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த முயன்றார்கள். ஒற்றுமை ருமேனியா 1862ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. அநேக மாகாணங்கள் ஒன்றுபட்டன. 1877-78ம் வருஷம் நடந்த ரஷ்ய-துருக்கி யுத்தத்துக்குப் பிறகே ருமேனியா பூரண சுதந்திர நாடாயிற்று. சென்ற மஹா யுத்த காலத்திலும் ருமேனியா ஐக்கிய அரசுகளுடன் சேர்ந்து ஜெர்மனியுடன் போராடியது.



ருமேனியமாது பண்டைகால உடை அணிந்து நிற்பது.

## விவசாயிகள்

ருமேனிய மக்களுள் பெரும்பான்மையோர் விவசாயிகள். இவர்கள் தூயமனது, தன்னம்பிக்கை, நிதான புத்தி, அன்பு, விடாமுயற்சி, உழைப்பு முதலிய நற்குணமுடையவர்கள். விருந்தினர்களை உபசரிப்பதில் அவர்களுக்கு அதிகப் பிரியம். தங்கள் கஷ்டங்களைப் பிறரிடம் கூறமாட்டார்கள். தாங்களே பொறுமையாக சகிப்பார்கள். இவர்களின் முக்கிய ஆகாரம் சோளக் கஞ்சிதான். அநேக நாட்கள் பட்டினி விரதமிருக்கிறார்கள். சங்கீதத்திலும் இவர்களுக்கு விருப்பமுண்டு. வீணை, புல்லாங்குழல் முதலிய வாத்தியங்கள் வாசிப்பதிலும், கேட்பதிலும் ஆசை. கல்யாணங்களிலும், விருந்துக் கச்சேரிகளிலும் ஜிப்ஸி மாதர்கள் நடனம் புரிகிறார்கள்.





## பெண்கள்

ருமேனிய மங்கையர் இயற்கை வனப்பும், செயற்கை அழகும் புத்தி சாதுர்யமும் உடையவர்கள். பலவித வர்ண உடைகளை பல மாதிரி சித்திரத் தையல் வேலை செய்து அணிந்து கொள்வதில் அதிகப்பிரிய முடையவர்கள். வண்ணாத்திப் பூச்சியின்மேல் எத்தனைவித வர்ணங்களிருக்கின்றனவோ அத்தனை நிற உடைகளை அவர்கள் அணிந்து விளங்குகிறார்கள். நூல் நூற்பதும், துணிகள் நெய்வதும் ஸ்திரீகளே. அந்தந்தக் குடும்பத்துக்கு வேண்டிய எல்லா உடைகளும் ஸ்திரீகளால் கையாலேயே செய்யப்படுகின்றன. ஒருவித சணலைக்கொண்டு துணிகள் நெய்கிறார்கள். சணலைத் தண்ணீரில் நனைப்பது முதல் உடைகளாகும்வரை எல்லா வேலையும் மாதரே செய்கிறார்கள். குடும்ப உபயோகப் பொருள்கள் யாவும் கையாலேயே செய்யப்படுகின்றன. சமையல் வேலையிலும் நங்கையர் சாமர்த்தியசாலிகள். கல்வியும் மாதர்களிடை பெரிதும் பரவியிருக்கிறது. காலஞ்சென்ற எலிஸபெத்ராணி சங்கீதம், சித்திரம் முதலிய கலைகளில் விர்ப்பன்னர்; பல பாஷைகள் பேசத்தெரியும்; அநேக நூல்கள் எழுதியிருக்கிறார். மேரி ராணியும் அப்படியே.

விவசாயத்திலும் ஸ்திரீகள் தங்கள் கணவருக்கு உதவுகிறார்கள். நிலத்தைப் பண்படுத்தல், விதை விதைத்தல், களையெடுத்தல், அருப்பு அருத்தல் முதலிய எல்லா அலுவல்களும் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். மாடு மேய்ப்பார்கள். பால் கறந்து, வெண்ணை எடுத்து உபயோகிக்கிறார்கள். மாடு மேய்க்கும்பொழுது கூட தக்ளி வைத்து நூல் நூற்கிறார்கள். வரும்படி வந்தால் அந்த சமயங்களில் சுறுசுறுப்பாக சதாகாலமும் வேலை செய்வார்கள். எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்த போதிலும் மலர்ந்த முகத்துடன் இருக்கிறார்கள். கண்கவர்வனப்புடைய வனிதையர் பலர் குதூகலமாகக் கூடி விளையாடிக்கொண்டு கழனிகளில் வேலை செய்யும் காட்சி உள்ளத்தில் உவகை உண்டாக்கும். நகை நட்டுகள் அணிந்து கொள்ளுவதில் குடியானப் பெண்களுக்கு ஆவல் அதிகம். ருமேனிய ஸ்திரீகள் சித்திரத் தையல் வேலை செய்வதில் வெகு பிரசித்தி பெற்றவர்கள். இவர்கள் செய்த பொருள்களுக்கு ஐரோப்பா பூராவும் நல்ல மதிப்பும் விலையும் உண்டு. பொதுவாக இயற்கை அன்னையின் மடியில் சுதந்திரமாக வளர்ந்து விளையாடி வரும் ருமேனியக் கன்னியரின் உடல் கட்டுள்ளதாகவும், அழகாகவும் இருப்பதில் ஆச்சர்யமொன்றுமில்லை. அவர்கள் அழகும் நற்குணமும் ஒருங்கே யமையப் பெற்று விளங்குகிறார்கள். கல்யாண விஷயத்தில் அர்த்தமற்ற அநேக சடங்குகளை இன்றும் கையாடி வருகிறார்கள்.

# வைத்தியப் பகுதி

ஸ்ரீமதி எஸ். கமலா

## துளசியின் மருத்துவ பிரயோஜனம்

துளசியை அறியாத ஹிந்துக்கள் யாரும் இருக்க மாட்டார்கள். யாவருமறிந்த செடி துளசி. இந்துக்களில் ஒரு சிலவகுப்பினர் துளசியைப் பகவானை அருச்சிக்க உபயோகப்படுத்துகின்றனர். தவிர துளசிமடம் கட்டி அதற்கு தினம் பூஜைசெய்தும் வருகிறார்கள். பகவான் ஸ்ரீகிருஷ்ணனுக்குத் துளசிமாலையில் பிரீதி. திருமால் துளபமாலையையே அணிந்திருக்கிறார்.

தண்டு, இலை, நிறம் இவற்றின் வேறுபாடுகளை யொட்டி துளசியில் பலவித வகைகள் உண்டு. அவைகள் நிலத் துளசி, கல்துளசி, சிவதுளசி, காட்டுத் துளசி, கருந்துளசி, செந்துளசி, வெண் துளசி, முள்துளசி, நாய்த்துளசி எனப் பல வகைப்படும். துளசி திருநீற்றுப் பச்சையினத்தைச் சார்ந்தது. இதை துழாய், துளபம், துளவு, குல்லை, பிருந்தை எனவும் அழைப்பார்கள். ஆங்கிலத்தில் "பேஸில்" என்றும், இந்துஸ்தானியில் "பாரந்தா" வென்றும், தெலுங்கில் "கிருஷ்ணசெட்டு" என்றும் துளசிக்குப் பெயர்.

துளசியில் அநேக வைத்திய குணங்களிருக்கின்றன. அந்த விசேஷ குணங்களை ஆதிமுதலே இந்தியர்கள் நன்கு உணர்ந்துதான் அதைப் பலவிதமாக தினசரி உபயோகிக்கின்றனர். அதன்பெருமை அதன் மருத்துவ மகிமையினால்தான் என்று கூறினால் அது மிகையாது. மேல்நாட்டு வைத்தியநிபுணர்கள் கூட துளசியின் பெருமையை உணர்ந்து அதை வைத்தியத்துக்கு நூதனமுறைகளில் இன்று உபயோகித்து வருகின்றனர். துளசி சிறுகுழந்தைகளின் வியாதிகளுக்குச் சிறந்த மூலிகையாக இருக்கின்றது.

கபம், ஜுரம், சுவாசாசய சம்மந்தமான நோய்களைக் கண்டிக்கும் சக்தி துளபத்துக்கு இருக்கிறது. துளசிச்சாறை இந்த ரோகங்களுக்குச் சாப்பிட்டால் வியாதி நீங்குகிறது. அதற்கு ரணங்களிலும், க்ஷயங்களிலும் உள்ள துர்க்கந்தங்களை மாற்றி புண்புரைகளையும் ஆற்றும் சக்தி உண்டு. அதனிடத்துள்ள துவர் குணத்துக்கு வயற்றுப் புண்களையும், வயற்றிழச்சலையும் போக்கடிக்கும் தன்மையுண்டு. துளசியை இருமல் வியாதிக்குக் கண்டங்கத்தரி ஆடாதோடையுடன் சேர்த்துக் கொடுத்து வருகிறார்கள்.

குழந்தைகளுக்கு ஏற்படும் சாதாரண ஜுரங்களுக்கும் இருமலுக்கும் தினம் காலையில் ஒரு அவுன்ஸ் துளசிச் சாற்றை சுத்தமாகக் கொடுத்துவந்தால் விசேஷ குணம் காணப்படும். குழந்தைகள் சீதளத்தினால் நெஞ்சில் சளி கட்டிக்கொண்டு திக்குமுக்காடி இருமலும் சேர்ந்து திணறும் சமயங்களில் துளசிச்சார் கொடுத்தால் நெஞ்சு சளி நீங்கிக் கறைந்து இருமலும் நிற்கும். துளசிச்சார் குணம் விரைவாகவே தெரியும்.



நல்ல வயதான ஸ்திரீ புருஷர்கள் கூட தினசரி காலையில் இரண்டு அவுன்ஸ் துளசிச் சாற்றை அருந்தி வருவார்களேயானால் விஷசீதள சுரமாகிய இன்புளுவென்சா, மலைஜுரம், காலரா முதலிய தொத்துநோய்கள் அவர்கள் அண்டையில் கூட அணுகாது. காலை மாலை இருவேளைகளிலும் ஒரு அவுன்ஸ் வீதம் சாற்றைச் சாப்பிட்டுவந்தால் சர்மத்துக்கு ஒருவித காந்தியும், மிருதுவும் தந்து முகத்துக்கு தேஜஸையும் அளிக்கிறது.

அதிர்ச்சியினால், அல்லது பயத்தினால் திடீரென்று மயங்கி விழுந்துப் பிரக்ஞையற்றுக் கிடப்பவர்களுக்கு ஒரு அவுன்ஸ் துளசிச் சாறு கொடுத்தால் மயக்கம் தெளிவுறும். மேலும் பிரக்ஞை வரவில்லையானால் மற்றொரு அவுன்ஸ் கொடுக்கலாம்.

பாம்பு விஷத்துக்கும் துளசிச் சாறு பெரிதும் உபயோகப்படுத்தப் படுகிறது. சர்ப்பத்தால் தீண்டப்பட்டவர்களுக்கு இந்தச் சாற்றை தயார்ந்து கொடுத்துவர விஷத்தின்கடுமை குறையும். அத்துடன் நிறுத்திவிடாது மேலும் சுமார் ஐந்து தினங்கள் காலைமாலை இருவேளையும் சாப்பிட்டு வரவேண்டும். அரவம் தீண்டப்பட்டவர்கள் துளசிதீர்த்தங் கொண்டுவருமுன் மயங்கி மூர்ச்சையாய்க் கிடந்து தானேயோ அல்லது பிறர் உதவியினாலோ அதை உட்கொள்ள முடியாத நிலையில் இருந்தால் அச்சாற்றை காது, கண், வாய் உட்பட தேகம் பூராவும் நன்கு தடவினால் சில நிமிஷங்களில் விஷம்தீண்டப்பட்டவர் மூர்ச்சை தெளிந்து எழுவார். பின் சாறு அருந்தச் செய்யவேண்டும்.

துளசிக் கட்டையினால் மணிமாலை முதலியன பலர் அணிந்துகொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அதற்கு அர்த்தமும் பலனும் இல்லாது போகவில்லை. இம் மணிகளை அணிந்து கொள்வதினால் பல தொத்துவியாதிகள் வராமல் தடுக்கலாம்.

துர் இரத்தத்தினால் ஏற்படும் சொரி சிரங்கு, குஷ்டப்புண்கள் இவைகளுக்கும் துளசி நல்ல மருந்தாகப் பயன்படுகிறது. இவைகளால் பீடிக்கப்பட்டவர்கள் துளசிச்சாற்றை உள்ளுக்குத் தினசரி சாப்பிட்டு வருவதினாலும் நல்லகுணம் காணலாம்.

துளசிவேரை நிழலில் உலர்த்திப்பின் எடுத்து சுத்தமாகத் தூளாக்கி தினசரி காலைமாலை இருவேளையும் ஒரு தோலா எடையளவு நெய்யில் குழைத்துச் சாப்பிட்டுவந்தால் தேகாரோக்கியம் விருத்தியடையும். பலஹீனம் பறந்துபோகும். உடல் வலிமை பெறும்.

படர்தாமரை, தூர்நீர்பத்துகள், குஷ்டப் புண்கள் முதலியவற்றுக்கும் துளசித் துளிர்களை எலுமிச்சம் பழச்சாறுடன் கலந்து மைபோல் அறைத்து பாதிக்கப்பட்ட பாகங்களில் தினசரி பூசிவந்தால் குணமுண்டாகும். சிலந்தி, ரத்தக்கட்டி இவைகளுக்கு துளசி இலையைத் தண்ணீர் விட்டறைத்து பத்துப்போட்டால் கூடிய விரைவில் பழுத்து உடைந்து விடும். பின்னர் ரணத்தை சுத்தி செய்து சாறுபூசிக் கட்டிக்கொண்டு வந்தால் புண் சீக்கிரம் ஆறிக்காய்ந்து போகும். இவ்வளவு அரிய குணங்களை யுடைய துளபத்தை ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீடுகளிலும், தோட்டங்களிலும் பயிர் செய்துவந்தால் தாங்கள் மட்டும் நன்மையடைவதன்றிப் பிறருக்கும் உபகாரம் செய்யலாம் பகவத் பூஜைக்கும் பயன்படுத்தலாம்.

# கிரஹலக்ஷ்மி கங்கணம்

## வேண்டுகோள்

சகோதரிகளே !

"கிரஹலக்ஷ்மி" யில் பிரசுரிக்கப்படும் கட்டுரைகள் யாவும், கூடுமானால் மாதர்களாலேயே எழுதப்பட வேண்டு மென்பது எங்கள் அவா. தமிழ் மொழியில் பாட்டுகளும், கவிகளும், கதைகளும், இன்னும் இதர விஷயங்களைப் பற்றியும் எழுதும் வல்லமையுள்ள மாது சிரோன்மணிகள் எவ்வளவோ பேர் தமிழ்நாட்டி லிருக்கிறார்கள் என்பது உண்மை. தங்கள் சகோதரிகளுக்கான விஷயங்களைப் பற்றி ஸ்திரீகளே எழுதுவது ஆடவர்கள் வரைவதைவிட மிகவும் சிறந்ததாகும். எனவே தமிழ் நாட்டு ஸ்திரீகள் இப்பணியில் பங்கு எடுத்துக்கொள்ளுதல் அவசியம். தங்களுக்கு உசிதமெனத்தோன்றும் விஷயங்களைப்பற்றி பிரதிமாதம் 10உக்குள் வியாசங்கள் "கிரஹலக்ஷ்மி" காரியாலத்துக்கு வந்து சேரும்படி எழுதி யனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**வருடா வருடம் ஒரு கலைவிழா நடத்தி அதில் அவ்வருடத்திய சிறந்த ஸ்திரீ வியாசகர்த்தாவுக்கு 116 ரூபாய் மதிப்புள்ள தங்கத்தில் செய்த "கிரஹலக்ஷ்மி கங்கணம்" பரிசளிக்கப்படும்.**

பத்திராதிபர்,

**கிரஹலக்ஷ்மி.**

# அவளடங்கிய விதம்

**'ராஜம்'**

மிஸஸ் சீனிவாசனை—நீ—மிஸ் சாரா ஈப்பன் (நீ என்ற பதம் தத்துவ சாஸ்திரத்தைச் சார்ந்தது என்று நினைத்துக் கொள்ளவேண்டாம். நீ [Nee] என்பது, கிறிஸ்து மதத்தைச் சார்ந்த பெண்மணிகள் 'கன்னிகையாக விருந்த பொழுது' என்று பொருள் படும். மிஸஸ் சீனிவாசனுடைய கன்னிப் பெயர் மிஸ் சாரா ஈப்பன்.) காணவேண்டியது தான் தாமதம். மாதர்சபை யிலுள்ள எங்கள் அனைவருக்கும் 'ஷாக்' அடிக்கும்.

அவர் ஆங்கிலக் கல்வி (அரைகுறையாக) கற்றவர். தாய் பாஷையிற் பேசினால் திரிசங்கு சுவர்க்க வாசிகளுடைய நன்மதிப்புப் பெற முடியாதென்பது அவருடைய எண்ணம். எனவே, எக்காலத்தும் ஆங்கிலத்திலேயே பேசுவார். தமிழ் மொழியே தனக்குத் தெரியாது என்று ஒரே அடியாக அடிப்பார். கம்மர்ஷியல் லைனில்கூட சிறிது படித்திருக்கிறார். அவரிடம் பேச்சுக் கொடுத்து மீள ஒருவராலும் முடியாது. இந்த வன்மையினால் தான் அவருக்கு ஒரு டைபிஸ்டு உத்தியோகம் கிடைத்தது. நாளாவட்டத்தில் உத்தியோக உயர்வும் மிஸஸ் பட்டமும் கிடைத்து விட்டன.

மாதர் சபையில் மிஸஸ் சீனிவாசன் ஒருவர் மட்டுமே எல்லாம் அறிந்தவர். தீர்க்கதரிசி என்றுகூட தானே கூறிக் கொள்ளுவதுண்டு. ஒரு பொருளைப் பாராமுன்னரே, அது இன்னதுதான் என்று சொல்லி விடுவார். அவருக்கு எல்லா விஷயங்களும் தெரியும்; அல்லது தெரிந்ததாகப் பெருமை பேசிக்கொள்ளுவார். இது மிகவும் ஆபாச குணம்.

உண்மையாகவே மிஸஸ் சீனிவாசன் சங்கத் தலைவியல்லாதபோதிலும், நடைமுறையில் சங்கத் தலைவியாகப் பாவிக்கப் பட்டார். நல்லகாலம், மிஸஸ் ஆப்ஸெண்டாக விருக்கும் பொழுதுதான் எங்கள் சபை கூடும்.

நாங்கள் எங்காவது ஒருமிக்கச் சென்றால், அவரே எங்களுக்குத் தலைவி. உண்மைத் தலைவிகூட சாதாரணத் தோழிதான். அவரிடமே சர்வாதிகாரமும் குடிகொண்டிருந்தது. அவர் சொல்லுவது வேதவாக்கு—உண்மை. அதற்கு மாறாக, ஒருவர் தனது அபிப்பிராயத்தையோ, அன்றி உண்மைப் பொருளையோ, கூறிவிடின், அவ்விதம் நடந்து கொண்டவருடைய பாடு அதோகதி தான். மிஸஸ் வாதம் செய்யத் தொடங்கிவிட்டால், யாரும் எதிர் நிற்க முடியாது.

ஒரு நாள், நாங்கள் அனைவரும், வகையின்றி அவரிடம் அகப்பட்டுக் கொள்ள நேர்ந்தது. அமிஞ்சிக்கரைக்குப் பக்கத்தில், அநேக ஆயிரம் வருடங்களாக மண் மூடிக்கிடந்த ஒரு கோவில் கண்டு பிடிக்கப் பட்டிருப்பதாக 'பத்திரிகை' வதந்தி உலவியது. அன்று மாலை ஐந்து மணிக்கு நாங்கள் அதைக் காணச் சென்றோம். 'பஸ்' நிற்குமிடத்தில் — எங்களுக்கு முன்னதாகவே—மிஸஸ் ஆஜராக விருந்தார். வெறும் வாயை மெல்லுகிற

வருக்கு அவல் கிடைத்து விட்டால்! ஒவ்வொருவராக எங்களைக் கட்டியணைத்தார். உடனே அவருடைய தொனிப்பெட்டியின் மடை திறக்கவே, சொல் மாரி சரமாரியாகக் கிளம்பி அதிர்ந்தது. அவர் கரங்களில் அமிஞ்சிக்கரை ஸ்தலபுராணமொன்றும் கிராமப் படம் ஒன்றும் விளங்கின. அனைவருக்கும் அப்புராதன கோவிலைக் காட்டுவதாகக் கூறினார். அக்கோவிலின் மகிமையைப்பற்றி பலவாறு வாயாரக்கூறி மகிழ்ந்தார். அனைவரையும் பின் தொடரச் சொல்லி முன்னே நடந்தார்.

கல், முள், புதர் இவை நிறைந்த பாதைவழியே சுமார் இரண்டு அல்லது மூன்று பர்லாங்கு தூரம் நடந்து சென்றிருப்போம். மிஸஸ் சீனிவாசன் அவ்விடத்தே நின்று கொண்டு கிராமப்படத்தைக் கவனித்தார். பின்னர் ஒன்று, இரண்டு, என்று விரல்விட்டு எண்ணினார். அதன் பின் சுற்று முற்றும் பார்த்தார். கோவில் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்து விட்டதாகக் கூறினார். வலது பக்கமாக விருந்த, ஒற்றையடிப் பாதை வழியாகப் பின்னும் சுமார் ஒரு பர்லாங்கு தூரம் நடந்து சென்றோம். ஒரு மண்மேட்டை யடைந்தோம். அதைச் சுற்றிலும் செடி, கொடி, புதர்கள் நிறைந்திருந்தன.

நாலாபக்கமும் மண்மேடு சூழ, நடுவே ஒரு புராதன கோவில் தென்பட்டது. மணி ஏழு. ஏற்கனவே இருட்டி விட்டபடியாலும், கன்னங்கரேலென்றிருந்த மரநிழலாலும், பறவைகள், ஊர்வன, இவற்றின் கோர சப்தத்தினாலும், கோவில் மிக்க பயங்கரமாகத் தோன்றியது. மனதைச் சற்று திடப்படுத்திக்கொண்டு மிஸஸ் சீனிவாசனுடைய மின்சார விளக்கினுதவியால் கோவிலையணுகினோம். கோவில் புராதனமானது; ஆயினும் மிக அழகு பொருந்தியிருந்தது.

கோவிலைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும் பொழுதே, மிஸஸ் சீனிவாசன் ஒவ்வொரு பொருளாகச் சுட்டிக் காட்டி அதனதன் பெருமைகளைப் பெருமிதமாக எடுத்தோதினார். அவர் கூறியது :—

“இதோ இந்த கருடகம்பம் (ஸ்தூபி) மதுரையை ஆண்டு வந்த திருமலை நாயக்கருடைய உபயம்; அதோ அந்த விநாயகர் ஆலயத்தை கரிகால் சோழன் கட்டுவித்தான்; இதோ இக்கல் உத்திரத்தை சேரன் செங்குட்டுவன் இயற்றுவித்தான்; இந்த அம்மன் சந்நிதி வரதுங்க பாண்டியனால் அருளப்பட்டது; கர்ப்பக்கிரஹம் விஜய நகர ராஜாவினால் கட்டப்பட்டது; சித்திரவேலைப் பாடமைந்த கதவு தெனாலி ராமனால் இயற்றப்பட்டது; எவ்விதத்திலோ அது திப்புசுல்தானிடம் சென்று விட்டது; திப்புசுல்தான் அதை இக்கோவிலுக்கு வழங்கினார்; மைசூரை ஆண்டுவந்த கிருஷ்ணதேவராயர் இந்த மரத்தைப் பயிரிட்டார். அதோ அங்கு தெரிகிறதே ஒரு பாறை; அந்தப் பாறையின் மீது, ‘ராபர்டு கிளைவ்’ அமர்ந்து, தாக சாந்தி செய்தார். அவருடைய ஸ்பரிசத்தினால் அந்தப் பாறையும் வெளுத்து விட்டது......................”

இவ்வாறு அவர் சொல்லிக்கொண்டே வருகையில் எங்கள் பின் புறமாக ஒரு கோர தொனி கேட்டது. நாங்கள் அனைவரும் திரும்பிப் பார்த்தோம். ஒரு வயோதிகன் கோபாவேசத்தோடு தோன்றினான். எங்களைக் கண்டவுடன் சிறிது கோபந்தணிந்தவாறு கூறினான் :—





‘அம்மா! நீங்கள் அனைவரும் பெரிய இடத்து மாதர்கள் என்று தெரிகிறது. இருப்பினும் நீங்கள் கூறுவது சரியல்ல. ஏனெனில், இக்காலத்தில் ‘சகல கோவில்களிலும் உட்சென்று, சுவாமி தரிசனம் செய்ய, சகல ஜனங்களுக்கும் உரிமையுண்டு’ என்ற விதி ஏற்படுத்தி வருகிறார்கள். இதனால் கீழ்ஜாதி வகுப்பினர்கூட உயர்ஜாதியாருடைய கோவில்களுக்கே சென்று சுவாமி தரிசனம் செய்கின்றனர். இது மிகவும் நல்லது தான். இருப்பினும், எனக்கும் என்போன்ற பூசாரிகளுக்கும், அனுதினமும் கிடைக்கும் காணிக்கை சுமார் இரண்டு அணா இப்பொழுது கிடைப்பதில்லை. போதும் போதாதற்கு உங்களைப்போன்ற பெரியவர்கள், இந்தக் கோவிலும் இதைச்சார்ந்த பொருட்களும், பல மன்னர்களைச் சார்ந்தது என்று கூறிவிடின் நான் என்ன செய்வது; எப்படி உய்வது? மிக்க செல்வந்தர்களாக விருந்த காலத்தில், எனது மூதாதைகள், இக்காளி கோவிலைக் கட்டுவித்தனர். இதற்குச் சிறிது மானியமும் வழங்கி வருகின்றனர். எனது துரதிர்ஷ்டத்தால், நான் செல்வமனைத்தும் இழந்துவிட்டேன். தற்பொழுது இக்கோவிலே கதியென்றிருக்கிறேன். காணிக்கை கிடைக்காவிடினும், இந்தமானியத்திலிருந்து, அறை வயிற்றுக்கஞ்சிக்காவது தானியம் கிடைக்கிறது. அதைப் பொங்கி காளிக்கே காண்பித்துவிட்டு நான் உண்டு ஜீவிக்கிறேன். நீங்கள், இந்த அறைவயிற்றுக் கஞ்சிக்கும், ஆபத்து விளைத்து விடுவீர்கள் போலிருக்கிறது. ஒரு சமயம், இருட்டி விட்டபடியால் பாதை தெரியாமல் இவ்விடம் நீங்கள் வந்திருக்கலாம். நீங்கள் தேடிவந்திருக்கும் கோவில், இன்னும் கூப்பிடு தூரத்திற்கப்பால் இருக்கிறது. அவர்கள் என்னதான் வெட்டியும், இன்னும் பாதிவரையில் கோபுரத்தைக்காண முடியவில்லை. நீங்கள் தயை செய்து அங்குசென்று புராதனக் கோவிலைக் கண்டு மகிழுங்கள்.”

இதைக் கேட்டவுடன் மிஸஸ் சீனிவாசனுடைய முகத்தில் ஈயாடவில்லை. ஆனால் அசடுமட்டும் தட்டியது. சில நாட்களாக ‘மௌனம் கலகநாஸ்தி’ என்று கண்டு அதன்படியே நடந்து வருகிறார்.

# பால்ய விவாஹம்

திரு. கே. வி. எஸ். வாஸ்.

## I

மஹாகொடுமையானதும் பயங்கரமானதுமான வைதவ்யத்தை இளம் பெண்களின்மீது பலவந்தமாகச் சுமத்தும் பால்யவிவாகத்தை ஆதரித்து சாரதா சட்டத்தை ரத்துசெய்யக் கோரியும், பெண்களுக்குச்சொத்துரிமை யளிப்பதோ அல்லது மறுமணம் செய்துகொள்ள சுதந்திரமளிப்பதோ வேதசாஸ்திரபுராண இதிகாசங்களுக்கு விரோதமானதெனச் சொல்லியும் சில சொற்பொழிவுகள் நிகழ்ந்து வருகின்றன.

நமது நாட்டில் பால்ய விதவைகளின் தொகை நாளுக்குநாள் பயங்கரமான அளவிற்கு அதிகரித்து வருகின்றது. 1921-ம் வருடத்திய ஜனனமரணக் கணக்குகளின்படி பதினைந்து வயதிற்கு உட்பட்ட பதின்மூன்று லக்ஷம் விதவைகளும், ஐந்து வயதிற்கும் பத்துவயதிற்கும் உட்பட்ட எண்பத்து ஆறாயிரம் விதவைகளும் இங்கிருந்திருக்கிறார்கள். இந்தத்தொகை இன்று பன்மடங்கு பெருகியிருக்கின்றது. இதுவிஷயமாக ஆராய்ச்சிகளை நடத்திய அறிஞர்கள் கைம்பெண்களின் தொகை கணக்கின்றி அதிகரிப்பதற்கு பாலிய விவாகமென்னும் கொடிய வழக்கமே மூலகாரணமா யிருக்கின்றதென்பதைப் புள்ளி விவரங்களோடு ஊர்ஜிதம் செய்திருக்கின்றார்கள். பொம்மைக் கலியாணத்தைத் தடைசெய்யத் தோன்றிய சாரதாசட்டம் இந்தியா சட்டசபையில் விவாதிக்கப் பட்டபொழுதும் இந்தப் புள்ளி விவரங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

## II

கலியாணமென்பது ஆணும் பெண்ணும் வாழ்க்கைத் துறையில் வெற்றியோடு காலத்தைக் கழிப்பதற்காகவேயென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். எனவே, வாழ்க்கையில் வெற்றியடைவது விவாகத்தையே பொறுத்திருக்கின்றது. வேர் சரியில்லாத பயிர் வீழ்ச்சியடைவதைப் போல் விவாகத்திலேற்படும் தவறுகளும் தம்பதிகளின் எதிர்கால வாழ்க்கையை நிர்மூலமாக்கி விடுகின்றன. ஆகையால் பிள்ளை பெண்களின் திருமண விஷயத்தில் பெற்றோர்கள் அதிக் சிரத்தை செலுத்த வேண்டியது அவசியமாகும். நமது நாட்டில் இளம் கைம்பெண்களின் தொகை பயங்கரமான அளவிற்கு அதிகரித்துவர பாலியவிவாகமென்னும் கொடியவழக்கமே காரணமாயிருக்கின்றதென்று மேலே கூறினோம். இந்த உண்மையை அனுபவத்தில் உணர்ந்திருந்தும் புராதன மதத்தின் பாதுகாப்பாளர்களெனச் சொல்லிக் கொள்ளும் சனாதனிகள் இவ்வழக்கத்தை இன்னும் கட்டி யழுதுகொண்டிருப்பது வருந்தத் தக்கதே. பால்மணம் மாறாப் பச்சிளங்குழந்தைகளாயிருக்கும் பெண்கள் அஞ்ஞானமென்னும் கடலிலாழ்ந்திருக்கையில் கலியாணமென்னும் கருங்கல்லுடன் பிணைக்கப்பட்டு நாத்தி



மாமிகளின் கடுஞ்சொற்களைச் சகியாமலும், வைதவ்யமென்னும் கடும்புயலுக்கு அஞ்சியும் வாழ்க்கையை நடத்தவேண்டிய நிலைமைக்கு கொண்டுவந்து விடப்படுகிறார்கள். இப்படி அல்லற்படும் பெண்களிற் பலர் பருவமடையுமுன்னர் பர்த்தாவைப் பறிகொடுத்து பஞ்சேந்திரியங்களையுமடக்கிப் பரதேசிகளைப்போல் வாழவேண்டியவர்களாகி விடுவதையும் அனுபவத்தில் நாம் காண்கின்றோம். இந்தப் பரிதாபகரமான நிலைமை வேறு எந்த தேசத்துப் பெண்களுக்காவது ஏற்படுகின்றதா! எந்தச் சமூகத்துப் பெண்களாவது இத்தகைய கொடுமைக்கு பலவந்தமாக உட்படுத்தப் படுகின்றார்களா? இல்லை! இல்லை!!

பிரிட்டிஷ் மாஜிப்பிரதம மந்திரியான மிஸ்டர் ராம்ஸே மாக்டனால்டு இந்தியாவைப்பற்றி எழுதியுள்ள ஒரு புத்தகத்தில் பின்வருமாறு கேலி செய்திருக்கின்றார்:—

“நான் அனேகம் சிறுபெண்களை இந்தியாவில் கண்டேன். அவர்களெல்லாம் விவாகமாகிப் புத்திரசந்தான முடையவர்களென்பதைக் கேள்விப் பட்டவுடன் ஆச்சர்ய மடைந்தேன். இவ்வளவு பாலியமா யிருக்கையிலேயே குடும்ப பாரம் அவர்களது மெல்லிய தோட்களின் மீது விழுந்துவிட்டது விந்தையே. அவர்கள் கன்னிப் பருவத்தை அறியாதவர்கள். காதலன் ஆவலோடு காத்திருந்து காதலிக்கும் கண்ணியமான காலத்தைக் கனவிலும் உணராதவர்கள்.”

## III

பாலிய விவாகத்தினால் ஏற்படும் தீமை விதவைகளின் பெருக்கு ஒன்றுமட்டுமல்ல. இதனால் ஆண் பெண்களின் ஒழுக்கத்திற்கும் பங்க மேற்படுகின்றது. அறியாப் பருவத்தில் மணம் செய்துகொள்ளும் தம்பதிகள் அறிவு வளர்ச்சியைப் பெற்றதும் அனேக சந்தர்ப்பங்களில் பரஸ்பரமான காதலையும் அன்பையும் அடைந்திராதவர்களாகி விடுகின்றார்கள். கணவன் நன்கு கல்விபயின்றவனாயும், அவன் மனைவி கல்வியின் வாசனையைக்கூட அறியாதவளாயும் இருப்பதை பல விடங்களில் நாம் காண்கின்றோம். வாழ்க்கையின் இலட்சியத்திலும் வளர்ச்சியடைந்த பிறகு தம்பதிகளுக்கிடையே வேற்றுமை யேற்படுகின்றது. “இவன் இவ்வாறிருப்பானென்பதை முன்னராகவே அறிந்திருப்பின் ஒருபொழுதும் இவனை மணம்செய்து கொண்டிருக்க மாட்டேன்!” என்று தன்னையும், தன்னை மணம் செய்து கொடுத்த பெற்றோர்களையும் நொந்து கொள்கின்றாள் பெண். அதேபோல், தனது மனப்போக்குக்கு மாறாக நடந்து கொள்ளும் மனைவியைப் பார்த்து “இந்தச் சனியனை எனது கால்களில் கட்டிவிட்டார்களே!” என்று கணவன் வருந்துகின்றான். இந்த தம்பதிகளுக்கிடையே வாக்குவாதமும், பலத்த சண்டைகளும் அடிக்கடி நிகழுகின்றன. அவர்களுடைய இல்லற வாழ்க்கை நரகவாழ்க்கையைவிடக் கேவலமானதாகி விடுகின்றது.

இத்துடன், மனைவியின் விஷயத்தில் மனக்கசப்படைந்த கணவன் தனது நோக்கத்தின்படியான வேறு சில பெண்களைக் கள்ளத் தனமாக நாடிக் கூடுகின்றான். இதேபோல் அவனுடைய மனைவியும் சிற்றின்பசுகத்திற்காகவும், மனவருத்தத்தை மாற்றிக்கொள்வதற்காகவும் வேறு சில ஆடவர்களை வெளிக்குத் தெரியாமல் நாடுகின்றாள். இந்தவிஷயம் பகிரங்கப்

படுகையில் அவர்களிருவரும் ஒருவரை யொருவர் தாக்கிச் சண்டையிட்டுக்கொள்கின்றனர். இருவருக்கும் அவமானமும் அபக்யாதியு மேற்படுகின்றது. தவிர, அவர்களால் மற்றும் பல பெண்களும், ஆண்களும் ஒழுக்கத்தை யிழந்து அவதியடைய வேண்டிய நிலைமைக்கு வந்துவிடுகின்றார்கள். பருவமடைந்தபிறகு விவாகம் நடக்குமாயின், ஆணும் பெண்ணும் தங்களுடைய வாழ்க்கைத் துணைவர்களைத் தாங்களாகவே தெரிந்து செய்துகொள்ளும் காலத்தையடைந்தபிறகு கலியாணம் செய்துகொள்ளுவார்களாயின், இத்தகைய அசம்பாவிதங்கள் இல்லறத்தில் ஏற்படுமாவென்பதை வாசகநேயர்கள் ஊன்றிக் கவனிக்கவேண்டும்.

மேற்படி காரணங்களைத் தவிர பாலிய விவாகத்தின் பயனாகப் பிறக்கும் குழந்தை சரீரப் பசையில்லாமலும், நோய்களினால் சுலபமாக பாதிக்கக் கூடியவர்களாகவுமிருக்கின்றார்களென்று அறிவாளிகள் சாற்றுகின்றார்கள். எனவே, இவ்வழக்கம் தொடர்ந்து அனுஷ்டிக்கப்பட்டு வந்தால் இந்தியர்களின் வர்க்கம் சரீர வலிமையும் மனோதிடமுமின்றி விரைவில் நசித்துப் போய்விடுமோ யென்று கூட அஞ்சவேண்டி யிருக்கின்றது.

## IV

பாலியவிவாகம் பண்டை இந்தியர்களின் வழக்கமென்றும், பருவமடைந்த பிறகு பெண்களுக்கு மணம் செய்விப்பது சாஸ்திர விரோதமானதென்றும் சனாதனிகள் சாற்றுகின்றனர். பாலியவிவாகம் சாஸ்திரவிரோதமாக இருப்பினும் நாட்டின் பொதுநன்மையை உத்தேசித்து இந்தக் கொடிய வழக்கத்தை ஏன் கைவிடக்கூடாது என்பது ஒருபுறமிருக்க, அவர்கள் விதண்டாவாதம் செய்வதைப் போல், பாலியவிவாகம் உண்மையில் சாஸ்திர விரோதமானதா வென்பதே தர்க்கத்திற் குறிய தாகும். "ஒரு வீட்டில் பெண்மணியொருவள் கண்ணீர் வடிப்பாளாயின் அந்த இல்லம் அடியோடு நாசமடைந்துவிடும் !" என்று எழுதிவைத்த மனு முதலான பெரியார்களின் காலத்தில் இத்தகைய கொடிய வழக்கம் அனுஷ்டானத்திலிருந்திருக்குமா வென்றே அனேகர் சந்தேகிப்பார்கள்.

உண்மையைச் சொல்லுமிடத்தில், வேத சாஸ்திர புராண இதிகாசத்திலோ அல்லது பண்டையர்களின் பழக்கங்களிலோ பால்யவிவாகம் வற்புறுத்தப் படவில்லை. அதற்கு மாறாக, பெண்களைப் புஷ்பவதியானபிறகு கட்டிக்கொடுக்கலா மென்பதற்கு அனேகம் சாஸ்திரப் பிரமாணங்களும் மலிந்து கிடக்கின்றன. உதாரணமாக,

> ஒரு பெண்ணை சோமன் அனுபவிக்கின்றான். ஸ்தனங்கள் பெருக்கும் சமயத்தில் கந்தர்வன் சேருகின்றான். புஷ்பவதியாகையில் அக்னிக்கு அவள் பத்னியாகின்றாள். மானிடபுருடன் அவளுடைய நான்காவது கணவனே. முதல் மூன்று கணவர்களின் சேர்க்கையால் அவள் சுத்தி யடைகின்றாளே யன்றி கற்பைப் பறிகொடுத்தவளாகவில்லை.

என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து விளங்குவதென்ன? பெண்களை பக்குவமான பருவதசையடைந்தபிறகே மணம் செய்துகொடுக்க வேண்டுமென்பது மேற்படி வேதப் பிரமாணத்தில் துவனிக்கவில்லையா? கற்





பனைப் பிரியர்களான பண்டையர்கள் சோமன், கந்தர்வன், அக்னி முதலான தேவதைகள் பெண்களைக் கலியாண மாகு முன் சேருவதாகச் சொல்லியிருப்பதானது கலியாணம் செய்துகொள்ளும் பெண் வயதிலும் அங்கவளர்ச்சியிலும் எப்படிப்பட்டவளாக இருக்கவேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டுவதற்கேயாகும். இதைத்தவிர மனு, ஜைமினி, நாரதர், அக்னி, பராசரர் முதலான பெரியார்கள்

> தம்பதிகள் விவாகமாகி மூன்று தினங்கள்வரை உப்பில்லாத ஆகாரத்தை உட்கொண்டு சரீர சம்பந்தமில்லாமல் இருத்தல்வேண்டும். நான்காவது நாள் தான் அவர்கள் சரீரசம்பந்தம் செய்யலாம்.

என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள். விவாகம் செய்துகொள்ளும் தம்பதிகள் பாலப்பருவத்தி லிருப்பின் நான்காம் நாள் சரீரசம்பந்தம் செய்வதெப்படி? பருவமடைந்தபிறகு திருமணம் செய்யும் வழக்கம் பண்டையர்களிடையே சர்வ சகஜமாக இருந்திராவிடில் மேற்படி ஸ்லோகத்தை எழுதிவைக்க அவசியம் மேற்பட்டிருக்குமா என்பது கவனிக்கத் தகுந்தது.

> ஒரு தகப்பன் தனதுபெண்ணை ருதுவாகி மூன்று வருடங்களாகியும் மணம் செய்து கொடுக்காம லிருப்பானாயின் அவன் கர்ப்பத்தைக் குலைத்த பாபத்திற்கு ஆளாகின்றான்

என்று கௌதமர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறுகிறார். இதிலிருந்து ருதுவானபின் பல வருடங்கள்வரை பெண்களை மணம் செய்து கொடுக்காமலே வைத்திருப்பது பண்டையர்களிடையே சகஜமா யிருக்கின்றதென்றும் ஆகையால் தான் இத்தகைய விதியை ஏற்படுத்தவேண்டிய அவசிய மேற்பட்டிருக்கிறதென்றும் தெளிவாகப் புலப்படவில்லையா?

இவைகளைத் தவிர, பிராமணர்களின் விவாகத்தில் நான்காம்நாள் நடைபெறும் சேஷமுகம் என்னும் ஹோமத்தில் மணமக்கள் கூறும் மந்திரங்களும் கவனிக்கத் தகுந்தவை. ஒரு மந்திரத்தில் மணமகள் கூறுகிறாள்:—

> "நாதா! நீர் என்னுடைய எண்ணத்தை அறிவீர். நான் உங்களை நேசிக்கின்றேன். நீங்கள் தபோமகிமையால் ஜ்வலிக்கின்றீர்கள். என்னைப்போல் நீங்களும் சந்ததியை விரும்புகின்றீர்கள். என் வயிற்றைக் குழந்தையால் நிரப்புவீர்!"

இந்த மந்திரத்திற்கு மணமகன் பதிலுரைக்கின்றான்,

> பெண்ணரசே! நீ என்னால் பிரஜையை அடைய இச்சிக்கின்றாய். உன்மேல் நானிருக்கும் சமயம் விஷய சுகத்தை நீ அனுபவிப்பாயாக. என்னால் உன்னுள் உன்னைப்போல் ஒரு குழந்தையைச் செய்துகொள்வாயாக.

மற்றொரு சந்தர்ப்பத்தில் மணமக்கள் கூறுகின்றனர்:—

> இந்த சங்கமத்திற்கு அனுகுணமான வார்த்தைகளை சரஸ்வதி நமக்குக் கற்பிப்பாளாக.

## V

சகோதர சகோதரிகளே! மேற்படி சுலோகங்களிலிருந்தும், சாஸ்திரப்பிரமாணங்களிலிருந்தும் பண்டையர்கள் தங்க

ளாது பெண்களை ருதுவான பிறகு தான் மணம் செய்து கொடுத்திருக்கிறார்களென்பதும், பாலிய விவாகம் அவர்களுடைய சம்மதத்தைப் பெற்றதல்லவென்பதும் தெளிவாகப் புலப்படவில்லையா? இந்த வேதப் பிரமாணங்களை சனாதன இந்துக்கள் தங்களுடைய குறுகிய மனப்போக்கின்படி கோணலாகத் தாத்பர்யம் செய்து கூறலாம். ஆயினும் அவர்களால் உண்மையை மறுக்கவும் மறைக்கவும் முடியாது.

ராஜாராம் மோகன்ராய், திரு. ஹரிபிலாஸ் சாரதா முதலான சீர்திருத்தப் பிரியர்களின் முயற்சிகளின் பயனாக பாலிய விவாகமென்னும் கொடுமை இப்பொழுது சிறிது சிறிதாகக் குறைந்து வருகின்றது. ஆயினும் இது சம்பந்தமாகக் கிரியாம்சத்தில் இதுவரை செய்யப்பட்டிருக்கும் சீர்திருத்தம் மிகமிகச் சொற்பமே யாகும். இந்தச் சீர்திருத்தத்தை தீவிரமாக அமுல் நடத்திவைக்க வேண்டுமானால் இளைஞர்களும் யுவதிகளும் துணிவோடு முன் வருதல்வேண்டும். நாம் செய்வது நமக்கும் நாட்டிற்கும் நன்மையானதே என்ற உணர்ச்சியோடு இளைஞர்களும் யுவதிகளும் பருவமடைந்த பிறகு தான் திருமணம் செய்துகொள்வோம் என்று பிடிவாதமாக இருத்தல் வேண்டும். பாலியவிவாகக் கொடுமை இருப்பதும் மறைவதும் இளைஞர்களையும் யுவதிகளையுமே பொருத்திருக்கின்றது. இந்தக் கொடுமைக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்ததைப்போல் அவ்வளவு ஆதரவு இப்பொழுது கிடையாது. சுருங்கக்கூறுங்கால் பாலியவிவாகப்பேய் நவ இந்தியாவி லிருந்து விரைவாக மறைந்துவிடவே விரும்புகின்றது. விட்டொழிய விரும்பும் பேயைக் கட்டி யழுதுகொண்டிருப்பது நமது மடமையையே பிரதிபலிப்பதாகும்.

## பர்தாவுக்குத் தடை உத்தரவு

அல்பேனியா சர்க்கார் அல்பேனியாவில் பெண்கள் எக்காரணம் கொண்டும் முகமூடிகள் தரிக்கக் கூடாதென்று தடையுத்தரவு பிறப்பித்து விட்டது. சமீபத்தில் அல்பேனியாவின் ஜோகு மன்னர் செய்த பிரசங்கங்களிலிருந்து இன்னும் பல சீர்திருத்தங்கள் விரைவில் ஏற்படுமென்று கூறப்படுகிறது. இம்மன்னரின் சகோதரிகள் மூவரும் மத வைராக்கியம் அதிகமாகக் குடிகொண்டிருக்கும் ஸ்குட்டாரி ஜில்லாவுக்கு விஜயம் செய்தார்கள். அவர்களை ஜனங்கள் உற்சாகமாக வரவேற்றார்கள். அவர்கள் சமூகச் சீர்திருத்தத்தின் அவசியத்தை வற்புறுத்திப் பிரசங்கங்கள் செய்தார்கள். விரைவில் ஜெர்மனியைப்போல் அல்பேனியாவில் சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டு விடுமென்று வதந்திகள் உலாவுகின்றன.






மார்வாடிப் பெண்



ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் பி. ஏ.



ஸ்ரீமதி வேமராஜு சுசிலா
சிறந்த ஆந்திர கட்டுரையாளர்.



ஸ்ரீமதி முடிம்பி லக்ஷ்மிதேவி
ஆந்திர வியாச கர்த்தா.

# ஸ்ரீமதி ருக்மணியம்மாள் பி. ஏ.

## ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயலக்ஷ்மி

பெண் கல்வி முன்னேற்றத்திற்காக பல விதங்களிலும் பாடு பட்டு உழைத்து வரும் பெயர் பெற்ற உத்தம இந்திய ஸ்திரீ ரத்தினங்களில் ஸ்ரீமதி ருக்மணியம்மாள் பி.ஏ., ஒருவர். இம்மாதரசி நமது தென்னிந்தியாவில், அதுவும் மைசூர் சமஸ்தானத்தில் பெண் கல்வி முன்னேற்றத்திற்காக உழைத்துப் பல உபகாரங்கள் செய்திருக்கிறார். இவரது கல்விச் சிறப்பும், உழைப்பும், மதிப்பும், சத்குணங்களும், சாமர்த்தியமும், வாக்குவன்மையும் இந்தியா முழுவதும் புகழப்படுகிறது. இவ்வம்மை ஏழைகளின் தாய், மாணவிகளின் குரு, பால்ய விதவைகள், ஏழை அனாதைகளின் துணைவர், இந்தியப் பெண்மணிகளின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் உழைக்கும் பாரதப் புதல்வி.

இக்கல்விக் களஞ்சியம் மைசூர் நகரிலிருக்கும் மஹாராணி பெண்கள் கலாசாலையின் தலைமை ஆசிரியர் பதவியை (Principal) பலவருடகாலங்கள் அலங்கரித்து, தற்பொழுது உத்தியோகத்தினின்று விலகி உபகாரச் சம்பளம் பெற்று வருகிறார். இவ்வளவு நாட்கள் பொது சேவை செய்து வந்ததுமின்றி, தற்சமயமும் தனது முதிர்ந்த வயதிலும் கூட தனது சக்திக்கு மீறி பொது சேவை செய்து வருகிறார்.

### பிறப்பு

ஸ்ரீமதி ருக்மணியம்மாள் 1877-ம் வருஷம் மைசூர் சமஸ்தானத்தின் தலை நகரமாகிய மைசூர் நகரில் பிறந்தார். இவரது பிதாவாகிய நங்கபுரம் ராமஸ்வாமி அய்யங்கார் மைசூர் மஹாராஜாவின் அரண்மனையில் ஓர் சிறு உத்தியோகத்திலிருந்தார். நங்கபுரம் ராமஸ்வாமி அய்யங்கார் மிக்க எளியகுடும்பத்தைச் சார்ந்தவரானாலும் மிகவும் கண்ணியமான புருஷர். இவருக்கு எட்டு குழந்தைகள். நிறைந்த குடும்பத்தில் பிறந்த ருக்மணியம்மாள் குழந்தைப் பருவத்திலிருந்தே வெகு சுறு சுறுப்பாகவும், தீக்ஷண்ய புத்தியுடனும் கல்விப் பிரியமுடைய வராகவும் விளங்கினார். குழந்தையின் புத்திசாலித்தனத்தைக் கண்டு அன்னையும் பிதாவும் அளவு கடந்த ஆனந்தத்துடன் சிறுமியின் இஷ்டப்படியே படிப்புச் சொல்லிக்கொடுத்து, நாளடைவில் பள்ளிக்கூடத்திலும் சேர்த்தார்கள்.

### கல்வி

குழந்தைப் பருவத்திலிருந்தே வித்யா பிரியை ருக்மணியம்மாள். மைசூர் சமஸ்தானத்தின் கல்வி இலாகாவால் புதிதாக ‘லோயர் செகென்டரீ எக்ஸாமினேஷன்” (III Form) நடந்த முதல் பரீட்சைக்கு உட்கார்ந்த மாணவர்களின் கூட்டத்தில் இவர் ஒருவர். அதில் முதன்மை ஸ்தானத்தில் ருக்மணியம்மாள் தேறிவிட்டார். அப்பொழுதிருந்தே இச்சிறுமியின் கல்வித்திறமையைக் கண்டு எல்லோரும் புகழ வாரம்பித்து விட்டனர். பின்பு படிப்படியாகப் படித்து 1899-ம்

வருஷம் F.A., வகுப்பில் மாதம் 25 ரூபாய் விசேஷ (Special Scholarship) உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு வியாசங்கம் செய்ய வாரம்பித்தார். இந்தப் பரீக்ஷையிலும் இவர் முதன்மையாகவே தேறினார். அந்த வருடம் தான் மைசூர் மஹாராணி கலாசாலையில் எப்.ஏ. வகுப்பு ஏற்படுத்தினார்கள். அவ்வகுப்பிற்கு இவர் ஒரு எக்ஸ்பெரிமெண்டல் ஸ்டூடெண்டாக விளங்கினார். இவருடன் F.A., வகுப்பில் இன்னுமிரண்டு மாணவிகள் வியாசங்கம் செய்து வந்தனர். இம்மூவர்களில் பரீக்ஷையில் தேறுபவர்களுக்கு காலேஜில் உத்தியோகம் கொடுப்பதாக சர்க்கார் வாக்களித்திருந்தனர்; பரீக்ஷையில் ருக்மணியம்மாளே தேறினார். மற்றிருவருக்கும் பரீக்ஷை தவறிவிட்டது. அவருக்கு உடனே 150 ரூபாய் சம்பளத்தில் மைசூர் மஹாராணி காலேஜில் ஆசிரியை வேலையும் கிடைத்து விட்டது. ஆனால் இவர் ஒருவருக்கு மட்டும் B.A. வகுப்பு வைப்பதற்கு சர்க்கார் மறுத்து விட்டனர். மற்றிரு மாணவிகளும் F.A., பரீக்ஷை தேறிவரும் வரைக்கும் இவரும் காத்திருந்து, அப்புறம் உத்தியோக வேலையையும் கவனித்துக்கொண்டு, அதன் கூடவே B.A., பரீக்ஷைக்கும் படித்து வந்தார். 1905-ம் வருடம் B.A., பரீக்ஷையிலும் தேறி விட்டார். மைசூர் சமஸ்தான ஸ்திரீ பட்டதாரிகளிலேயே, இவ்வம்மை தான் முதல் முதல் பட்டம் பெற்ற பெண்மணி யாவர்.

## கல்யாணம்

ஸ்ரீமதி ருக்மணியம்மாளுக்கு அவரது பதினொன்றாம் பிராயத்திலேயே, அவரது தந்தை, மைசூரிலேயே வசித்து வந்த கவி வரதாசாரியாரின் புதல்வருக்குக் கொடுத்து மணம் முடித்தார். இவரது கணவர் மைசூர் சமஸ்தானத்திலிருக்கும் 'கடூர்' ஜில்லாவில் சிக்கமகளூர், காப்பி ப்ளேன்டேஷனில் ஏஜண்டாக வேலை செய்து வந்தார்.

## உத்தியோகம்

ஸ்ரீமதி ருக்மணியம்மாள் 1900-ம் வருஷத்தில் மைசூர் சர்க்கார் உத்தியோகத்திலமர்ந்தார். அவ்வம்மை, தான் உத்தியோகம் பார்த்து வந்த கலாசாலைக்கும், தென்னிந்திய பெண்மணிகளுக்கும் அளவு கடந்த உபகாரங்கள் செய்திருக்கிறார். மஹாராணி பெண்கள் கலாசாலையை 1916-ம் வருடம் மைசூர் சர்க்கார் ஹைஸ்கூலாக ஆக்கிவிட வேண்டுமென்று அபிப்பிராயப்படவே, பலகாரணங்களையும் சர்க்காருக்கு எடுத்துக்காட்டி, அக்கலாசாலையை ஹைஸ்கூலாக்காமல் தடுப்பதற்காக சர்க்காருடன் வெகுதிறமையுடன் மன்றாடி காரியசித்தி யடைந்து பலராலும் போற்றப் பெற்றார். மறுபடியும் நான்கு, ஐந்து வருடங்களில் இக்கலாசாலையை பெங்களூருக்கு மாற்றிவிட வேண்டுமென்று சர்க்கார் தீர்மானித்தனர். அப்பொழுதும் கூட ஸ்ரீமதி ருக்மணியம்மாள், தான் வேலையிலிருந்து விலகிக்கொண்டிருந்த போதிலும் கலாசாலையின் சார்பாக மன்றாடி மறுபடியும் அதை மைசூரிலேயே நிலையாக இருக்கும்படி செய்தார். இவ்வுத்தமி தன் உத்தியோக பதவியில் ஓர் லெக்சரராக ஆரம்பித்து, கலாசாலை ப்ரின்ஸிபால் பதவி வரைக்கும் உயர்ந்து, இப்பதவியில் பல வருடகாலம் இருந்து வேலைசெய்து, கலாசாலையைப் பலமுறைகளிலும் முன்னேற்றம் அடையச் செய்தார். 1932-ம் வருடம் உத்தியோகத்திலிருந்து விலகிக்கொண்டு, உபகாரச் சம்பளம் பெற்று வந்தாலும் கலாசாலையின் வளர்ச்சியில் கவனம் காட்டி வருகிறார்.





## பொதுசேவை

ஸ்ரீமதி ருக்மணியம்மாள் (All India Women's Conference) அகில இந்திய மாதர் சம்மேளனத்தின் அங்கத்தினராகவும், மைசூர் சமஸ்தான மாதர் சம்மேளனத்தின் காரியதரிசியாகவும் இருந்து பெண்களின் நலனுக்காக கணக்கற்ற உபகாரங்களும், நற்காரியங்களும் செய்து வருகிறார். மேலும் தானே மைசூர் மாதர்களின் உபயோகார்த்தமாக 1918-ம் வருடம் மைசூரில் ஓர் மஹிளாசாமாஜத்தையும் ஏற்படுத்தி, அதற்கு இன்று வரையிலும் தலைமை வகித்து (President) வெகு திறமையுடன் வேலை நடத்தி வருகிறார். இந்த சங்கத்தில் ஸ்திரீகளுக்கு ஹிந்தி, ஆங்கிலம், தையல் வேலை எம்ப்ராய்டரி வேலை, பாட்டு முதலிய குஸல வித்தைகள், படிப்பு, முதலியவை கற்றுக் கொடுக்கப்படுகிறது. அவ்வப்பொழுது சங்கத்தில் பாட்டுக் கச்சேரிகள், பெண்கல்வி, சிசு சம்ரக்ஷணை, முதலிய ஸ்திரீகளுக்கு உபயோகமான விஷயங்களைப் பற்றி பிரசித்தி பெற்ற உத்தமப்பெண்களின் மூலம் உபன்னியாசங்கள் முதலியனவும் நடத்தப்படுகின்றன. ருக்மணியம்மாளும் அனேக அரிய உபன்னியாசங்கள் செய்து ஜனங்களின் ஞானத்தை விருத்தி செய்கிறார். சென்ற மகாயுத்தத்தின் பொழுது இவரது சமாஜம், மாதம் 25 ரூபாய் வீதம் யுத்த சகாயம் செய்து வந்ததாம். அல்லாமல் பீஹார் பூகம்ப கஷ்ட நிவாரணகாரியம், குவெட்டா பூகம்ப கஷ்ட நிவாரண காரியம் முதலிய கஷ்ட நிவாரணங்களுக்கு பலவித சகாயங்கள் செய்து வருகிறது. உள்ளூர் ஏழை, எளியவர்களுக்கும் இந்த சமாஜம் பலவிதங்களிலும் உதவியளித்து வருகின்றது. இந்த சமாஜத்தில் நூற்றுக் கணக்கான அங்கத்தினர்களிருக்கிறார்களென்பதில் ஆச்சரியமொன்று மில்லை. இவ்வம்மை கிராமப் புனருத்தாரணம், சிசுசம்ரக்ஷணை முதலிய காரியங்களிலும் ஈடுபட்டு வருகிறார். சர்க்கார் பெண் பாடசாலைகள் இல்லாத கிராமங்களில் பாடசாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார். கிராமப் பெண்களிடம் பெண் குழந்தைகளைப் பள்ளிக்கூட மனுப்புதல், சிசுசம்ரக்ஷணை, வீடு வாயில்களையும், குழந்தைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல் முதலிய விஷயங்களை தெளிவாகப் போதித்து, அவர்களது வேண்டுகோள்களை செவி கொடுத்துக் கேட்டு, உதவி செய்து கிராமப் பெண்களின் அன்பையும் பெற்று வருகிறார்.

இவ்வம்மை தனது முதிர்ந்த வயதிலும் கூட சுமார் இருபது வயது நங்கைக்கிருக்கும் உத்ஸாக பலத்துடன் பொது சேவையிலீடுபட்டு, சிரமத்தைக் கவனியாது வேலை செய்து வருவது வெகு ஆச்சரியமே.

மைசூர் தேசப் பெண்டிர் திலகமாகிய ஸ்ரீமதி கே. டி. ருக்மணியம்மாள் 1920-ம் வருடத்திலிருந்து மைசூர் சமஸ்தான செனெட் மெம்பராக விருந்து வருகிறார். சென்ற மூன்று வருடகாலமாக மைசூர் ஜில்லா போர்ட் மெம்பராகவும், மைசூர் சமஸ்தான பிரஜாபிரதிநிதி சபையின் அங்கத்தினராகவும் இருந்து வருகிறார். சமீபத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்தில்

கூடிய அகில இந்திய மாதர்கள் சம்மேளனத்திற்குச் சென்று பெண்களின் முன்னேற்றத்திற்கான அநேக அரிய விஷயங்களைப்பற்றி பேசினுரென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அலஹாபாதில் நடந்த சம்மேளனத்திற்குப் போவது அவரது தேக அசௌக்கியத்தின் பேரில் தடைப்பட்டு விட்டதால், மூன்று மாதங்கள் வரையில் சென்னையில் காற்று மாற்றத்திற்காக இருந்து விட்டு இப்பொழுது தான் மைசூர் திரும்பியுள்ளார். இவரைக் கண்டால் மைசூர் மகாராஜாவின் தாயாராகிய காலஞ்சென்ற மகாராணி வாணீ விலாஸ் ஸன்னிதானம் அவர்களுக்கு மிகவும் பிரியம். மகாராணியார் இவ்வம்மைக்குப் பலவிதங்களில் உதவி புரிந்திருக்கிருர்.

அகில இந்திய மாதர்கள் சம்மேளனம் ஏற்படுவதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்பே, இந்த யோசனை இவருக்கு உதித்து விட்டது. மைசூரில், ஐந்துவருடகாலம் வருடா வருடம் நவராத்திரி சமயத்தில் மைசூர் சமஸ்தான மாதர் சம்மேளனம் ஒன்றைக் கூட்டி, இவ்வம்மை வெற்றியுடன் நடத்திவந்தார். அகில இந்திய மாதர் சம்மேளனம் ஏற்பட்டவுடன் இந்த சம்மேளனத்தையும் அதனுடனேயே சேர்த்துக்கொண்டு வேலை நடத்தி வருகிருர்.

## குடும்பம்

இவ்வம்மைக்கு இருப்பது ஒரே பெண். ஸ்ரீமதி ருக்மணியம்மாளின் கணவரோ 1917-ம் வருடமே மரணமடைந்தார். பெண்ணைத் தானே படிக்கவைத்து, கலியாணம் சாந்தி செய்து முன்னுக்குக் கொண்டு வந்தார். "நூலைப்போல சேலை, தாயைப்போல பிள்ளை" என்னும் பழமொழிக் கேற்றவாறு இவ்வுத்தமியின் புதல்வியாகிய ஸ்ரீமதி ஏ. டி. லக்ஷ்மம்மாள் எம்.ஏ., எல்.டி., யும் தாயைப் போலவே பூர்ணகல்வி பெற்று, மைசூர் மஹாராணிக் கலாசாலையிலேயே உப ஆசிரியையாக விருந்துக்கொண்டு, பொதுஜனத் தொண்டிலும் ஈடுபட்டு வருகிருர். தாய் பெண்களிருவரும் நீடூழிகாலம் வாழ்ந்து, பேரும் புகழுமடைந்து, தென்னிந்திய பெண்மணிகளுக்கே பூஷணமாக விளங்கட்டுமென்று பராசக்தியைப் பிரார்த்திக்கிறேன்.



# மதனலீலையார்

ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள்

உலகத்தில் அரிய கல்வியும் பெரிய செல்வமும் ஒருங்கே வாய்ந்த ஆடவரையேனும் பெண்டிரையேனும் காண்டலரிது.

"இரு வேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்பது பொய்யா மொழியன்ரே? இவ்விரு இலக்கணங்களும் நன்கமைந்த ஸ்திரீ புமான்களைத் தனித்தனிக் காண்டலே அரிதாயின், அவர்களை ஒத்த கிழவனும் கிழத்தியுமாய் யாவரும் புகழும் மேவரும் சிறப்பினை உடையோராய் வாழக்காண்டல் எவ்வளவு அருமை.

ஆயினும் அமிழ்தினும் இனிய செந்தமிழ் மணம் கமழ்கிற மதுரை என்னும் மாநகர் தன்னை ஆண்டுவந்த பாண்டியர் குலமே இத்தகையோர் சிலரைப் பெறும்படியான பெரும்பேறு பெற்றுள்ளது. அவ்வாறு சிறந்தோங்கிய சிலருள் வாதுங்காாம பாண்டியனது ஆருயிர்த் துணைவியாகிய "மதன லீலையார்" என்பவளது சரித்திரமே நாம் ஈண்டு எடுத்துக்கொண்ட விஷயமாகும். ஆனுல் நாம் இங்கு சொல்ல வேண்டியது ஒன்று உண்டு. புலவர் பெருமக்களின் ஜீவிய சரித்திரம் எழுதும் வழக்கம் நம்மவரிடத்தில் இல்லாமற்போன பெருங்குறையால் இச் சரித்திரம் எழுதுவதற்குப் போதுமான ஆதாரம் எவர்க்குமே நாளைவரைக் கிடைத்திலது. ஆயினும் கர்ண பரம்பரையாகவும் என்னிலும் கல்வி யறிவு, ஒழுக்கங்களில் சிறந்த பெரியோர்கள் மூலமாகவும் கேட்டு உணர்ந்த சிற்சில விஷயங்களையே ஈண்டுக் குறித்துளேன்.

நுண்ணிய அறிவும், திண்ணிய கற்பும் வாய்ந்த இந்நல்லிசைப் புலமை மெல்லியலாரது சிறப்பு பின்வரும் விஷயங்களால் நன்கு விளங்கும் :—

இன்றைக்கு ஏறக்குறைய நானூற்றுச் சில்லரை வருஷங்களுக்கு முன்னே செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலை நகராகிய மதுராபுரியில் சந்திரவம்சத்தவனுய் ஆண்டுவந்த பாண்டிய நாட்டின் மன்னன் வாதுங்காாம பாண்டியன் என்பவன். இவனுக்கு அதிவீரராம பாண்டியன் என்ற ஓர் தம்பி உண்டு. சகோதரர்கள் இருவரும் நூலாராய்ச்சியும் தமிழ் பாண்டித்தியமும் பெரிதுமுடையோர். ஆனுல் இவர்களில் இளையோனுகிய அதிவீர ராம பாண்டியனே கற்றறி மூடனுய் வெய்யர், பதகர், பாதார விருப்பர், வீணர், கையர், கயவர், பொய்யர், புலையர் முதலிய பல கீழ் மக்களோடு சேர்ந்து தனது காலத்தைக் கழித்து வந்தான். இவன் தன் கௌரவத்திற்கு ஏற்றபடி இராமல் கண்டவருடன் சேர்ந்து ஈனமான காரியங்களைச் செய்து வந்ததினுல் இவனை யாவரும் "பிள்ளை பாண்டியன்" எனக் கூறத் தலைப்பட்டார்கள். இவன் காம கலா ஞானத்தில் கைதேர்ந்தவன். ஆதலின் சாமுத்திரிகா லக்ஷணம் பூரணமாய் அமைந்த பெண்கள் தன் குலத்தில் எவ்வளவு சிரமப்பட்டுத் தேடியும் கிடையாமற் போனமையால், அவ்விலக்ஷணம் யாவும் குறைவற வாய்ந்த சக்கிலியப் பெண் ஒருத்தியைக் கடிமணம் புரியலாயினன்.

தமையன் தன் தம்பியைச் சீர்திருத்த முயன்றும் முடியாமற்போகவே தன் முகத்தில் என்றென்றும் விழியாதிருக்குமாறு அவனைத் தனது நாட்டினின்றும் ஓட்டி விட்

டான். தூர்த்துண்ட அதிவீரராமன் சில மூர்க்கர்களின் உதவியால் தற்காலம் தென்காசி என வழங்கும் "கொற்கை" எனும் நாட்டைப் பிடித்து அதற்கு அரசனாகி அழகும் கல்வியும் அமைந்த அவ்விழிகுலப் பெண்ணோடு இல்லறம் நடத்துவானாயினான்.

அதிவீரராம பாண்டியன் தமிழ்ப் பாண்டித்யம் பெரிதுமுடையவனாயும், கல்விப் பிரியனாயுமிருந்ததால், பொழுதுபோக்க, தன் போன்று சந்திரவம்சத்தில் தோன்றி நிஷத புரியை ஆண்ட நளராஜனது திவ்விய சரித்திரத்தை விருத்தாப்பாவில் எழுதி முடித்து அதற்கு "நைடதம்" என்று பெயரிட்டான். தான் செய்த நூலின் சொல் நயம், பொருள் நயம், கற்பனை முதலியவற்றைக் கண்டு மகிழ்வெய்தியதோடு நில்லாமல் பற்பல தேசங்களிலுமுள்ள புலவர் பெருமக்களை வரவழைத்து அவர்களுக்கும் தன் நூலைப் படித்துக்காட்டி அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டான். அவன் தயவை எதிர்பார்த்த சிலர், "நைடதம் புலவர்க்கு ஔடதம்" என்றனர். அவன் பரமதுஷ்டனாகையால் அவனது தண்டனைக்கு அஞ்சியோரும் சிலருண்டு. ஆயினும் அவர்களுக்குத் தங்கள் மனசாட்சிக்கு விரோதமாக நூலைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொடுக்க மனம் இல்லை. ஆதலின் அவர்கள் அரசனையும் தம்மையும் திருப்திப் படுத்திக்கொள்ளுமாறு அந் நூலின் நடை "கரும்பு போன்றிருக்கிறது" எனக் கூறினர். இவற்றை எல்லாம் கேட்ட அதிவீர ராமன், உளம் பூரித்துத் தன்னைவிடச் சிறிதும் கல்வியில் தாழாத் தன் தமையனுக்கு ஓர் பிரதி அனுப்பி அவனது அபிப்பிராயமும் வேண்டினான். அது வந்து சேர்ந்த சமயம் வரதுங்கன் இராஜாங்க விசாரணையில் தனது முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்த காலமாயிருந்தது. ஆதலின், அவன் தனது இன்னுயிர்த் தோழியாகிய மனைவி கையில் அதைக் கொடுத்து அவளையே அதன் குணதோஷங்களைக் கண்டறிந்து அதி வீர ராமனுக்கு அறிவிக்குமாறு ஆக்ஞாபித்தான். அக் கற்பரசியும் அதை ஆதியோடந்தமாய்ப் படித்து "அதன் நடை வேட்டை நாய் நடை போன்றது" என அறிவித்தாள். இவ்வபிப்பிராயம் பெற்ற அதிவீர ராமனுக்குக் கோபத்தால் முகம் பொங்கியது. ஏனெனில் "கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றவர்கள் 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என்றும் அதன் நடை கரும்பு போன்றிருக்கிறது" என்றும் கூறியிருக்க, கேவலம் பெண்ணாய்ப் பிறந்த ஒருத்தி "வேட்டை நாய் போலிருக்கிறது" எனத்துணிந்து சொல்லலாமா என்று நினைத்தான். தவிரவும் தான் அபிப்பிராயம் வேண்டியது தன் தமையனிடத்திலிருந்தே. ஆதலால் தமையன் தன்னை அவமதிக்க வேண்டுமென்றே தன் மனைவியின் மூலமாகத் தன்னை அவமானப்படுத்தினான் எனக் கருதினான்.

இவ்விதமாக அவன் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி உன்னி மனம் புழுங்கி தன்னை அவமதித்தவனை தக்கபடி சிக்ஷிக்கக் கருதி நால்வகைப் படைகளுடனும் புறப்பட்டு வரதுங்கனது இராச்சியத்துட் பிரவேசித்து யுத்த பேரிகை முழக்கினான்.

அதிவீர ராமன் போர்க்கோலம் பூண்டு வந்திருக்கும் செய்தி வரதுங்கனுக்கு எட்டவே, அவன் தம்பி பால் ஓர் தூதனை விடுத்துப் போருக்குக் காரணம் கேட்டறிந்தனன். பிறகு அவன் தன் மனைவியை யழைத்து "பெண்கள் நாயகமே; "பெண்புத்தி பின்புத்தி" என்பதற்கேற்பக்காரியத்தைச் செய்து முடித்தனையே. முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாவே. நம்மிருவருக்கும் சம்பவிக்கும் அபாயத்தைக் கருதி இது யான் சொல்ல வரவில்லை. ஏனெனில், வெற்றியோ, தோல்வியோ இருதிறத்தாருக்கும் பொது ஆயினும் இருகக்ஷியிலும் எவ்வளவு உயிர்ச்சேதம் நேரிடக்கூடும் என்பதை நினைக்குங்கால் என்மனம் வருந்துகின்றது. இதற்கு யாம் என் செய்வது" என்றனன்.





அதற்கு அவள் "அன்பே! யான் இச் சண்டைக்குக் காரணமாவது எப்படி? அதிவீர ராமன் வேண்டியது அபிப்பிராயமா? புகழ்ச்சியா? அவன் அபிப்பிராயமே வேண்டியதால் நானும் அபிப்பிராயமே கொடுத்தேன். இருக்கட்டும். இதற்காக வருந்த வேண்டாம். 'அறிவன் பகையேனும் அன்பு சேர் நட்பாகும்,' கூடுமாயின் ஓர் உபாயத்தால் நேர் வழியிலேயே சண்டையை நிறுத்தப் பார்க்கிறேன்" எனக் கூறி, ஓர் ஏடும் எழுத்தாணியும் எடுத்து, "இருந்திருந்தும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தும் பிரூத துரோகிகளாய்ப் போய் விட்ட ஸூரிய புத்திரனாகிய ஸுக்கிரிவன்; லங்காதிபதியான விபீஷணன், பஞ்சபாண்டவர்களில் ஒருவனாகிய அருச்சுனன் ஆகிய இம் மூவருடைய உதாரணத்தையுமா நீர் பின்பற்ற வேண்டும்? தமையன் சொல்லை வேத வாக்காய்க் கருதி நடந்து வந்த பரதனை அறியீரோ? ராமனும் பரதனும் யாவர்? உங்கள் இருவரையும் போல ஒரே தாய் வயிற்றில் உதித்தவர்கள் கூட இல்லையே? மாற்றாந்தாய் மக்களன்றோ? அப்படி இருந்தும் அவர்களுடைய பால்ய நேசம் எத்தன்மையது? நீரும் பரதனுடைய உதாரணத்தைப் பின் பற்று வீரானால் நம் குலத்திற்கே எவ்வளவு பெருமை!" என்ற கருத்தையடக்கி,

"செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும், பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே—விஞ்சு, விரதமே பூண்டிந்த மேதினியை ஆண்ட பரதனையும் ராமனையும் பார்"

என்ற வெண்பா எழுதி அதனை அவனிடம் போக்கினளாம்.

அதிவீர ராமன் அதை வாங்கிப் படித்து அதில் கூறியவற்றின் பொருளைச் சிந்திப்பானாயினான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் கைப்பிடித்த வாளாயுதம் அவனை அறியாமலே நழுவிக் கீழே விழுந்தது. இரண்டுகண்களினின்றும் நீர் ததும்பியது. அவன் தனது தகாத செய்கைக்காக அத்தியந்த விசனமடைந்து தனது சைந்நியங்களைத் தக்ஷணமே தன்னூர் போய்ச் சேரும்படி ஆக்ஞாபித்து, அண்ணன் அண்ணியாரைத் தரிசித்து, அவர்கள் திருவடிக் கமலங்களில் வீழ்ந்து, "சிறியோர் செய்த பிழை எல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என இரந்தனன்.

இது நடந்த சில நாட்களுக்குப் பிறகு அதிவீரராமன், "அண்ணா! தொல்லிலசைப் பயனார் நல்லிசைப் புலவர் கட்கெல்லாம் கரும்புபோன்றிருக்கும் எனது நூலின் நடை அண்ணியார்க்கு மட்டும் வேட்டைநாய் போன்றிருப்பானேன்" என விநயமாய்க்கேட்க, அவன் "உனது அண்ணியாரையே கேட்டுத் தெரிந்து கொள்" என்றான். அவனும் அவளை அப்படியே கேட்க அவள் "வேட்டைநாய் வேட்டை பிடிக்கும் போது உள்ள சுறு சுறுப்பும், அது வேட்டை முடிந்து வீட்டுக்குத் திரும்பும் போதுள்ள சோர்வும், மந்தகதியும், நீர் அனுபவத்தில் கண்டறிந்திருப்பீரே" என்றனள். அதற்கவன் "ஆம், ஆம், அப்படிப்போல?" என்றனன். "அப்படிப்போல் உமது நூல் நடையும் வேட்டைநாய் நடைபோலவே ஆரம்பத்தில் குதூகலமாய்த்தான் ஓடுகிறது. ஆயினும் அதன் ஓட்டமெல்லாம் புனல்விளையாட்டுப் படலம் முடியும் மட்டே. காரணம் அறியக் கஷ்டம் சிறிதும் இல்லை. நீர் ஓர் சிற்றின்பப் பிரியர் என்பதை உமது நூலாலேயே வெளிப்படுத்திக் கொண்டீர். உமதுநூல் உருவ கணியாதிய இலட்சணங்களாற் சிறந்ததேனும், சிற்றின்ப வர்ணனைகளே அக்காண்டம்வரை அதில் பெரும்பாலும் நிறைந்துள. எஞ்சிய காண்டங்களிலும் இத்தகைய விசேஷத்தை உம்மால் கூடியவரை நுழைக்கத்தான் பார்த்தீர்; ஆயினும் முடியவில்லை. ஆதலால் வெகு கஷ்டப்பட்டு வேண்டா வெறுப்பாய்ச் சிற்சில பாக்களைப் பாடி நூலை முடித்திருக்கின்றீர். யான் கூறியது உண்மைதானா?" என்றாள். இதைக்கேட்டவுடன் அவன் உத்தரம் சொல்லாது நின்று,

சிறிது நேரத்திற்கெல்லாம் "உண்மையே ஆயினும், புலவர் பெருமக்கள் என் நூலின் நடை கரும்பு போன்றுளது எனக் கூறினர் என்று எனக்குப் புலப்படவில்லை," என்றனன்.

அதற்கு அவள், "மைத்துனரே! அவர்கள் சொல்லியது வஞ்சகப் புகழ்ச்சியே யாகும். நீர் தமயனுக்கே அடங்காத் தறிதலையாதலின் அவர்கள் உனது ஆக்ஞைக்கு அஞ்சியே இவ்வாறு உரைத்திருக்க கூடும். ஆயினும் அவர்கள் வாக்கும் பொய்யாகாது. நீர் கூறிய புலவர்களும் யான் கொண்ட கருத்தே கொண்டவர்கள்தான். எவ்வாறெனில் கரும்பு எப்படி ஆரம்பத்தில் அதிக இனிமையும் ருசியாயுமிருந்து கொழுத்தாடைபக்கம் போகப்போக குறைந்துவிடுகிறதோ, அப்படியே உமது நூலின் நடையும் ஆரம்பத்தில் இனிமையாயிருந்து கடைசியில் போகப்போக இனிமை குன்றியுள்ள தென இரகசியமாய் வெளிப்படுத்தினர். அன்றியும் கஷ்டப்பட்டுச் சாரத்தைக் கிரகிக்க வேண்டியிருப்பதாலும் அதனை கரும்புக்கு அவர்களிற் சிலர் உபமித்து இருக்கலாம். இது உமக்குத் தெரியாமற் போயிற்றே" என்றாள்.

இதனைச் செவியுற்ற அதிவீரராமன் நாணித் தலை கவிழ்ந்து வாயடங்கி நிற்க, அவனுடைய அண்ணியார், இதுதான் அவனைத் திருத்தி நல்வழிப்படுத்தத் தக்க சமயம் எனத் தேர்ந்து அவனை நோக்கி, "மைத்துனரே? நான் ஒன்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். யான் புகல்வது கடுமொழிபோற் காணப்படினும் இன்சொல் எனவே ஏற்குமாறு வேண்டுகிறேன். வேறொன்றும் இல்லை. உமது படிப்பெல்லாம் விழலுக் கிறைத்த நீர்போல் வீணாயிற்றே என்று விசனப்படுகிறேன். "கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழல்" அன்றோ? உமது கல்வித்திறத்தை இது போன்ற சிற்றின்பாதிகளிற் காட்டாமல் பேரின்ப விஷயமாய் யாதேனும் ஓர் நூல் செய்வதில் உபயோகித்திருப்பீராயின் எத்துணை பெருமையாய் இருக்கும்," என்றாள். அவன், தனது மூடத்தனத்திற்கு இரங்கி தான் முன்பு பெண் என அவமதித்த பேரறிவுடையாளைப் பெரிதும் வியந்து, இனித் தான் ஒருக்காலும் சிற்றின்பம் சேருவதில்லை என்றும், இனி சத்காலக்ஷேபமே செய்வதாகவும் அவளுக்கு உறுதிமொழி கொடுத்துத் தன் வாக்கையும் நிறைவேற்றினான். எங்ஙனமெனில், இவன் இதற்குபின்பு தான் காசி காண்டம் முதலியன இயற்றினனென்றும் அப்பொழுது தானே வரதுங்க பாண்டியனது மனைவிக்கே தானியயற்றிய நூலின் பிரதியை அனுப்பி அவளது அபிப்பிராயத்தை வேண்ட அவள் அவற்றின் நடை, "வேட்டைக் குதிரை"யின் நடை போன்றுள்ளதெனக் கூறினள் என்றும், தெரியவருகிறது. (வேட்டைக் குதிரையின் நடை போகப் போகத் தீவிரமும் சலிப்பின்மையுமாய் இருக்குமென்று அனுபவசாலிகள் கூறக் கேட்டிருக்கிறோம்.) இவன் பிறகு இலிங்க புராணத்தைப்பாடி அவளுக்கு அனுப்ப, அவள் "பாட்டு வெள்ளை (எளிய நடையில் எழுதப் பட்டுள்ளது.) ஆயினும் பொருளோ மிகவும் மதிக்கத்தக்கது" என்பதைக் குறிப்பாய்க் காட்ட அது 'முத்துப் போலிருக்கின்றது' எனக் கூறினளாம். நிற்க,

அதிவீரராம பாண்டியன் அவளுடைய நல் உபதேசங்களைக் கேட்டுத் திருந்திய பிற்பாடு, தான் துஷ்டனாய் அடங்காப் பிடாரியாய்த் திரிந்த காலத்தில் வந்த சிறுமையையும், சற்குணவானான தன்பின் தனக்கு கிடைத்த பெருமையையும் பூஜ்யதையையும் நினைத்து நினைத்துப் "பெருமையும் சிறுமையும் தான்றர வருமே" என்று அடிக்கடி சொல்லிக் கொள்வதும், அவன் இயற்றிய "வெற்றிவேற்கை" என்னும் "நறுந்தொகை"யானது பெரும்பாலும் அவனது சுயானுபவங்களைப் பற்றியே கூறும் ஓர் சிறு நூல் என்றாலும் பொய்யாக மாட்டாது. இவை நிற்க,





பொற்புறு கற்பரசியாகிய இவ்வற்புதக்கலை மாதைப்பற்றி மற்றும் சில கூறவேண்டியிருக்கிறது. அவளுடைய ஆருயிர்க் கொழுனனாகிய வரதுங்க பாண்டியன் தன்னுடைய தம்பியாகிய அதிவீரராமபாண்டியனோடு சமானமாகித் தென்காசியை ஆண்டுவந்த பொழுது சிற்சில காரணங்களால் தன் உயிர்க் காதலியைப் பிரிய நேர்ந்தது. நாட்கள் பலவாகியும் அவன் வாராமற் போகவே அவனது பிரிவாற்றால் வருந்தி அம்மாது சிரோன்மணி நாரை வண்டு முதலியவற்றைத் தூது விட்ட பாவனையாக

"என்னையிவ்வா றவர்மறந்தும் யானவரை
மிகநினைந்திங் கிருந்து வாட
முன்னை வினைப் பயன்தானோ? அப்பிறப்பிற்
செய்தவம் முடிந்த வாறோ?

கன்னன்மதன் அபிராமன் வரதுங்க
ராமனியற் காசி நாட்டி
லன்னவயற் குருகினங்காள்! இனியெவ்வா
றுயிர் தரித்திங் காற்று மாறோ?"

"செப்பாரும் முகிழ் முலையா ரெல்லாருங்
கணவருடன் சேர்ந்து வாழ
வொப்பாரு மில்லாவென் கணவனுடன்
யான் கூடி யுறவா டாமல்
வெப்பாலும் மிகுகாமத் துயராலு
நாடோறும் மெலிந்து வாடி
யிப்பாடு படவன்றோ விறையோனென்
றலையோட்டி யெழுதினனே"

"எண்திசா முகத்துந் திங்க
ளிளநிலா வெள்ளங் காயக்
கொண்டமால் பெருகுந் தோறுங்
கொழுங்கண்ணீர் முலையிற்சோரப்
பண்டுநா மறியாக் காமத்
துயரினாற் படுவதெல்லாம்
வண்டுகாள்! உரையீருங்கள்
வரதுங்க ராமனுக்கே!

என்று சில பாக்கள் பாடி, அவை எழுதிய ஓலையைப் பணியாரக் குடத்துள் வைத்துத் தன் நாயகனுக்கு அனுப்பினளாம்.

பிறகு சின்னாட்களுக்கெல்லாம் நிகழ்ந்த ஓர் அதிசய சம்பவத்தால் கற்பிற்சிறந்த நம் கதாநாயகியின் உண்மைப் பெருமை விளங்கும். அவ்வதிசய சம்பவம் வருமாறு :—

வரதுங்கராம பாண்டியனுக்கு உலக வாழ்க்கை குறுகவே, அவன் அதி புத்திசாலியாக இருந்தும், தன் மனைவியினின்றும் பிரிவதற்காகச் சிறிதுமயங்கிப் பின்னர்,

"அஞ்சல் என்ற கரதலமும்
கணபணகங் கணமும்
அரைக்கிசைந்த புலிஉடையும்
அம்புலிச்செஞ் சடையும்
கஞ்சமலர்ச் சேவடியும்
கனைகழலும் சிலம்பும்
கருணைபொழி திருமுகமும்
கண்கள் ஒரு மூன்றும்
நஞ்சை உண்ட மணி மிடறும்
முன்னூலும் மார்பும்
நலம்திகழ் வெண் நீற்றொளியும்
மறிமானும் மழுவும்
பஞ்சனைச்சிற்றிடை உமையாள்
ஒப்பனைப்பா கமுமாய்ப்
பால்வண்ணன் உளத்திருக்கப்
பயமுண்டோ எமக்கே"

என மனந்தேறினான்.

இது அறிந்த அவனது மனைவி பிறப்பு இறப்பிற்குக் காரணமாயிருக்கும் பற்றினை ஒழிக்குமாறு அவனுக்குப்புத்தி புகட்டி "உடம்பு என்ற புழுக்கூட்டைச் சேர்ந்தும் சேராமலும் இருக்கும் பரம்பொருளும், அருட்பிரகாசமும், பரம், அபரம், (ஆதி, அந்தம்) என்பவற்றிற்கும் அப்பாலாகிய அறிவும், மயிர் முனைகூட இடமில்லாமல் எங்கெங்கும் நிறைந்த முழுமுதற் பொருளும், நினைத்த மாத்திரத்தில் உதிக்கக் கூடிய ஜோதியும், பெரும் பாக்கியம் செய்து

பல குறைகளை நிவர்த்திக்க விரும்பும் மெய்யடியார்களுக்கு வேண்டுவன உதவும் பசுமையான பூங்கொத்துக்களை உடைய கற்பக விருக்ஷம் போன்றுள்ளதும், மனவாக்காதிகளின் வேறுபாட்டால் அளவிடக் கூடாததுமான களங்கமற்ற வெட்ட வெளியை மனமாகிய ஆகாயத்தில் அடைப்பாம்," என்ற கருத்தையடக்கி,

"ஆக்கை யென்னும் புழுக்குரம்பை
அணைந்து அணையாப் பொருளை
அருள் ஒளியை பராபரத்திற்கு
அப்புறமாம் அறிவை
நீக்கமற மயிர் முனைக்கும்
இடமற எங்கெங்கும்
நிறைந்து நின்ற முழுமுதலை
நினைவில் எழும் சுடரை
பாக்கியங்கள் செய்து அனந்த
தவக்குறைகள் முடிக்கும்
பழஅடியார் தமக்கு உதவும்
பகந்துணர்க் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தால்
அளவுபடா ஒன்றை
மாசற்ற வெறு வெளியை
மன வெளியிற் அடைப்பாம்"

எனக்கூறவே, என்ன ஆச்சர்யம் பாருங்கள் நமது கதாநாயகி உடனே குன்றாத மாங்கல்ய கோமளமாகவே பரமபதம் அடைந்தனள். அவள் புருஷனோ மரணாபத்தினின்றும் தப்பிப் பிழைத்து விட்டான்!

சகோதரிகளே! இவ்வுத்தமியின் உண்மைச் சரிதையைப் பற்றிச் சற்று யோசித்துப் பாருங்கள். இவ்வற்புத கலைமாது கல்வி மாணாகிய அதிவீர ராமனுக்குப் புத்தி புகட்டி, கல்வியைக் கொண்டே அவனை நல்வழிப்படுத்தியது எவ்வளவு பாராட்டத்தக்கது? இதனால் நமது தேசத்து ஸ்திரீகள் முற்காலத்தில் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றவர்களாயிருந்தனர் என்று தெரியவருகிறதல்லவா? வேத ஆகம புராண இதிகாசங்களும், தொல்காப்பியம் ஆகிய தொன்மை பேரிலக்கணங்களும், சிந்தாமணி சிலப்பதிகாரமாகிய ஐம் பெருங்காப்பியங்களும், பதினெண்கீழ்க் கணக்கின் சிலவும், ஏனைய பிறவும் தக்க நூலாசிரியரிடம் வரன்முறையிற் கற்றுத் தெளிந்து அவற்றிலுள்ள சொற்களையும் விஷயங்களையும் தனது நூலில் அநேக இடங்களில் அதிவீரராமன் பொருந்தப் பிரயோகித்துள்ளான். ஆதலின், அவ்வரிய நூலின் குண தோஷங்களைக் கண்டறிய எத்துணைக் கல்விப் பயிற்சி மதனாவுக்கு இருந்திருத்தல் வேண்டும்! அன்றியும் "அஞ்சலென்ற..." என்று சகுண மூர்த்தத்தைக் குறித்துக்கூறியதால் வரதுங்கராமன் துவைதி என்றும் சித்தாந்தி என்றும் "ஆக்கையெனும்......" என்று நிர்க்குண சொரூபத்தைச் சுட்டியதால் அவன் மனைவி அத்வைதி என்றும் வேதாந்தி என்றும் அறியலாமன்றோ? இவ்வாறு வேதாந்த சித்தாந்திகள், காதன் மனையாளும் காதலனுமாக மாறின்றி சமரச நன்னிலை பெற்ற உத்தம வித்துவ ரத்தினங்களாய் வாழ்ந்து இல்லறம் நடாத்தினது எவ்வளவு ஆச்சர்யமானது. இதனால் ஸ்திரீ புருஷர்கள்கூட தத்தம் மதக் கொள்கையை அனுஸரித்து வாழும்படியான ஸ்வாதீனம் முற்காலத்தில் பெற்றிருந்தார் என்று விளங்க வில்லையா? இம்மட்டோ? அரிவையரை அந்தப் புரங்களில் அடைத்து வைத்து அஞ்ஞானம் என்னும் அந்த காரத்தில் ஆழ்த்துவது பூர்வீக சம்பிரதாயம் இல்லை என்பதுவும் வெள்ளிடை மலைபோல் தெள்ளிதிற் புலப்படும் அன்றோ? பாருங்கள். அந்தப் புரத்திலேயே நமது வரதுங்கன் மனைவி அடைபட்டிருப்பாளேயாயின், "வேட்டை நாய், வேட்டைக் குதிரை" இவைகளைப்பற்றிய இயற்கை விசேஷங்களை எப்படியறிந்திருக்கக்கூடும்? மேலும் கல்வி கற்பதாலும் கணவனையன்றி மற்றோரைக் கண்ணுறுவதாலும் கற்புநிலை தவறும் என்று பிதற்றும் பேதை மாக்களுக்கு அப்பெண்மணியின் திவ்ய சரித்திரம் சற்புத்தி புகட்டாமல் போகாது. கற்பு என்ற பதத்திற்குக் "கல்வி"





என்றே அர்த்தம். ஆதலால் கற்பு வேண்டுமாயின் கல்வியும் வேண்டும் என்பது அப்பதத்தினாலேயே விளங்க வில்லையா? ஒருவன் பெறுதற்குரிய பொருள்களுள் கற்புடைய மனையாளினும் உயர்வான பொருள்கள் எவை? 'தையலர் சிறந்துழி வையகம் சிறக்கும்' என்பது ஆன்றோர் வாக்கு. இதனை ஆடவர்கள் கடைப்பிடித்துத் தங்கள் மனைவிமார், தாய்மார் சகோதரிகள் முதலியவர் கல்வி பயிலும்படி செய்வித்து அவர்களை அந்தகாரத்தினின்றும் அகற்றுமாறு வேண்டுகிறோம். சுகந்தத்தோடு கூடிய சுவர்ண புஷ்பம்போல் குணமும் கல்வியும் வாய்ந்த பெண் மணிகளுடன், ஆடவர்கள்! இல்லறம் நடத்தி வருவது எத்துணை மேன்மையாய் இருக்கும்?

அன்பார்ந்த சகோதரிகளே! உங்களை யான் வேண்டுவது ஒன்று உண்டு. அதென்னவெனில் நீங்கள் வாயில்லாப் பூச்சிபோலிருப்பதே கற்பு என்று எண்ணாமல், நீங்களே வித்தை பெரிதும் விரும்புகிறீர்கள் என்பதை உங்கள் புருஷர்களுக்குக் காட்டி, அவர்களது அனுமதி பெற்று கற்றுத் தேர்ந்து, அடங்கி அதி புத்திசாலிகளாவீர்களாக.

# வரதக்ஷிணை

"ஞானு"

**பெ**ண்ணைப் பெற்றவர்கள் எல்லாம் வருத்தப்படவும், பிள்ளையைப் பெற்றவர்களெல்லாம் களிப்படையவும் செய்யும்படியான சித்திரை, வைகாசி, தை முதலான இந்தக்கலியாணமாதங்களில் 12 வயதுக் குட்பட்டு, கல்யாணம் செய்யப் பருவமாயிருக்கும் பெண் குழந்தைகளுடைய தாய் தகப்பன்மார்கள் படும் துயரமும், வருத்தமும் சொல்ல முடியாது. அதிலும் கொஞ்சம் ஏழையாகவிருந்து அதோடு ஐந்தாறு பெண் குழந்தைகளும் இருந்து, பெண்ணைக் கலியாணம் செய்துகொடுக்க வேண்டிய வயது வந்து, மாப்பிள்ளை விசாரிக்குங்கால், வரதக்ஷிணை ஆயிரம் இரண்டாயிரம் என்று இப்படி கேட்டார்களானால் அந்தோ பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? ஏற்கனவே நித்தியப்படி சாப்பாட்டிற்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது வரதக்ஷிணை எப்படிக் கொடுக்க முடியும். இதனால் அவர்கள் தங்களையும் நொந்து, தங்கள் பெண் குழந்தைகளையும் நிந்திக்கிறார்கள். அந்தோ பரிதாபம்! ஏது மறியா இப்பெண் குழந்தைகள் என்ன செய்யும்! இதெல்லாம் வரதக்ஷிணையின் கொடுமையல்லவா?

இன்னமும் இந்த வரதக்ஷிணையின் கொடுமையினால் அநேகம் கெடுதல்கள் நேருகின்றன. எப்படி யென்றால், ஒரு விதத்தில் நியாயமாக சம்பாதித்து தங்கள் ஜீவனத்தைக் கழிக்கிறவர்கள் தங்கள் பெண்ணைக் கலியாணம் செய்துகொடுக்க வரன் விசாரிக்கையில், தங்கள் சக்தி மீறி பிள்ளை வீட்டுக்காரர்கள் வரதக்ஷிணை கேட்கிறபடியால் எப்படியாகிலும் பெண் ருதுவாவதற்கு முன்னால் கல்யாணம் செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தினாலே லஞ்சம் வாங்கவும், அதர்மவழியில் புகும்படியாகவும் தூண்டுகிறது.


இன்னும் சிலர் இந்த வரதக்ஷிணை கொடுக்க முடியாமல், தங்கள் பெண்ணை கிழவனுக்காகிலும், இரண்டாந்தாரமாகவோ, மூன்றாந்தாரமாகவோ கொடுக்கும்படியாகவும் நேரிடுகிறது. ஆனால் இப்படி கிழவர்களுக்கு மூன்றாந்தாரமாகவும், நாலாந்தாரமாகவும் கொடுப்பதினால் அனேக கஷ்டங்களும், கெடுதல்களும், தொந்தரவுகளும் ஏற்படுகின்றன வென்பது எல்லோருமறிந்த விஷயம்.

இந்த வரதக்ஷிணை யென்னும் கொடிய பிசாசானது இவ்விந்தியா முழுதும் உலாவிக்கொண்டு திரிகிறது. இந்தப் பிசாசை அடக்கத்தக்க மந்திரவாதிகள் இல்லையா? படித்தவர்களும், படியாதவர்களும், தனவந்தர்களும், தரித்திரர்களும், ஒன்றுபோல தங்கள் பிள்ளைகளுக்கு வரதக்ஷிணை கேட்கிறார்கள். இந்த வரதக்ஷிணையினால் விளையும் தீங்கை அவர்கள் அறியாததினாலோ, அல்லது அறிந்துதான் கற்றறி மூடர்களைப்போல தங்கள் பிள்ளை பிறந்து செவ்வெண்ணெய் கொடுத்தது முதல் கணக்கிட்டுப் பார்த்து, மெட்ரிகுலேஷன் பாஸானால் 500 ரூபாய் என்றும், எப். ஏ. பாஸானால் ரூபாய் 1000 என்றும், பீ. ஏ. பாஸானால் ரூபாய் 2000, இதற்கு மேல் வெள்ளிப் பாத்திரம், நகை, சீர் முதலானவைகளுக்கு ரூபாய் 2000, இப்படியாக மொத்தம் 4000, 5000, 6000 ரூபாய் கொடுத்தால்தான் தங்கள் பையனுக்கு ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள முடியும் என்று சொல்லுகிறார்கள். பெண் வீட்டுக்காரர்கள் தகுந்த ஆஸ்திவந்தர்களாயிருந்தால்தான் இப்படிக் கொடுக்க முடியும். இல்லாதவர்கள் பாபம் என்ன செய்வார்கள்?

பிராமண ஜாதியில் பெண் ருதுவான பிறகு கலியாணம் செய்யக்கூடாது என்று சாஸ்திரம் சொல்லுவது வாஸ்தவமாயிருந்தாலும், இன்னம் ஏழு அல்லது எட்டு வயதில் பெண்களை கன்னிகாதானம் செய்து கொடுத்தால்தான் பலன் உண்டு



பலூன் தினம்
(பர்லின் நகரில் பலூன் விழாவில் ஒரு பலூன் பறக்கும் காட்சி.)



கம்பக்கூத்து

என்று சாஸ்திரம் முறையிடுகிறது என்று சொல்லுவது வாஸ்தவமா யிருந்தாலும், வரதக்ஷிணை ரூபாய் 4000, 5000 பிள்ளை வீட்டுக்காரர்கள் வாங்க வேண்டு மென்று வது, பெண் வீட்டுக்காரர்கள் கொடுக்க வேண்டுமென்றுவது எந்த சாஸ்திரத்தி லும், எந்தச் சமயத்திலும் சொல்லப்பட வில்லை என்பது திண்ணம்.

மேற்கூறியபடி ருதுவான பிறகு பெண்ணுக்குக் கலியாணம் செய்யக்கூடாது என்னும் சாஸ்திரத்தைப் பின்பற்றி நடக்கிறவர்கள், எந்த சாஸ்திரத்திலுமில்லாததும், சாஸ்திர விரோதமானதுமான வரதக்ஷிணை யென்னுமிந்தக் கொடிய வ்ழக்கத்தைப் பின்பற்றி நடக்கலாமா?

இந்த வரதக்ஷிணை என்னும் பிசாசானது ஒழிந்தால்தான் நம் இந்தியாவில், அதிலும் இந்துக்களில், அதிலும் பிராம்மணர்களில், பெண்களுக்கு க்ஷேமம் உண்டாகும் என்பது திண்ணம். கொள்ளை அடிப்பதுபோல் சில பிள்ளை வீட்டுக்காரர்கள், பெண் வீட்டுக்காரர்களின் ஸ்திதியிருப்புக்களை அறிந்தும் அவர்கள் சக்திக்கு மீறி வரதக்ஷிணை வாங்குவதினால் ஏழைகளாக இருக்கும் பெண்ணின் தாய் தகப்பன்மார்களுக்கு இவ்வளவு ரூபாயும் கொடுத்து, பெண்ணைக் கொடுத்தோமே என்று பெண்ணின் மீதிருக்கும் அன்பு குறைந்து, மாப்பிள்ளையின் மீதிருக்கும் மதிப்பு குறைந்து விடும்படியாகவும் நேரிடக்கூடும். ஆகையினால் வரதக்ஷிணை என்னும் கொடிய வழக்கமானது அன்பு, மதிப்பு இவைகளைக் குறைக்க ஹேதுவாயிருப்பதினால், நாம் அதை அவசியம் அகற்றி விலக்கவேண்டுவதல்லவா? இந்த வரதக்ஷிணையினால் உயிருக்குக்கூட ஹானி நேரிடுகிறது என்பதை சகோதரிகள் நாம் சொல்லாமலேயே அறிவார்கள். இந்திய மாதாவும் தன் பிரஜைகளுடைய க்ஷேமத்தின் பொருட்டு, ஜனங்களுக்குப் புத்தி வரும்படியான ஞாபகார்த்தமாக அநேக கன்னிகைகளை அழைத்துக் கொண்டிருக்கிறாள். இதனால் இனிமேலாவது நம் இந்தியருக்கு உணர்ச்சி பிறந்து "வரதக்ஷிணை வாங்குகிறது" என்னும் கொடிய பிசாசை "வரதக்ஷிணை வாங்கக் கூடாது" என்னும் மஹா மந்திரத்தினால் தலையெடுக்க வொட்டாமல் அடக்க, நம் சகோதரர்கள் முற்படவேண்டும். அங்ஙனம் கங்கணம் கட்டிக்கொண்டு, நம் பாரத மாதாவை சந்தோஷப்படுத்துவார்களாக.

ஆனால் இவைகளெல்லாம் விருதாவில் வாய்ப் பேச்சுப் பேசுவதினாலும், சும்மா பத்திரிகைகளில் பிரசுரம் செய்வதினாலும் மட்டும்போதாது. ஒவ்வொருவரும் தங்கள் நடத்தையில் வரதக்ஷிணையே வாங்காமலும், வரதக்ஷிணை வாங்குகிறவர்களைத் தண்டித்தும், அதற்குத் தகுந்த ஓர் ஏற்பாடு செய்தும், தங்கள் அனுபவத்தில் காண்பிக்க வேண்டும்.

ஸகோதரர்காள்! ஏன் இன்னமும் தூங்குகிறீர்கள்? விழித்துக் கொள்ளுங்கள்! உங்கள் ஸகோதரிகளாகிய கன்னிகைகளின், வரதக்ஷிணையினால் விளையக்கூடிய, தற்கொலையைத் தடுத்துக் கொள்ளுங்கள். கல்யாணகாலமாகிய சித்திரை, வைகாசி, முதலான மாதங்களில் இனி வரதக்ஷிணையினால் ஏற்படக்கூடிய தற்கொலைகள் நடவாமல் கன்னிகைகளைக் காத்து, ஏழைகளாக இருந்து வ்ரதக்ஷிணை கொடுக்கச் சக்தியற்றிருக்கும் குடும்பத்தினருடைய மனவருத்தத்தைப் போக்குங்கள். நம் இந்திய மாதாவை திருப்திப் படுத்துங்கள். அவள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# விடுகதை வினா

## ஸி. எஸ். ஜகதீச சுந்தரம்

1. வெளுத்த வயல், கறுத்த விதை, கையால் விதைப்பது, வாயால் பொறுக்குவது.

2. வெட்டிக் கூறுபடுத்தி வைக்கிறதே யொழிய, எவரும் தின்கிறதில்லை.

3. தவள முத்தினைப் பவளமா தீன்று, தன்னகம் வைத்துக் கண்ணிமைபோலக் காக்கக் கண்டேன் கழறுய் இதுவென்?

4. ஒருவருக்குக் கொடுத்து நீ நிறுத்திக் கொள்வ தென்ன?

5. காசியிலிருந்து கல்கத்தாவரையில் அசையாமல் போகிற தென்ன?

6. தீனிக்குக் குறைவில்லை, தீர்த்தமுண்டால் மரணம்.

7. மேற்பலகை, கீழ்பலகை, பலகை நடுவில் நெளிபாம்பு.

8. நடவ எருமை நாற்சேர் பாலைக்
   கடிதே ஈயும் காலை, மாலை;
   பிடிமேய்ச்சலில்லை; பேராவலோடு
   குடிகன்றுமில்லை; குலவா யனுளன்

9. குட்டைச் சிறுக்கிக்குப் பெட்டிப்புடவைகள்.

10. கொட்டத்துப் பானையைக் கோமகனும் எடுக்க முடியாது, எடுப்பிக்க முடியாது.

11. தம்படிக் குதிரை வாலுக்கு லகாம்.

12. சுவரில் பொம்மை சங்கிலிப் பொம்மை வந்துபோவார்க்கு வார்க்கும் பொம்மை.

13. பையில் தானிருந்தால் அங்கு மற்றொன்றையும் இருக்க விடாது.

14. எத்தனைபேர் ஏறினும் சலியாக் குதிரை.

15. உயிரில்லாப் பறவை ஊரூர்க்குப் பறக்கும்.

16. கேட்போரும் கொடுப்போருமே யல்லாது உபயோகிப்போர் ஆகார்.

17. இதுவரையில் இல்லாதது, எப்போதும் இருப்பது, யாரும் பாராதது.

18. காற்று ஜீவனம், கண்ணிடை வாசமாம்.

19. வீடில்லா நகரங்கள், நீரில்லாச் சமுத்திரங்கள்.

20. நெட்டை குட்டை, பட்டப்பகல் எனக்குப் பகை, அடித்தால் போகேன், நின்றால் நிற்பேன், நடந்தால் நடப்பேன்.

21. வாராவிடி லெனை வாவென் றழையார், வந்தா லெவரும் போவென்றுரையார்.

22. சிறுசிறு கதவுகள், செய்யாக் கதவுகள், திறக்க அடைக்கச் சத்தம் செய்யா.

23. தவளமேனியள்; பவளநாசியள்;
    நெடிலாப் பிறந்து குறிலா வளர்வள்.

24. இரண்டு பூனைகள் முன்னே பூனை
    இரண்டு பூனைகள் பின்னே பூனை
    இரண்டு பூனைகள் இடையிற் பூனை
    அனைத்து மெத்தனை பூனைகள் அறைவாய்.

25. எட்டாக் கொம்பில் மிட்டாய்ப் பொட்டலம்.

---

1. எழுத்துகள், 2. சீட்டுக் கட்டு, 3. இதழும் பல்லும், 4. பேச்சு, 5. ரோட்டு, 6. நெருப்பு, 7. நாக்கு, 8. பனைமரம், 9. உள்ளிப்பூண்டு, 10. கிணறு, 11. ஊசி, 12. தேள், 13. கிழிசல், 14. திண்ணை, 15. தபால்கடிதம், 16. புத்திமதி, 17. நாளையதினம், 18. மூக்கு, 19. தேசபடம், 20. மனிதன் நிழல், 21. வியாச்சியம், 22. கண்ணிமை, 23. மெழுகுவர்த்தி, 24. மூன்று பூனைகள், 25. தேன்கூடு.

# பெண் கல்வி

## ஸ்ரீமதி வி. ராதாமணி

ஒரு தேசம் நாகரிக மடைந்திருக்கிறது என்பதை நாம் எவ்வாறு அறிந்து கொள்ளுகிறோம்? அந்நாட்டின் ஆண் பெண் பாலார் அனைவரும் கல்வி, சித்திரம், சிற்பம், சங்கீதம் முதலிய எல்லாக்கலைகளிலும் சமத்துவமாய்ப் பயின்று சுதந்திரமாய் வாழ்ந்து வருவதைக் கொண்டு தான் உணர்கிறோம்.

"நமது தேசம் நாகரிக மடைந்திருக்கிறதா?" என்று என்னை யாராவது கேட்பார்களானால் அதற்கு நான் இல்லை யென்றே பதிலளிப்பேன். ஏன்? நமது நாட்டுப் பெண் மணிகளின் அடிமைத்தனம் நீங்க வில்லை. அவர்களின் கல்வி பெருகவில்லை. அவர்களுக்குச் சுதந்திரம் அளிக்க வில்லை. இவைகளே காரணமாகும்.


சென்னையில் இத்தனைப் பெண் பாடசாலைகளும், கல்லூரிகளும், லேடீஸ் கிளப்புகளும், மாதர்சங்கங்களும் இருந்தும், எழுத்து வாசனையே அறியாது இப்பெயர்களைக்கூடக் கேட்டறியாத பெண்மக்களும் சென்னையில் உளர் என்பது நான் கண் கூடாகக்கண்டு அறிந்த விஷயமே. சென்னையிலேயே இப்படி யென்றால் தெற்கே போகப் போகப் பெண் கல்வி மிகவும் குறைந்திருக்கிறது. அந்தக் கர்நாடக குருட்டு பழக்க வழக்கங்களிலேயே பிடிவாதம் கொண்டு, தமது பெண் மக்களைக் கல்வி பயில விடுவதில்லை. அப்படியே சில பெற்றோர் தமது பெண் மக்களைப் பாடசாலைக்கு அனுப்பினாலும் வீட்டிலிருக்கும் கிழங்கள் சும்மாயிராமல் வசை புராணத்திற்கு ஆரம்பித்து விடும். பாட்டி "ஏண்டா, இப்படி கெட்டுப் போறே. அந்த நாள்ளே நாங்கள்ளாம் என்ன படிச்சோம். கொண்டு கொடுத்து அழகா சம்மந்தம் பண்ணி குடித்தனம் பண்ணல்லையா? பொம்மனாட்டி படிச்சு பி.ஏ. பாசு பண்ணி சம்பாதிக்கப்போறாளா? இதுவரைக்கும் நல்ல வம்சம்னு பேரெடுத்துட்டோம். இது ஒண்ணு வேணுமா நமக்கு" என்பாள். அத்தை ஒரு புறம் தூற்றுவாள். இவர்களைக் கண்டித்து விட்டுப் பாடசாலைக்கு அனுப்பினாலோ ஊரிலுள்ள மற்றவர் அதைக்கேலி செய்து பெரிய விபரீதத்திற் கொண்டு போய்விடுவர். அதற்கேற்றபடி வைதீகப் பிச்சுகளும் "பெண்கள் படித்தால் அனர்த்தம் விளைந்து விடும், கெட்டுப்போய் விடுவார்கள்" என்று ஒருபுறம் கூக்குரலிடுவார்கள். இந்த அர்த்தமற்ற சொற்களுக்கும் மிரட்டலுக்கும் பயந்து தமது பெண் மக்களைப் பாடசாலையினின்றும் நிறுத்தி விடுவர். இப்படியாகப் பெண் மக்கள் கல்வி கற்பதை தடைசெய்ய எத்தனையோ இடையூறுகள் முன் வந்து நிற்கின்றன. இவைகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் மிக ஊக்கத்துடன் படித்து முன்னுக்கு வந்த பெண்மணிகள் சிலரே யாவர்.

நிற்க, பெண் மக்கள் கல்வி கற்பது கூடாது என்பதற்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதாவென்று ஆராய் வோமானால் இல்லை யென்றே தெளிவோம். ஏனென்றால் கல்விக்கு அதிதேவதையான சரஸ்வதியே பெண்தெய்வமல்லவா? அவளது இனத்தினரான பெண் மணிகள் படிக்கக் கூடாதென்று சொல்வது பொருந்துமா? பண்டைக்காலத்தில் பெண் கல்வி எவ்

வளவு சிறப்புற்றிருந்தது? இதற்குச் சான்றாக நமது தமிழ் நாட்டில் புலமையிற் சிறந்த ஔவையார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், பாரிமகளிர், ஆதிரையார், ஸ்ரீ ஆண்டாள், பெருங்கோப் பெண்டு, பூங்கணுத்திரையார், போன்றவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள்? அவர்கள் வேந்தருடன் சமத்துவம் பெற்று அவர்களுடைய அரச சபையை அலங்கரித்து வந்ததை அறியாதார் யாரே? பெண்மக்கள் கல்வியே யன்றி இதரகலைகளிலும் தேர்ச்சிபெற்றிருந்தனர் என்பதற்கு சுபத்திரை இரதசாரத்தியம் செய்ததும், சத்யபாமை கிருஷ்ணன் மூர்ச்சித்த காலத்தில் நரகாசுரனுடன் போர் புரிந்து, அவனை ஸம்ஹரித்ததும் தக்க உதாரணங்களாகும். வீரத்தனம் பெண்மக்களுக்கு இல்லையென்பவர்களும் நாணமுற தடாதகைப் பிராட்டியார் எண்டிசையும் வென்று பெண்ணரசாண்டதும் நமது தமிழ் நாடன்றோ? அல்லிராணி அரசுபுரிந்ததும் நமது தேசமன்றோ? பெண்மக்கள் பலத்திலும் சிறந்து விளங்கினர் என்பதற்கு கைகேயி தன் கைபலத்தால் தேரைத் தாங்கியதும் நல்லதோர் உதாரணமாகும்.

இவைகளின்றி, அக்காலத்தில் ஆண்மக்களும் மகளிர்க்குரிய யாழ் முதலிய இசைக் கருவிகளில் பயிற்சி பெற்றுத் தேர்ந்திருந்தனர் என்பதை விளக்க தேவர்களில் நாரத மஹாமுனிவரும், வாயுபுத்ரரான ஹனுமந்தனும், அசுரர்களில் இராவணனும் வீணை வாசிப்பதில் வல்லவர்களாயிருந்தது குறப்பிடத்தக்கது. இன்னும் சீவகன் யாழ் வாசிப்பதில் வென்று தத்தையை மணம்புரிந்து கொண்டதும், வத்ஸராஜனான உதயனன் வீணை கற்றுக் கொடுக்கச் சென்று வாஸவதத்தையை காந்தர்வ மணம் புரிந்ததும் தக்க சான்றாகும். இவைகள் கற்பனைக்கதைகளென்று சொல்லப்பட்டாலும் அக்கால வழக்கத்தையாவது குறிப்பிடுகின்றனவல்லவா? ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ராதையே புல்லாங்குழல் கற்றுக்கொடுத்ததாகக் கூறப்படுகிறது. இக்கலைகளே யன்றி சமையற்றொழிலிலும் ஆடவர்கள் மேம்பட்டு விளங்கினரென்பதற்கும், நளனும், வீமனும் சமைத்தலில் வல்லவர்கள் என்பதற்குச் சான்றாக நம்மவர் இன்னும் நளபாகமென்றும், வீமபாகமென்றும் கூறுகின்றனர். இவைகள் எல்லாம் அக்காலத்தில் ஆண் பெண் இருபாலரும் வேற்றுமையின்றி சமத்துவமாய் எல்லாக்கலைகளையும் பயின்று வந்தனர் என்பதை நன்கு விளக்கிக் காட்டுகின்றன. இவைகளை யெல்லாம் அறிவுடையார் நன்கு ஆராய்ந்து பார்ப்பின் ஆண் பெண் என்ற வேற்றுமையன்றி அறிவு வேற்றுமையில்லை யென்பதையும், பெண்மக்களும் கல்வி கற்பதற்கும் மற்றக் கலைகளில் பயில்வதற்கும் உரியவர்களே என்பதையும் நன்கு தெரிந்துகொள்ளுவார்கள். ஆதலால் நமது நாட்டு சகோதர சகோதரிகளெல்லாரும் பெண்கல்வியில் மிக்க ஆர்வம் கொண்டு விருத்தி செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்.

நிற்க, தமிழ் நாட்டில் ஸ்திரீகளுக்கெனவே வெளிவரும் மாதப் பத்திரிகையான "கிரஹலக்ஷ்மி" யைக் கண்ணுற்றேன். ஸ்திரீகள் கல்வியிலும் முன்னேற்றத்திலும் எனக்கு மிக்க ஆர்வமுண்டாதலின் "கிரஹலக்ஷ்மி"யின் உயரிய நோக்கங்களைக் கண்டு மகிழ்ந்தேன். இக் "கிரஹலக்ஷ்மி" மென்மேலும் விருத்தி பெற்று விளங்குவதோடு பெண் கல்வியும் நமது நாட்டில் பெருகி வரவேண்டுமென்று கலைமகளை பிரார்த்திக்கிறேன்.



தெய்வபக்தி

# தெய்வ பக்தி

ஸ்ரீமதி நாகலக்ஷ்மி

குழந்தையின் கண்களைப் பாரம்மா! இமை கொட்டாமல் எப்படிப்பார்த்துக்கொண்டிருக்கிறான் பார்! தனது சின்னஞ் சிறு மெல்லிய கைகளைக்கூப்பிக்கொண்டு நிற்பது என்ன அழகு! அவன் முகத்தை கவனித்துப்பார். அவன் மனமானது எவ்வளவு தூய்மையாக இருக்கிறதோ அதேபோல் அவன் உள்ளமும் தூய்மையாக இருக்கிறது. அவன் சிந்தை அவன் முன்னிருக்கும் விக்ரகத்தின் பால் பட்டிருக்க வில்லை. ஆதிபரம் பொருளையே அவன் மனதிலிருத்தி நிற்கிறான். தன் பின்புறம் யாரிருக்கிறார்கள் என்பது கூட அவனுக்குத் தெரியாது. தன்பக்கத்தில் பொம்மை யானை இருப்பது கூட பாலகனுக்குத்தெரிய வில்லை. ஏன் இதெல்லாம்? அவன் இந்த உலகத்திலேயே இப்பொழுது இல்லை. இது தான் மனதை ஓர் நிலைப் படுத்தலாகும். நமக்கு அந்த சக்தி இல்லை. அந்த நெஞ்சுறுதியும் திடசித்தமுமிருந்தால் நாம் வெகு காலத்துக்கு முன்னரே சுதந்திரம் அடைந்திருப்போம். பக்த சிரோன்மணியாகிய தியாகராஜரே "ஹே ராமா! என்மனம் பலவிதமாக ஊசலாடுகிறதே. அதனால் என்னைக் கை விட்டு விடாதே" என்று கதறி இருக்கிறார். அவ்வாறிருக்கும்போது நம்போன்றவருக்கு எப்படி ஓர் நிலைப்படுத்தும் சக்தி கிடைக்கும். வீண் ஆசைதான். ஏ.பி.ஸி. டி. தான் நமக்கு வேதவாக்காக இருக்கிறது. வயிறு வளர்க்க எவ்வளவோ தகாத செயல்கள் புரிகிறோம். இது தற்கால கல்விமுறையின் பலன். தெய்வத்தைப் பற்றியும், யோக நிலையைப்பற்றியும் போதிக்கும் ஒரு பள்ளிக்கூடமாவது நம் நாட்டில் காணமுடியுமா? வீடுகளிலும் தெய்வமும், தெய்வ வழிபாடும் வர வரக்குறைந்து மறைந்து வருகின்றன. ராம! ராம!! என்ன கஷ்டகாலம்!

பாகவதத்தில் கலியுகத்தில் மனிதன் அற்பத்தன்மையுள்ள வனாகவும், அற்பாயுசுடையவனாகவும், மந்த புத்தியுள்ளவனாகவும், பெரு வியாதி பீடிக்கப் பட்டும், துஷ்டசித்த முடையவனும், நல்ல கருமங்களைச் செய்யாதவனுமிருப்பான் என்று கூறியிருப்பது வாஸ்தவமாகத்தானிருக்கிறது. ஈஸ்வரபக்தியில்லையானால் எதுவும் நிறைவேறாது. சுவரில்லாமல் சித்திரம் வரைய முடியுமோ? தரையில்லாது தண்டால் எடுத்துப்பழக முடியுமா? எம்மதத்தினராயிருந்தால் தானென்ன? ஹிந்து, முகமதியர், கிறிஸ்தவர் எல்லோரும் தெய்வத்தின் முன் ஒன்றே. தெய்வபக்தி நம் எலும்புக்குழாய்களிலும் படிந்திருக்கின்றது. நமக்கு ஆஸ்திகமே அஸ்திவாரம். இந்த அஸ்திவாரத்தைப் போடுவது யார்? நம் தாயார், நம் அக்காள், அத்தை முதலியவர்களே. இவர்கள் ஒன்றும் அறியாத பால்மணமாறாத சிறுவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு புராணப் பிரசங்கம் செய்து வருகிறார்கள். இந்தக் கதைகளைக் கேட்கும் சிறு குழந்தைகளிடத்தில் நல்ல எண்ணங்களும், நற்குண நற்செய்கைகளும் உண்டாகின்றன. ஆனால் வயது வந்தவுடன்

நாம் அவற்றை மறந்து விடுகிறோம். அப்போதனைகள் கனவு கண்டது போல் இருக்கின்றன. நம் வாழ்க்கை பிறர் பாக்கியத்தைத் தழுவியே இருக்கிறது. நாம் இதர தேசங்கள் மேன்மையாக இருக்கின்றன வென்றும், நம் நாடு தாழ்ந்த நிலையிலிருக்கிறதென்றும் சொல்லிக் கொண்டேயிருக்கிறோம். இந்தக் கல்விதான் நாகரிகக் கல்வி.

பாலன் கைகூப்பித் தொழும் ஆஞ்சநேயர் யார்? நம் சிறுவர்களுக்குத் தெரியாது. எட்டாவது ஹென்ரிக்கு எத்தனை மனைவிகள் என்று கேட்டால் அவர்களுக்குத் தெரியும். ஆஞ்சநேயர் புனித பிரம்மச்சாரி, சத்யவாதி, தர்ம சிந்தனைகாரர், தெய்வ பக்தர், மஹா பலிஷ்டர். நம் யுவர்களுக்கு அது போன்ற வார்த்தைகளே பிடிக்காது. லார்ட் கிளைவ் எப்படி சுதேச மன்னர்களை சண்டையிடச் செய்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை இந்தியாவில் ஸ்தாபித்தான் என்பதைப்பற்றிக் கேட்பதிலேயே அவர்கள் ஆனந்தமடைகிறார்கள். அவர்களின் சிரத்தை அது போன்ற விஷயங்களில் தான் பதிந்திருக்கிறது. இந்த அன்னிய ஆட்சியின் கீழ் பரதேச பாஷைகளைக் கற்பதிலும், பரதேச உணவுகளை உண்பதிலும், நடையுடை பாவனைகளைப் பின்பற்றுவதிலும், நம் சகோதரர்களை அவமதிப்பதிலுமே ஆத்ம லாபமிருப்பதாக நினைக்கப்படுகிறது.

இந்த நிலையில் சகோதரிகளே முன்னுக்கு வந்து புனருத்தாரணம் செய்ய வேண்டும். அவர்களுக்குச் சொந்தத் தாயின் உண்மை யன்புக்கும், மாற்றாந் தாயின் வெளி வேடத்துக்கும் உள்ள வித்தியாசம் நன்றாய்த் தெரியும். போனது போகட்டும்! அதைப்பற்றி வருந்தியென்ன பயன்? நம் சந்ததியார்களையாவது பழைய முறைகளிலுள்ள நல்ல அம்சங்களை யுணர்ந்து அதைக்கைக் கொண்டு நடக்குமாறு செய்ய வேண்டியது அத்தியாவசியம். தெய்வபக்தியினாலே பாபபீதி யுண்டாகிறது. பாப வெறுப்பு தூய வாழ்வைத் தருகிறது. தூய வாழ்வு ஆத்ம கௌரவம் அளிக்கிறது. எல்லோரையும் சம பார்வையுடன் நோக்கும் தன்மை ஏற்படுகிறது. அதினின்றும் சகோதரத்துவமும் சமத்துவமும் நிலவுகிறது. அந்த நிலையடைபவர்கள் ஆஞ்சநேயரைப் போல் தேசோத்தாரகர்களாகிறார்கள். பிரம்மத்தையும் அடைகிறார்கள்.

மாத்ருபக்திக்கும் தெய்வ பக்திக்கும் வித்தியாச மில்லை. அன்னையே தெய்வம், தெய்வமே அன்னை யென்று வேதங்கள் கோஷிக்கின்றன. தாயே சிசுவுக்குத் தன் மீது அன்புண்டாகும்படி செய்கிறாள். அதே போல் தெய்வபக்தியை யூட்டுவதும் தாயின் கடமையே. அந்த ஆற்றல் அளிப்பது அவளே. அந்த ஆற்றல் தெய்வபக்தியை வளர்க்கும். மாத்ருபக்தியினின்று தான் தெய்வ பக்தி உண்டாக வேண்டும். பிதா பக்தியும் தாயன்பிலிருந்து தான் ஏற்பட வேண்டும். “இதுதான் உங்கப்பா, நமஸ்காரம் செய்பாப்பா!” என்ற சொல் அன்னை சொல்லல்லவா? பிரபஞ்சம் பூராவுமே அன்னையின் சொரூபமே. அன்னையின் சிறந்தொரு தெய்வமில்லை. இதை உணர்ந்தால் போதும். வேறொன்றையும் அறிய வேண்டிய அவசியமில்லை. தாயிற் சிறந்தொரு கோயிலில்லை.



# உமாசங்கர்

‘ஜயம்’

## (ஓர் சிறிய நாடகம்)

### நாடக பாத்திரங்கள்

**புருடர்கள் :** சங்கர் — கதாநாயகன்

விஸ்வநாதய்யர்—சங்கரின் சிறிய தகப்பனார் (அவனை வளர்த்தவர்)

கோபிநாத்—சங்கரின் தோழன், முதலியோர்.

**ஸ்திரீகள் :** உமா — கதாநாயகி

தங்கம்மாள்—உமாவின் தாயார், மிஸ் மதுரவாணி:— நர்ஸ் (டிரெய்னிங்கில் இருக்கும் டாக்டர்) லக்ஷ்மி, பத்மா, சரஸ்வதி, உமாவின் பள்ளிக்கூடத் தோழிகள் முதலியோர்.

**இடம் :—** மேட்டூர் இஞ்சினீரிங் குவார்டர்ஸ் (Quarters) ல் ஓர் சிறிய வீடு.

**காலம் :—** மாலை 6 மணி.

#### காட்சி 1.

சங்கரன் தன் வீட்டு முன் கூடத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் “ஹிந்து” பத்திரிகையை திருப்பிக்கொண்டே மெள்ள முனகிக்கொண்டிருந்தான். “நாமிருவரும் கலியாணமான பொழுதிலிருந்து ஒருவர் மனதை ஒருவர் நன்றாக அறிந்தவர்களாக மிகவும் அன்னியோன்னியமாக விருந்து வருகிறோமென்று மகிழ்ந்து வந்தேன். ஆனால் உமா இவ்விதம் தன் மேஜையின் ஒரு டிராயரை மட்டும் என்னெதிரில் கூட திறக்காமல், இவ்வளவு ரகசியமாகப் பூட்டிப் பூட்டிவைப்பதைக் கண்டு எனக்கு சந்தேக மதிகரித்துக் கொண்டே வருகிறது. நாளைய தினம் இவளை திருப்பத்தூரில் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்து டிராயரைத்திறந்து, ரகசியத்தை அறிந்து கொண்டாலொழிய, இங்கிலாந்திலும் என் மனது உறுத்திக்கொண்டே யிருக்கும்” என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே அழகிய பதினாறு வயது சிறுமி யொருவள் நாணத்துடன், சிவந்த முகத்தில் புன்முறுவல் ததும்ப, கையில் பட்சணத்தட்டும், காபி கோப்பையும் ஏந்திய வண்ணம் பிரவேசிக்கிறாள்.

(சங்கரன் திடுக்கிட்டவனாகி முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, எழுந்து நின்று மேஜைமேலிருந்த காகிதங்களை ஒரு புறம் ஒதுக்கி ஒழுங்கு செய்து கொண்டே) ‘எஜமானி யம்மாள் எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறதே?’ என்றான்.

(வெட்கத்துடன் தலை குனிந்தவாறு புதுப் புடவையின் தலைப்பை சரியாய் சொருகிய வண்ணம்) உமா: உங்களுக்கு தினம் என்னைக் கேலிசெய்யாவிடில் பொழுது போகிறதில்லை என்று தோன்றுகிறது. புதுப்புடவை உடுத்திக் கொண்ட நோக்கம் உங்களுக்கு தெரியாதாக்கும்.

சங்கரன்: தெரிந்தால் கேட்பேனா உமா? கமலா வீட்டிற்கு போகப் போகிறாயா?

உமா: தினம் கமலா வீட்டில் எனக்கென்ன வேலை? அப்படி போனால் தான் புதுப்புடவை உடுத்திக்கொண்டு தான் போகவேண்டுமோ என்ன? அதிருக்கட்டும், காபி சாப்பிடுங்கள். ஆறிப்போகிறது.

சங்கரன்: நீ சொன்னால் தான் சாப்பிடுவேன். உமா: (வெட்கத்துடன் கால் கட்டை விரல் நகத்தால் நிலத்தைக் கீறிய வண்ணம், புடவைத் தலைப்பை கையில் பிடித்துக்கொண்டு சேஷ்டை செய்துக் கொண்டே தலை குனிந்த வண்ணம்) உங்களுக்கு இந்த ரகசியத்தை அறிய எவ்வளவு நாழிகைவேண்டும்? தற்பொழுது நாம் இன்னும் ஒரு மாதம் தானே சேர்ந்திருக்கப் போகிறோம். அதுவரைக்குமாவது இருவருமாகச் சேர்ந்து தமாஷாக உலாவி வரலாமென்று ஆசையாக விருந்தது. அதற்காகத்தான் நீங்கள் ஆபீஸிலிருந்து வருவதற்குள் சித்தமானேன்.

சங்கரன்: அவ்விதமே ஆகட்டும், கண்ணே! இங்கிலாந்திற்குப் போகத் தேவையான துணி மணிகளையும், அவசியமான சாமான்களையும் வாங்கிக்கொண்டு மற்ற ஏற்பாடுகளையும் செய்து வர நான் சென்னைக்குப் போக வேண்டியிருக்கிறது. நாளைக்கு உன்னை அழைத்துக்கொண்டு போய் அத்தையிடம் விட்டு விட்டு வந்து, வரும் திங்கட்கிழமை நான் பட்டணம் போகலாமென்றிருக்கிறேன். நான் திரும்பி வர பத்து நாட்கள் செல்லும். வரும்வழியிலேயே இருப்புத்துருக்கும் வந்து உன்னையும் அழைத்துக்கொண்டுவருகிறேன். அப்புறம் வீட்டைக் காலி செய்யலாம்.

(தன்னருகில் ஒருநாற்காலியை இழுத்து போட்டு விட்டு, பக்ஷணம் தின்றவாறு)

சங்கரன்: இப்படி உட்காரு உமா, எவ்வளவு நாழிகை வரைக்கும் இப்படி நிற்பது! அப்புறம் கால் கடுக்கும்.

(உமா நாற்காலியில் உட்காராமல் தரை மீது விரித்திருக்கும் பாய் மீது உட்காருகிறாள்.)

சங்கரன்: நம்ம பொம்மனாட்டிகளிடமிருக்கும் குருட்டு நம்பிக்கைகள் எப்பொழுது தொலையுமோ தெரியவில்லை. தரையின் மீது உட்கார்ந்துகொண்டு விட்டால் ரொம்ப மரியாதை காட்டின மாதிரியாம். (எழுந்து சென்று உமாவை எழுப்பி பலாத்காரமாக நாற்காலியில் அமர்த்தி காபி சாப்பிடுகிறான்.)


(உமா வெட்கத்துடன் தலை குனிந்த வண்ணம் நாற்காலியில் உட்கார்ந்தவாறு இனியகுரலில்)

"நாதா, நான்கு வருடகாலம் தங்களை பிரிந்து எவ்வித மிருப்பேன்? எனக்கு அதை நினைத்தாலே துக்கம் தொண்டையை அடைக்கிறதே, என்ன செய்வேன்........?" என்று மேலே பேச முடியாமல் கண்ணீர் உதிர்த்தாள். அவளது அழகிய கன்னங்களில் முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகள் பெருகின.


சங்கரன் எழுந்து தனது கைக்குட்டையால் உமாவின் கண்களையும், கன்னங்களையும் அன்புடன் துடைத்து விட்டு, அவளது கன்னத்தில் ஒரு முத்தம் ஈந்து, தனது ஆசனத்தில் உட்கார்ந்து,

உமா, இப்படி அழலாமா? மனதை திடப் படுத்திக் கொள்ள வேண்டும் கண்ணே. பகவான் நம்மை கூடியசீக்கிரம் கூட்டி வைப்பார் பயப்படாதே. நான் அடிக்கடி கடிதம் போடுகிறேன். எவ்வளவு நாட்கள் இந்த எழுபது ரூபாய்சம்பளத்தில் காலம்கழிப்பது.என்னவோ





"தயார், தயார்"



அடையாரில் ஓர் அழகிய தோற்றம்



கடவுளின் அருளால் கவர்ன்மெண்டார் என்னைப் பொருக்கி யெடுத்து ஸ்காலர்ஷிப்புடன் இங்கிலாந்திற்கு அனுப்புவது நம்முடைய புண்ணிய மல்லவா? இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தவுடன், கடைசிபக்ஷம் இருனூறு ரூபாய்கள் வரைக்குமாவது சம்பளம் உயரும். மனதை தைரியப்படுத்திக்கொள். உமா, வா, உலாவப் போவோம் நாழிகையாய்விட்டது' என்று கூறி சங்கரன் உமாவின் கையைப் பிடித்தழைத்துக்கொண்டு வெளியே செல்கிறன்.

(திரை வீழ்கிறது.)

## காட்சி 2.

இடம்: சங்கரன் வீட்டில் ஓர் அறை. ஓர் புறம், ஒரு செஸ்ட் ஆப் ட்ராயர்ஸ் (**chest of drawers**) போடப்பட்டிருக்கிறது. ஜன்னலருகில் ஓர் சிறிய வட்டமேஜையும், அதனருகில் ஓர் நாற்காலியும் போடப்பட்டிருக்கின்றன. வட்ட மேஜைமீது க்ஷவரசாமான்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஓர்புறம் ஒரு சின்னமேஜையும், அதனருகில் ஒரு நாற்காலியு மிருக்கின்றன. இதல்லாமல் சில பெட்டிகளும், கோட் ஸ்டேன்ட் ஒன்று மிருக்கிறது. அறை பெரியதுதான்.

காலம்: காலை 10 மணி.

(சங்கரன் கையிலோர் தோல் பெட்டியைப் பிடித்தவண்ணம் அறையில் பிரவேசிக்கிறன்.)

(பிரகாசமாக) அப்பாடா, அவளை விட்டு விட்டு வந்துவிட்டேன். இப்பொழுது முதல் காரியம் டேப்ளீகேட் சாவிபோட்டு மேஜை டிராயரை திறந்துபார்த்து விடுவதுதான்.

(ஜேபியிலிருந்து ஒருபெரியசாவிக்கொத்தை எடுத்துக்கொண்டு, அந்த சிறியமேஜை யருகில் சென்று ஓரொருசாவியாகப் போட்டுப்பார்த்து, கடைசியாக டிராயரை திறந்து விடுகிறன். டிராயரின் அறையில் சில காகிதக்கட்டுகளிருக்கின்றன. ஆவலுடன் ஒரு கடிதத்தைப் பிரித்து ஆவேசத்துடன் பலமாகப் படிக்கின்றன்.)

"என் ஆசை காதலீ!

நான் என்ன செய்வேன். நாம் செய்த புண்ணியம் இவ்வளவு தான். ஸ்வாமி நம்மை மனது வைத்து சேர்த்து வைக்கவில்லை. நீ என்னைப் பற்றி சும்மா கவலைப்படாமல் நம் விதியை நினைத்துக்கொண்டு மனதை சமாதானப்படுத்திக்கொள். வேறெதுவும் எழுத மனமெழும்பாமல் துடித்துக் கொண்டிருக்கும்,

அருமைக் காதலன்.

(சங்கரனின் கண்களில் கோபப் பொரிகள் பறக்கின்றன. உதடுகள் துடிக்கின்றன. மற்ற கடிதங்களில் சிலவற்றைப் படித்துவிட்டு முதலிலிருந்தபடியே கட்டி, டிராயரில் விசிறி எறிந்துவிட்டு பூட்டுகிறன்.)

சங்கர்: "இதென்ன ஆச்சரியமிது! கடிதத்தின் ஆரம்பத்திலும் நிஜமானபெயரைக் காணேம், முடிவிலும் எழுதினவரின்பெயரைக் காணேம். காதலியாம், காதலனும்! நான் ஒருவேளை கடிதத்தை அகஸ்மாத்தாக பார்க்க நேரிட்டால் அச்சண்டாளனை தெரிந்து கொண்டு விடுவேனென்று இவ்வித சூழ்ச்சியெல்லாம் செய்திருக்கிறர்கள் போலும்! அ கழுதை, சனியனே, கள்ளக்காதலனை வைத்துக்கொண்டு என்னை வஞ்சனை செய்தாயடி மாயக்கள்ளி. இந்தக்ஷணம் வீட்டு சாவியை தபால் மூலம் அவளுக்கு அனுப்பிவிட்டு புறப்பட்டுப் போய்விடுகிறேன். என் இங்கிலாந்து விலாசத்தைக்கூட யாருக்கும் தெரிவிக்க வேண்டாமென்று சர்காரிடமும் தெரிவித்து விடுகிறேன்." என்று கூறியவண்ணம் வெளிக் கிளம்புகிறன்.

(திரை வீழ்கிறது.)

## காட்சி 3.

இடம்: திருப்பத்தூரில் பிளீடர் விஸ்வநாதய்யர் வீட்டில் ஓர் அறை.

காலம்: மத்தியானம் 2 மணி.

(நடுத்தரவயது மாது ஒருவள் பாய்மீது படுத்தவண்ணம், அருகில் தையல்வேலை செய்துகொண்டு உட்கார்ந்திருக்கும் சிறுமியை விசனத்தோடு கவனித்துக் கொண்டிருக்கிறாள். தைத்துக்கொண்டிருந்த சிறுமி கையிலிருந்த துணியை நழுவ விட்டவண்ணம், கண்களிலிருந்து இரண்டொரு கண்ணீர் துளிகள் உதிர, ஏதோ ஆழ்ந்தயோசனையி லிருக்கிறாள். நடுவயது ஸ்திரீயானவள் எழுந்து உட்கார்ந்து பெண்ணின் தலைமயிரை அன்புடன் ஒதுக்கிக் கொண்டே தழதழத்த குரலில்,)

"உமா, உன்னுடைய கஷ்டத்தை என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை யடி, இப்படி தினத்திற்கு தினம் உருகிப்போரை யேடி, கண்ணு" என்றாள்.

உமா: அம்மா, அம்மாஞ்சியிடமிருந்து ஒரு கடுதாசிகூட வரலையே. இங்கிலாந்து சென்று ஆறுமாதங்களுக்கு மேலாய்விட்டதேம்மா. இது வரைக்கும் அவரது க்ஷேமசமாசாரத்தைப்பற்றி ஒரு தகவல்கூட கிடைக்கவில்லையே. மாமாவும் வேண்டிய அளவு விசாரித்து பார்த்துவிட்டார். அவரது விலாசத்தைக்கூட யாரும் சரியாகச் சொல்லமாட்டே னென்கிறார்களே. நம்மேல் கோபித்துக் கொண்டிருக்கிறாரோ? எவ்வளவு யோஜித்துப் பார்த்தாலும் நான் அப்படிப்பட்ட தப்பித மொன்றும் செய்ததாகத் தோன்ற வில்லையே. அம்மா, ஒருவேளை அவருக்கேதாகிலும் அபாயம் நேர்ந்திருக்குமோ? அம்மா.' (என்று கண்களை இருகரங்களாலும் மூடிக் கொண்டு தாயான தங்கம்மாளின் மடிமீது குப்புற விழுந்த வண்ணம் விம்முகிறாள்.)

(தங்கம்மாள் அவளது முதுகை தடவிக் கொண்டே தனது கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீரை தனது புடவைத் தலைப்பினால் அடிக்கொருதடவை துடைத்துக் கொண்டே) அம்மா உமா, நீ ஏன் இவ்வித கெட்ட யோசனைகளை யெல்லாம் செய்கிறாய்? சங்கரன் என்றைக்கும் உன்மேல் கோபித்துக் கொள்ள மாட்டான். என்னவோ அசம்பவம் நேர்ந்திருக்கலாம். அப்படி அவன் கோபித்துக் கொண்டால்கூட உன்மேல், சிறு பொழுதிலிருந்து தாய் தந்தையற்ற அவனை வளர்த்த விச்சண்ணாவின் மேல் அவனுக்கென்ன கடுகடுப்பா? கொஞ்ச நாள் வரைக்குப் பொருத்துக் கொள்ளம்மா பார்ப்போம்.

உமா: மாமாவிற்கு அவர் இருப்பிடம் தெரிந்துவிட்டால், நமக்கும் அவர் தெரிவித்துவிடுவாரே என்று அவருக்கும் தெரிவிக்கவில்லையோ என்னமோ, (என்று தழதழத்தகுரலில் கூறியவாறு அழுது கொண்டே இருக்கிறாள். அப்பொழுது விஸ்வநாதய்யர் பிரவேசிக்கிறார்.)

விஸ்வநாதய்யர்: இதென்ன இது, உமா! எல்லாமறிந்த புத்திசாலியாக இருந்துங்கூட நீ இவ்விதம் அழலாமா? சே, சே, அழப்படாது.

தங்கம்: குழந்தை எப்பொழுது பார்த்தாலும் சங்கரனைப் பற்றியே ஏங்கி ஏங்கி துரும் பாய்விட்டாள்.

விஸ்வநாதய்யர்: சங்கரன் ஒரு பைத்தியக் காரப்பயல், எதற்காக இவ்விதம் ஒருவருக்கும் தெரிவிக்காமல் ஓடிவிட்டானோ தெரியலையே! பற்பல பிரயத்தினங்கள் செய்து பார்த்துங்கூட, அவனுடைய துப்புக் கிடைக்கலையேடி. நான் இன்னும் என்னதான் செய்யட்டுமடி, தங்கம். உமா, நீ வெருமனே துக்கப்பட்டுப் பட்டு உடம்பை குட்டிச்சுவராக்கிக் கொண்டால் என்னபலன் சொல்?

தங்கம்: "பொறுத்தோர் பூமி ஆள்வார்" பெண்ணாய் பிறந்தபின் எந்த கஷ்டம் வந்தாலும்கூடப் பூதேவியைப் போல் பொறுத்துக் கொள்ள வேண்டும் உமா, பொறுமைதான் பெண்ணிற்கு பூஷணம்.

உமா: மாமா, அம்மாவுடைய வேதாந்தத்தை கேட்டாயா? அம்மா ரொம்ப பொறுமைசாலிபோல் பேசுகிறாள். நான் கொஞ்சம் அழ





ஆரம்பித்தால் தானும் பின்னோடையே அழத் துடங்கி விடுகிறாள்!

அய்யர்: என்னதான் சொல். அம்மா உன்னையும், உன் மாமியையும்விட பதின்மடங்கு பொறுமைசாலி தான்.

(திரைகுள்ளிருந்து உமாவின் மாமி.)

என்ன? மாமி, மாமி, என்று என்னமோ வைய்யரேளே? என்னை வம்புக்கழைக்காட்டா உங்களுக்கு நாள் கழியாது!

அய்யர்: அங்கே இருந்து என் கத்தரே. எழுந்திருந்து தான் வாயேன், கொஞ்சம்!

(திரைக்குள்ளிருந்து)

மாமி: வந்து துளியைக் கொஞ்சம் பிடித்தாட்டினால் நானும் வந்து உட்காருவேன்.

அய்யர்: உமா, உன் மாமியின் சாமர்த்தியத்தைப் பார்த்தாயா? அவளிடமிருந்தாவது கொஞ்சம் சாமர்த்தியத்தை கடன் வாங்கிக் கொள்.

உமா: மாமிசொல்வது நிஜம்தான், பாவம் அவளைப் பிடித்துக்கொண்டு சீண்டுவதென்றால் உங்களுக்கு ரொம்ப பிரியம்.

அய்யர்: என்ன தங்கம், என்ன சொல்கிறாய்? சிவனே என்று உமாவை பெங்களூருக்கு அழைத்துச் சென்று காலேஜில் சேர்த்து விடுகிறேன். படிக்கத் தொடங்கினால் சற்று கவலையை மறந்திருப்பாள்.

தங்கம்: உன் யோஜனை என்னமோ சரி தான், ஆனால்.........

தலையை சொரிந்துகொண்டு யோஜனையிலாழ்ந்திருந்த அய்யர், ஒருதரம் கனைத்து விட்டு, (தங்கம்மாளை குறுக்கிட்டு): ஆனால், என்ன ஆனால்? பசவங்குடியில் நம் சிற்றப்பா இருக்காரோனோ, அவர் வீட்டு பின்கட்டில் (out-house) உங்களுக்கு நான்கு அறைகள் ஒழித்துக் கொடுத்து விடும்படி எழுதி விடுகிறேன். உங்களையும் சரிவர கவனித்துக் கொண்டு, தகுந்த ஒத்தாசை செய்வார். டீ, உமா, உங்கப்பா கட்டிவைத்த "உமா வில்லாவில்" நீ இருக்கக் கொடுத்துவைக்காவிடினும், அதன் வாடகையை எடுத்து சாப்பிட்டுக் கொண்டு, தினம் அதன் தரிசனமாவது செய்வரலாம்! சித்தப்பா வீட்டு எதிர் சாரவில் தானே இருக்கு உங்கள் பங்களா, தங்கம்மா?

தங்கம்: ஊம், (என்று தன் கணவர் பெங்களூரில் ஜட்ஜாக இருந்த காலத்தில் தானும், தனது இளங் குழந்தை உமாவும் இருந்த சிறப்பை நினைந்து இரண்டொரு கண்ணீர்த் துளிகள் உதிர்க்கின்றாள்). உமா மிகவும் நன்றி விஸ்வாஸம் கலந்த பார்வையில் மாமாவை நோக்கி, மாமா! நீங்கள் சொன்ன யோஜனையே நல்லது! நானும் அம்மாவும் உங்களுக்கு எத்தனை கடமைப்பட்டிருக்கிறோமோ, உங்களைப் போன்ற நல்லமாமா கிடைப்பதறிது. நான் செய்த புண்ணியமே புண்ணியம்.

அய்யர்: உமா, என்ன ரொம்ப ரொம்ப புகழ்கிறாயே! என்கையில் மட்டும் வெள்ளையப்பன் (பணம்) தாராளமாக ஓடாடினால், உனக்கெவ்வளவு உதவிகள் செய்திருப்பேனே! வீதிக் கதவை யாரோ தட்டுறானே, கஜிக்கார பயல்களாய்த் தானிருக்கும். அதுகளுக்குத் தான் வேலையில்லை, போதில்லை.

(அறையிலிருந்து செல்கிறார். திரை வீழ்கிறது.)

(தொடரும்)

# பாலர் பகுதி

## கிழமைகள் கண்டுபிடிக்கும் விதம்

குழந்தைகளே! உங்களை உங்கள் நண்பரொருவர் "நான் இவ் (ஈஸ்வர) வருஷத்தில் ஏதாவதொரு மாதத்தில் ஒரு தேதியைச் சொல்லுகிறேன். அந்த தேதி என்னகிழமை என்று காலண்டரையோ (Calendar) அல்லது பஞ்சாங்கத்தையோ பார்க்காமலேயே உடனே சொல்லத் தெரியுமா?" என்று கேட்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு என்ன பதில் சொல்வீர்கள்? "தெரியும்" என்று பெருமையுடன் சொல்லுவீர்களா? அல்லது "தெரியாது" என்று சொல்லுவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு தலையைக் கவிழ்த்து கொள்ளுவீர்களா? உங்களுக்கு அம்மாதிரி காலண்டரையோ அல்லது பஞ்சாங்கத்தையோ பார்க்காமலே சீக்கிரம் கிழமை கண்டுபிடிக்கத் தெரியாவிட்டால் நான் அவ்வழியைக் கற்றுக் கொடுக்கிறேன்:—

| | | | |
|---|---|---|---|
| சித்திரை | .... 2 | ஐப்பசி | .... 0 |
| வைகாசி | .... 5 | கார்த்திகை | .... 2 |
| ஆனி | .... 1 | மார்கழி | .... 3 |
| ஆடி | .... 5 | தை | .... 5 |
| ஆவணி | .... 1 | மாசி | .... 6 |
| புரட்டாசி | .... 5 | பங்குனி | .... 1 |

பாலர்களே! மேலே ஒவ்வொரு மாதத்திற்கும் நேரே ஒவ்வொரு எண் வீதம் கொடுக்கப்பட் டிருக்கிறதல்லவா? முதலில் அவ்வெண்களை நீங்கள் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். உங்கள் சிநேகிதர் கேட்கும் தேதியின் எண்ணோடு அவர் கேட்கும் (அம்) மாதத்திற்குரிய எண்ணைக் கூட்டிக் கொள்ளுங்கள். கூட்டிவந்த தொகையை ஏழால் வகுத்து மீதியை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். "ஈவைப்பற்றி நமக்கு அவசியமில்லை. மீதி 1 என்றால் அவர் (அந்த நண்பர்) கேட்ட தேதி வாரத்தின் ஒன்றாவது (முதல்) நாளாகிய ஞாயிற்றுக் கிழமை. மீதி 4 என்றால் அந்த தேதி வாரத்தின் நாலாவது நாளாகிய புதன் கிழமை. மீதி 0 என்றால் அத்தேதி வாரத்தின் கடைசி (அதாவது ஏழாவது) நாளாகிய சனிக்கிழமை.

உதாரணமாக அந்த நண்பர் "ஆடி மாதம் 25ந் தேதி என்ன கிழமை?" என்று கேட்பதாக வைத்துக் கொள்ளுவோம். உடனே தேதியின் எண்ணாகிய 25 (இருபத்தைந்தோடு) அம் மாதத்திற்குரிய எண்ணாகிய 5 ஐக் கூட்டிக் கொண்டு, அக்கூட்டுத் தொகையாகிய 30ஐ 7ஆல் வகுங்கள். மீதி 2 வருகிறது. அவர் கேட்ட ஆடி மாதம் 25ந் தேதி வாரத்தின் 2வது நாளாகிய திங்கட் கிழமை.

மற்றுமோர் உதாரணம்:—

அவ்வன்பர் "மாசி மாதம் 15ந் தேதி என்ன கிழமை?" என்று கேட்பதாக வைத்துக் கொள்ளுவோம். உடனே தேதியின் எண்ணாகிய பதினைந்தோடு அந்த மாதத்திற்குரிய எண்ணாகிய 6ஐக் கூட்டிக் கொள்ளுங்கள். அத்தொகையை 7 ஆல் வகுத்தால் மீதி 0 வருகிறது. அவர் கேட்ட தேதி வாரத்தின் கடைசி நாளாகிய சனிக்கிழமை.


சிறுவர்களே! நான் உங்களுக்கு மேற்கண்ட சிறு ஸ்வாரஸ்யமான கணக்கைக் கற்றுக் கொடுத்தற்காக நீங்கள் எனக்கென்ன 'புதுவருஷப் பரிசு' அளிக்கப் போகிறீர்கள்?

குறிப்பு:—இக்கட்டளையில் ஒவ்வொரு மாதத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிற எண்கள் இவ்வருஷத்திற்கு மாத்திரம் தான் பொருந்தும்.



மார்க்கெட்டில் ஒரு மூலை

15994



சுவர்ணலயம் — பிருந்தாவனம்



மதுரா — யமுனா நதியில் ஸ்நானம் செய்யுமிடம்

# மதுராபுரி

திரு. எஸ். ஆர். வெங்கோபராவ்

**நா**ம் அநேக பிறப்புகளிலும் மிக்க மானிடஜன்ம மெடுத்திருப்பது முன் ஜன்மத்தில் செய்த பூஜாபலனாகும். அதன் முக்கியநோக்கம் மறுஜன்மத்தில் இன்னும் பெரிய எட்டற்கறியாத பதவி யடைய வேண்டுமென்பதாகும். நம் வாழ்நாளில் பெரும்பான்மையான பாகத்தை இளமையிலும், விருத்தாப்பியத்திலும், தூங்குவதிலும் கழித்துவிடுகிறோம். நமக்குக் கிடைக்கும் சிறிது நேரத்திலாவது நாம் பகவானைத் தியானித்தலும், அவனிருக்குமிடங்களைத் தரிசித்தலும் அத்தியாவசியமானது. கடவுளைத் துதியார் கடையரே யாவர். வெளிக்கு நல்லவர்கள்போல் வேடம்பூண்டு மனதில் கெட்ட எண்ணங்களை யுடையவர்கள் நற்கதி யடையமாட்டார்கள். நாம் இக்காலத்தி லிருக்கும் பெரும்பான்மையான 'அர்ஜுன சந்நியாசி'களைக்கண்டு மோசம் போகலாகாது. காசிக்குப் போகிறேமென்று அநியாயமாகக் காசைபறிக்கும் பலருக்கு உதவி செய்தலாகாது.

நாசரஹிதனை அப்பரந்தாமனை நாடிச் சென்று அவன் திருவுருவத்தைத் தரிசித்தால் நம் பாபங்கள் பஸ்ம மடையும். அப்படி நாம் பகவானைநாடிச் செல்லற் குறிய திவ்விய புண்ணிய க்ஷேத்திரங்களுள் மிகவும் போற்றற்குறியது மதுராபுரி. இப்பூலோகத்தில் மிகவும் புண்ணியக்ஷேத்திரங்களாகக் கருதப்படும் காசி, கஞ்சி, அவந்தி, அயோத்தி, மதுராபுரி, மாயா, துவாரகைகளுள் மதுராபுரியும் ஒன்றாகும்.

நாம் சிறு குழந்தைகளுக்குக் கதை சொல்லவேண்டி வருங்கால் 'மதுராபுரி என்னும் பட்டினத்தில் மதனசேகரராயன் என்ற அரசனொருவ னிருந்தான்' என்று ஆரம்பிக்கிறோம். மதுரா அன்று முதல் மிக்க சிறந்த நகரமென்பதும் அதை யாண்டவர்கள் மிகவும் பேரும் புகழும் பெற்றவர்கள் என்பதும் விளங்குகின்றதன்றோ?

துஷ்ட நிக்ரஹனும் சிஷ்ட பரிபாலனுமான ஸ்ரீமந் நாராயணனைத் தரிசிக்கவந்த சனக, சனந்தன, சனத்குமார, சனத்சுஜாதர்களை மந்தபுத்தியாலும், அக்கியானத்தாலும் ஜயவிஜயர்களான துவாரபாலகர்கள் தடுத்ததால், பூவுலகில் பிறக்கும்படி சபிக்கப்பட்டனர். கடவுளாக்கினைப்படி அவர்கள் (ஏழு ஜன்மங்கள் நல்ல பக்தர்களாக யிருந்து வைகுந்தத்தை விட்டு வெகு நாட்களிருக்க மனமற்றவராய் மூன்று ஜன்மங்கள் கடவுளுக்கு விரோதியாக) பூவுலகில் ஜனித்தனர். முதலில் இரண்யாக்ஷன், இரணிய கசிபுவாக கசியபிரமன் வம்சத்தில் பிறந்தனர். இரண்டாவதாக இராவண கும்பகர்ணராகத் தோன்றினர். கடைசியாக, கம்ச சிசுபாலராகப் பிறந்தனர். இம்மூன்று பிறப்புகளிலும் கடவுள் அவதாரத்தாலேயே சம்ஹரிக்கப்பட்டனர்.

எம்பிரான் எடுத்த அவதாரங்களில் மிகவும் லீலாவினோதமானது கிருஷ்ணாவதாரம். மதுராபுரி மன்னன் உக்ரசேனனின் புதல்வனும் கம்சனுக்கு சத்ருவாய், கம்சன் தங்கை தேவகிக்கு எட்டாம் புத்திரனாக வசுதேவன் தனயன் கிருஷ்ணன் அவதரித்தார். வசுதேவ தேவகிகள் செய்த பூஜாபலன்தான் என்னே! கண்ணன் ஜனித்தயிடம் இப்பொழுது மதுரா என வழங்கப்படும் நகருக்குச் சிறிது தூரத்திலிருந்ததாகக் கூறப்படுகிறது.

குழந்தைகள் என்றால் எல்லோரும் அருமையாகப் பாவிப்பது சகஜம். அதிலும் பகவானே குழந்தையாயிருப்பின் அவனரிய குணங்கள் சாற்றற்கரிது. தனது லீலைகளால் ஆண் பெண்பாலர்களைத் தனது கட்டுக்கடக்கி, கோபிமார்களையெல்லாம் தன் வலைக்குள் சிக்கும்படி செய்து அவர்களைச் சந்தோஷகரமான கஷ்டத்திற்காளாக்கினான் கார்மணிவண்ணன். ரோகிணி நக்ஷத்திரத்தில் பிறந்து மாமனான கம்சனைக் கொன்று தாய்தந்தையாரை சிறையினின்றும் மீட்டு உக்ரசேனனைக் கடைத்தேற்றினான்.

மது என்றால் தேன், கந்தம் எனப்பல பொருள்கள் படும். மதுரா என்றால் ருசிகரமானது எனப் பொருள்படும். வசிப்பதற்கு (ருசிகரமானது) தகுந்தது மதுராபட்டணமாகும். ஸ்ரீ ராமபிரான் சீதையை மீட்டுக்கொண்டு வருங்கால் ஆஞ்சனேயப் பிரகிருதிகள் இங்கு மதுவனம் என்னும் அழகிய பூங்காவனத்தை நாசம் செய்து அங்கிருந்த மதுவைக் கண்டு உண்டு களித்தார்கள்.

மதுரா நம்மவர்களால் வடமதுரை என வழங்கப் படுகிறது. இந்நகரானது மிகவும் அழகாய் யமுனா நதியின் கரையிலுள்ளது. யமுனாநதி படிகளுக் கருகிலேயே அநேக தேவாலயங்கள் உள. இந்நகர் மாடமாளிகைகளுடனும், கோபுரங்களுடனும் கண்டோர் மனதைக் கொள்ளைகொள்ளும் வனப்பு வாய்ந்தது. இங்கிருந்தவர்கள் மிகவும் பக்தசிரோமணிகளாய் பகவத்தியானத்திலேயே தங்களது பெரும்பான்மையான நேரத்தைக் கழித்தார்கள். எங்கு நோக்கினும் கடைகள் மிகுதியாகவுள்ளன. தெருக்கள் மிகவும் விசாலமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்நகரானது மிகவும் பண்டைக் காலத்ததாயினும் அதனழகும் மேன்மையும் சிறிதும் குறையவில்லை.

இந்நகருக்குச் சிறிது தூரத்தில் பிருந்தாவனம் உள்ளது. மதுராவிற்கு சுமார் பதினான்கு மைல் தூரம். மிகவும் கடினமான பாதைவழியாக இங்கு செல்ல வேண்டும். இப்பொழுது பிருந்தாவனம் மிகவும் க்ஷீணதிசையிலிருக்கிறது. நல்ல அழகும் மேன்மையுமடைந்த இவ்விடம் கற்பாறைகளால் சூழப்பட்டிருக்கிறது.

பிருந்தாவனம் யமுனா தீரத்தினருகில் முன்பு யிருந்தது. ஆனால் இப்பொழுது யமுனாநதிக்கு தூரத்திலுள்ளது.

இங்கு அழகியதோர் ராமதேவாலயம் உள்ளது. கோயிலைச் சுற்றி பெரிய மதில்கள் உள்ளன. கோயில் புராதனமானதாயினும் அதனது அழகு கூறி முடியாது. கோயிலுள் மிகவும் இருட்டாயிருப்பதால் காற்றோட்டம் சிறிது குறைவு. கடவுளைத் தரிசிக்குங்கால் பங்காவால் வீசுவது ஒரு பழக்கம். இங்கு வரும் ஸ்ரீவைஷ்ண





வர்களுக்கு ரொம்ப மரியாதை நடக்கிறது. அவர்களுக்கு கடவுள் பிரசாதம் மிகவும் மரியாதையுடன் வழங்கப்படுகிறது.

கடவுள் தனது அடியார்களை அநேக சோதனைகள் செய்து தனக்கு நிஜமான அடியனா என்று அறியும்படி செய்கிறார். வசிப்பதற்கு லாயக்கற்ற பிருந்தாவனத்தை ஆயிரக்கணக்கான பக்தர்கள் சென்று தரிசிக்கின்றனர்.

ஸ்ரீகிருஷ்ணன் தனது கோபிமாருடன் லீலாவினோதமாக ஜலக்கிரீடை செய்தயிடம் இப்பொழுது மிகவும் க்ஷீணதிசையிலிருக்கிறது.

அங்கு ஒரு மரத்தில் அநேக வர்ண கிழிந்த புடவைகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அச்செடியை தூரத்திலிருந்து நோக்குங்கால் நமக்கு ஒரு மரத்தில் பலவித புஷ்பங்கள் பூத்தாற்போல் மிகவும் ரம்மியமாகத் தோன்றுகிறது. அந்த மரம் இப்பொழுது மிகவும் க்ஷீணதிசையிலிருக்கிறது. அப்புடவைகளை ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோபிமார்கள் ஸ்நானம் செய்யும்போது குளத்தின் படிகளில் வைத்திருந்தபோது ஒளித்து வைத்தவைகளாகக் கருதப்படுகிறது.

ஸ்ரீகிருஷ்ணாஷ்டமியன்று எங்கு பார்த்தாலும் ஜனங்கள் கும்பல் கும்பலாக நின்று கண்ணனைத் துதிப்பர். இப்படிப்பட்ட திவ்விய க்ஷேத்திரங்களாகிய மதுரா, பிருந்தாவனம் தரிசிப்பவர்கள் மிகவும் பாக்கியசாலிகள் என்பதில் ஐயமில்லை.

இக்கலியுகத்தில் நற்காரியங்கள் செய்பவர் சிலரே யாவர். இப்படிப்பட்ட க்ஷேத்திரங்களுக்குச் சென்று கடவுளைத் தரிசித்து வந்தவர்களை நாம் பார்த்தாலும் நமது சமஸ்த பாபங்களும் நாசமடைந்து, நாம் பரிசுத்தராய் எட்டற்கரியாத வைகுந்தமடையவோமென்றால் இவ்விடங்களின் மகிமையைச் சொல்லவும் வேண்டுமோ?



# ஸரஸாவின் சாதுர்யம்

ஸ்ரீமதி பத்மாஸனி

மாலைப் பொழுது சுமார் 4 மணியிருக்கலாம். ஜகதீசய்யர் தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு, வெளியில் செல்வதற்குத் தயாராக இருந்தார். அவருடைய அருமைக் காதலி ஸரஸா மடித்துக் கொடுக்கும் வெற்றிலையை மென்றுகொண்டே, “ஏன் ஸரஸா, உன் முகமேன் வாட்டமடைந்திருக்கின்றது?” என்று வினவினார்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட ஸரஸா முகத்தைச் சற்று சுளித்த வண்ணம், “எனக்கென்ன வாட்டம், என்பிழைப்பே தான் வாட்டமாக இருக்கிறதே, அதைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரிந்திருக்கலாமே. நீங்கள் இன்று எவ்விடம் போகப் போகிறீர்கள்! ஐயோ, பேச்சோடு பேச்சாகக் கேட்டு விட்டேன். சகுனத்தடை செய்து விட்டேன் என்று கோபிக்காதீர்கள்,” என்று கூறினாள்.

ஜகதீசய்யர்: சரிதான், உன்னுடைய முகவாட்டத்தின் காரணத்தைத் தெரிந்துகொண்டேன். புருஷர்கள் வெளியில் போகிற இடங்களுக்கெல்லாம் ஸ்திரீகளை அழைத்துப் போவதென்பது முடிகின்ற காரியமா? மேலும் நான் போவது, இப்பொழுது புதியதாக அமைத்திருக்கும் மந்திரிசபையைக் கண்டனம் செய்வதற்காகக் காங்கிரஸ் தலைவர்களின் தலைமையில் பீச்சில் கூடும் ஒரு பொதுக் கூட்டத்திற்குப் போகின்றேன். அவ்விடத்திற்கெல்லாம் உன்னை அழைத்துப் போவது சரியன்று.

ஸரஸா: எனக்கு எப்பொழுதும் வீட்டில் அடைப்பட்டுக் கிடப்பது மிக்க கஷ்டமாக இருக்கிறது. பொழுதே போக மாட்டேனென்கிறது.

ஜகதீசய்யர்: ஏன் பொழுது போகவில்லையென்கிறாய்? உனக்குத் தான் வேண்டிய சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் வரவழைத்துக் கொடுத்திருக்கிறேனே!

ஸரஸா: அவைகளிலெல்லாம் ஸ்திரீகள் வெளியிலேயே செல்லக்கூடாதென்று தான் எழுதியிருக்கிறார்களோ?” ஜகதீசய்யர், மிகுந்த கோபத்துடன், “சரிதான், அதைப்பற்றியெல்லாம் நான் உன்னைக் கேட்கவில்லை. நீ வெளியில் செல்வதில் எனக்குத்தான் இஷ்டமில்லை,” என்று கடிந்து கூறவே ஸரஸா வாய்திறவாமல் மௌனமாக இருந்துவிட்டாள். உடனே ஜகதீசய்யர் மளமள வென்று வெளியில் போய் விட்டார்.

ஸரஸா, மிகுந்த புத்தி தீக்ஷண்யமும், அதிசயிக்கத் தக்க ரூபலாவண்யமும், கல்வியறிவும், கணவனிடத்துக் கரைகாணாத அன்பும், பக்தியும், கொண்ட ஓர் உத்தமி. கணவன் சொல் மீறாதகாரிகை. ஜகதீசய்யர் வெளியில் சென்றவுடன் ஸரஸா மிகுந்த துயரத்துடன் ஸோபாவின் மீது சாய்ந்தாள். அவள் கண்களினின்றும் கண்ணீர்த் துளிகள் முத்துப் போன்று சிந்தின. “ஆ! என்னே என் வாழ்க்கை. சிறைவாசம் போன்ற இவ்வாழ்வும் ஓர் வாழ்வோ? ஏதுமறியா நிரபராதியாகிய என்மீது என் கணவர் சந்தேகம் கொள்ளுகின்றாரே! அவருடைய மனதிலிருக்கும் இச்சந்தேகப் பேயை எப்படி ஓட்டுவேன்! ஸ்திரீகள் ஒன்றுமறியாப் பேதைகளென்றும், அவர்களுக்குத் திடசித்தமும் மனோதைரியமும் கிடையாதென்றும், என் கணவர் மனத்தைக் கவர்ந்து கொண்டிருக்கும் இந்த மூடுபனியை நான் எவ்வாறேனும் விலக்க வேண்டும். என்னுடைய, உண்மையுள்ள, பரிசுத்தமான, நடத்தையை நான் நிரூபிக்கவேண்டும். அவர் மனதிலுள்ள சந்தேகப் பேயை விரட்டி ஓட்டவேண்டும். அப்பொழுதே நான் என் கடமையை நிறைவேற்றியதாகும்.

குடும்பத்தில் சந்தேகமற்ற வாழ்வை நிலை நிறுத்திச் சீர்திருத்துவது ஸ்திரீகளின் கடமையன்றோ! ஆகையால் நான் இன்றுமுதல் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, எனது இடரையும், கணவரது சந்தேகத்தையும் அகற்றவேண்டும்” என்று தன்மனதில் பற்பலவாறு எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள்.

அப்பொழுது ஸரஸா திடீரென்று எழுந்து டெலிபோன் அருகில் சென்று, ரிஸீவரின் மூலம் தன்னுடைய சிநேகிதி கோகிலத்தை உடனே வரும்படி அழைத்தாள். அவளும் உடனே மோட்டார் காருடன் வருவதாகப் பதில் அளிக்கவே ஸரஸா மிகுந்த சந்தோஷத்துடன், ரிஸீவரை மாட்டிவிட்டு ஸோபாவில் வந்து அமர்ந்து, கோகிலத்தை எதிர்பார்த்த வண்ணமிருந்தாள்.

வீட்டை விட்டு அகன்ற ஜகதீசய்யர், நேரே பீச்சை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். “என் ஸரஸா மிகுந்த புத்திசாலியே. என் மனதைக் கவர்ந்த மாமணி. ஆனால் நான் அவள் மீது கொண்டிருக்கும் கரைகாணாத காதலே, அவள் இஷ்டப்படி நான் நடக்க முடியாததற்குக் காரணம். நான் அவளை அடிக்கடி வெளியில் அழைத்துச் சென்றேனாகில், வேறு யாரையேனும், அவள் நேசித்து விட்டால், ஐயோ, பிறகு என்கதி அதோகதிதான்,” என்று பற்பலவாறு எண்ணமிட்டவண்ணம் சென்று கொண்டிருந்தார்.

அந்தோ, தன் மனைவியுடன், அநேக நாட்கள் நெருங்கிப் பழகும் ஜகதீசய்யர் அவளுடைய உண்மையான குணத்தை அறிந்து கொள்ள முடியாமல், சந்தேகப் பேய்க்கு அடிமையானது மிக்க பரிதாபம். தன் மனைவி, கெட்ட நடத்தை யுள்ளவளா? நல்ல நடத்தை யுள்ளவளா? என்பதைச் சில நாட்களில் அறிந்து கொள்ள முடியாதா?

பீச்சில் மாபெரும் கூட்டம் கூடி ஒரே அமளியாக இருந்தது. ஜகதீசய்யர் அங்குமிங்கும் அலைந்து ஓர் இடத்தில் வந்து நின்றார். தற்செயலாய் மறுபக்கம் திரும்பினார். அவருக்குச் சிறிது தூரத்தில் நின்ற ஓர் ஸ்திரீயைக் கண்டு திடுக்கிட்டார். “ஆ! அவள் யார்! என் ஸரஸாவைப் போலவேயிருக்கிறாளே! இதென்ன விந்தை! அவள் தானா!” என்று பிரமை பிடித்தவர் போல அந்த ஸ்திரீயை உற்று நோக்கினார். ‘ஆ! அதே புடவை! அதே முகச்சாயல், ஆனால் இவள் கோஷா ஸ்திரீயைப்போல அரைத்தலை மூடியிருக்கிறாள்,’ என்று நினைக்கும் பொழுது, அந்த ஸ்திரீ யாருடனோ மறுபக்கம் வார்த்தையாடிக் கொண்டிருந்தவள், திடீரென்று வேறிடத்திற்குச் சென்று விட்டாள். அந்த ஸ்திரீ

இவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இவர் பக்கம் திரும்பவு மில்லை. ஜகதீசய்யரின் மனத்தில் பலத்த சந்தேகங்கள் எழுந்து ஒன்றன் பின் ஒன்றாக மோதிப் போராடத் தொடங்கின. அவ்விடத்தில் அவருக்கு இருப்பே கொள்ளவில்லை. மிகுந்த கலவரத்துடன் தன் வீட்டை நோக்கி, விரைவில் நடந்து பஸ்ஸில் ஏறினார். ஆனால் அவருடைய மனதோ, அப்பொழுதே வீட்டில் போய் சேர்ந்துவிட மாட்டோமா வென்று துடிதுடித்தது. அரை மணி நேரத்தில் தன் வீட்டையடைந்தார். வாயிற் கதவைத் தடதட வென்று தட்டினார். உட்பக்கம் தாழ்ப்பாளிட்டிருந்தது. வேறு பேச்சு மூச்சையே காணோம். அவருடைய சந்தேகம் பலக்கவே, தேகம் பதற "ஸரஸா!" வென்று சப்தம் போட்டார். உடனே உள்ளேயிருந்து யாரோ வரும் காலடியோசை கேட்டது. அடுத்த நிமிஷம் கதவு திறக்கப்படவே, ஜகதீசய்யர் பிரமித்தார். ஸரஸாவும் திடுக்கிட்டவளாய், "ஏன் அதற்குள்ளாக வந்துவிட்டீர்கள்? என்ன விசேஷம்? நீங்கள் இனி இரவுதான் வருவீர்களென்று, கதவுகளையெல்லாம் தாழ்க்கோலிட்டு, மாடியின் மேல் புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தேன்," என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

ஜகதீசய்யருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தான் கண்டது கனவோவென்று திகைத்தார். அவள் முகத்தை உற்று நோக்கினார். சிறிதும் களங்கமற்றுப் புன்முறுவலுடன் விளங்கியதைக்கண்டு வெட்கினார். பிறகு ஒன்றும் கூறவகை தெரியாமல் விழித்து, "எனக்குத் தலையை வலிக்கிறது. சிறிது அமிர்தாஞ்சனம் எடுத்துவா," என்று கூறி மளமளவென்று மாடியின்மேல் ஏறிச்சென்று தன் அறையிலுள்ள கட்டிலின்மீது படுத்துக்கொண்டார். தன் கணவனுக்கு ஜுரம் வந்துவிடப் போகிறதே என்று ஸரஸா அருமையுடன் தேய்த்த அமிர்தாஞ்சனத்தின் எரிச்சலும், மனதிலுள்ள பலவித சங்கடங்களுமாகச் சேர்ந்து அவர் மனத்தை உலுப்பத் தொடங்கின.

இப்படியே அன்றையப்பொழுது சென்றவுடன் மறுநாள் ஜகதீசய்யர், தன் மனதைச் சற்றுத் தேற்றிக்கொண்டு, "ஸரஸா அப்படியெல்லாம் நம்மை ஏமாற்ற மாட்டாள்" என்று சிறிது நம்பிக்கை கொண்டார். இப்படியே ஒரு வாரம் செல்லவே அவரது சந்தேகம் அறவே ஒழிந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை சபாவில் உயர்தரமான ஓர் சங்கீதக் கச்சேரி. ஜகதீசய்யர் சபாவில் மெம்பர். ஆனபடியால் அவருக்கு டிக்கட் வந்திருந்தது. அவர் பழைய நினைவை மறந்து எப்பொழுதும் போல சபாவுக்குச் சென்றார். சிறிது நேரத்தில், தகுந்த பக்க வாத்தியங்களுடன் கச்சேரி ஆரம்பமாயிற்று. எல்லோரும் மிக்க ஸ்வாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருக்கையில், தற்செயலாக ஜகதீசய்யர் ஸ்திரீகள் உட்கார்ந்திருக்கும் இடத்தை நோக்கினார். உடனே அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. மார்பு படபட வென்று அடித்துக் கொண்டது. 'ஆ! இதென்ன ஆச்சரியம்! அன்று பீச்சில் கண்ட, ஸரஸாவைப் போன்ற அதே கோஷா ஸ்திரீ! ஐயோ! இவள் யார்!" என்று நினைக்கும்பொழுது அவருடைய மூளை கிர்ரென்று சுழலவாரம்பித்தது. அத்தருணம் ஓர் பெருத்த ஸ்திரீ வந்து, அப்பெண்ணின் முன்னால் வந்து உட்கார்ந்தபடியினால், மறுபடியும் அக்





கோஷா ஸ்திரீயைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. அவருடைய மனது மிகுந்த சஞ்சலத்தை யடைந்து, அங்கு இருக்கக் கொள்ளாமல், பயித்தியம் கொண்டவரைப் போல எழுந்து, வெளியே வந்து, பஸ்ஸிலேறி வீட்டையடைந்தார்.

இப்பொழுது கதவைத் தட்டாமல், ஸரஸாவின் நிலைமையை அறிய வேண்டுமென்று நினைத்துப் பின்புறத் தோட்டத்தின் வழியே சென்று, புழக்கடைப் பக்கமுள்ள மாடிப்படியின் மீது சிறிதும் சப்தமின்றி ஏறி, சில வராண்டாக்களைக் கடந்து தங்களுடைய அறையின் சமீபத்தில் வந்து, ஜன்னலண்டை ஒதுங்கி நின்று மெள்ள எட்டிப் பார்த்தார். அப்படியே திகைத்து ஸ்தம்பமானார். அத்தருணம் ஸரஸா அவ்வறையிலுள்ள ஸோபாவின் மீது சாய்ந்த வண்ணம், ஓர் புஸ்தகத்தை மிகுந்த ஸ்வாரஸ்யத்துடன் படித்துக் கொண்டிருந்தாள். அவள் முகமோ நிர்மலமாக இருந்தது. எங்கும் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. அந்த நிலைமையில், ஜகதீசய்யர் சற்றும் விலகாமல், அப்படியே கல்லாய் சமைந்து ஐந்து நிமிஷம் நின்றார். அசப்பில் அப்பக்கம் திரும்பிய ஸரஸா அவரைக் கண்டவுடன், நடுங்கி, "ஆ! நாதா! இதென்ன நிலைமை! உங்களுக்கு புத்தி சரியாக இல்லையா! எனக்குப் பயமாக இருக்கிறதே," என்று நடுக்கத்துடன் கூறினாள். அவ்வார்த்தைகளைக் கேட்ட ஜகதீசய்யர் திடுக்கிட்டு உணர்வை அடைந்து, "ஒன்றுமில்லை, ஸரஸா, பயப்படாதே. நான் சிறிது நேரமாய் வாயிற் கதவைத் தட்டினேன். நீ ஸ்வாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்தபடியால் நான் தட்டியது உனக்குக் கேட்கவில்லை போலிருக்கிறது. ஆகையால் உன்னைத் தொந்திரவு செய்ய வேண்டாமென்று பின்புற வழியாய் வந்தேன்," என்றார். பிறகு ஸரஸா அறைக் கதவைத் திறக்கவே, ஜகதீசய்யர் உள்ளே வந்து ஸோபாவில் 'அப்பாடா' வென்று சாய்ந்தார். அவர் மிகுந்த களைப்புடன் கண்களை மூடியதால், ஸரஸா அவரை ஒன்றும் கேட்டுத் தொந்திரவு செய்யவில்லை. இந்த மனோவியாதியால் ஜகதீசய்யர் உடம்பே இளைத்து விட்டது. ஸரஸா எவ்வளவோ கேட்டும் சரியாகப் பதில் கிடையாது.

அவருடைய நண்பர் ஹரிஹரசர்மா ஒரு நாள் ஜகதீசய்யரை, 'இன்று சினிமாவுக்கு வந்துதான் ஆகவேண்டு' மென்று கட்டாயப் படுத்தினார். ஜகதீசய்யர் எவ்வளவோ கூறியும் கேட்காததினால், பேர்க்குச் சம்மதித்து இருவரும் சினிமாவுக்குச் சென்றார்கள். ஜகதீசய்யர் தன் வீட்டு வேலைக்காரி மீனுவை ஸரஸாவுக்கு இரவு துணைவைத்து விட்டுச் சென்றிருந்தார். சினிமா பாதி ஆனபிறகு, நடுவில் "இண்டர்வெல்," விட்டு, விளக்கை யெல்லாம் ஏற்றினார்கள். ஜகதீசய்யர் அப்பொழுது நாலா பக்கமும் சுற்றிப்பார்க்கவே, ஸ்திரீகளுக் கிடையிலிருந்த கோஷா ஸ்திரீயைக் கண்டார். அப்படியே அவருக்குப் பகீரென்றது. "ஐயோ! பேயா! பிசாசா! என்னையேன் எங்கும் பின் தொடருகின்றது," என்று பீதியுடன், அவளை உற்று நோக்க ஸரஸாவே என்று, பலமாகத் தோன்றியது.

இதற்குள் விளக்குகள் அணைந்தன. அவருக்குச் சற்றும் அங்கு இருக்க முடியாமல், தன் நண்பரை அழைத்து, "எனக்கு உடம்பு ஜுரம் வரும்போலிருக்கிறது. என்னால் உட்காரவே முடியவில்லை. நான் போகிறேன், நீங்கள் பிறகு வாருங்கள்,"

என்று கூறி அவ்விடத்தை விட்டு எழுந்து விரைவில் தன் வீட்டை அடைந்து, வாயிற் கதவைத் தட்டினார். உடனே மீனா வந்து கதவைத் திறந்தாள். "அம்மா என்ன செய்கிறாள்?" என்று படபடப்புடன் கேட்டார். "அம்மா சற்று முன் தான் மாடிக்குச் சென்று படுத்துக் கொண்டார்கள்", என்றாள்.

உடனே பதை பதைப்புடன் வேகமாய் மாடியின் மேல் ஏறி, ஒருக்கணித்திருந்த அறைக் கதவை மெள்ளத் திறந்து எட்டிப் பார்த்தார். ஆகா! என்ன அற்புதமான காக்ஷி! விளக்கு மிக்க மங்கலாக எறிந்து கொண்டிருந்தது. மேஜையின் மீது தனக்குப் பால் வைத்து மூடியிருந்தது. கட்டிலின் மீது, சிறிதும் சப்தமின்றி, மிக்க ஆழ்ந்த துயிலில் இருந்தாள் ஸரஸா. ஜகதீசய்யர் மெள்ளக் கட்டிலின் அருகில் சென்று, ஸரஸாவின் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அவள் முகத்தைப் பார்க்கப் பார்க்க அவரது மனது இளகியது. அவள் மீது கொண்டிருந்த சந்தேகமெல்லாம், அன்பாகவும், பரிதாபமாகவும் தோன்றியது. 'சிறிதும் களங்கமற்ற அருந்ததியைப்போன்ற நம் மனைவியைப் பலவிதத்திலும் சந்தேகித்தோமே,' என்று நினைத்து வருந்தி, அவள் கன்னத்தில் அன்புடன் முத்தமிட்டார். உடனே ஸரஸா திடுக்கிட்டு எழுந்து, 'யார்!' என்றாள். ஜகதீசய்யர், "ஒருவருமில்லை, நான் தான், என் கண்ணே! உன்னை நான் இதுவரையிலும், நீயறியாது, சந்தேகித்துப் பற்பல மனோவேதனைக்காளானேன். இன்று உன்னுடைய ரம்மியமான துயிலினின்று கண்ட பிறகு உன்மீதிருந்த சந்தேகம் பறந்து போய் விட்டது," என்றார்.

ஸரஸா: ஆ! அப்படியா! என் மீதிருந்த சந்தேகம் எப்படி ஒழிந்தது?

ஜகதீசய்யர்:— உன் உருக்கொண்ட ஓர் உருவம் உன்மீதிருந்த சந்தேகத்தை ஒழித்தது.

ஸரஸா: என்னைப் போலவா! நான் தானா! என்று கலகலவென்று நகைக்கவே, அடுத்த அறையினின்றும், கலகலவென்று நகைக்கும் சப்தம் கேட்டது.

இவைகளைக் கேட்ட ஜகதீசய்யர் பிரமித்தார். உடனே அடுத்த அறையிலிருந்து, ஹரிஹரசர்மாவும், கோகிலமும் வந்தார்கள். ஹரிஹரசர்மா, "என்ன ஜகதீசா, உன்னை யேமாற்றிய ஸரஸாவென்னும் கள்ளியை என்ன செய்யலாம்! என் மனைவியும், என் மோட்டாரும், என் நானுமே சேர்ந்து செய்த விளையாட்டு எப்படியிருந்தது? இனியாவது, இந்த அருங்குணவதியின் மீதிருந்த சந்தேகப் பேயை ஒழித்து, அவளுக்கும் எல்லோரையும் போல சுதந்திரம் கொடுத்து விடு," என்றார். "ஆ! ஸரஸாவா இப்படி ஏமாற்றினாள்!" என்று திகைப்புடன் கூறினார்.

"ஆம், கோகிலத்தாலும், அவளுடைய மோட்டாரின் உதவியாலும் நான் கோஷா ஸ்திரீயைப் போல நடித்து, தாங்கள் வீடு வருவதற்குள் நான் மோட்டாரில் வீடு வந்து சேர்ந்து தங்களை ஏமாற்றினேன். என்னை மன்னிக்க வேண்டும் என்று, ஸரஸா அவர் பாதத்தில் பணிந்தாள். ஜகதீசய்யர், அன்புடன் வாரி அவளை அணைத்து "இனி உன் மீது சந்தேகிக்க மாட்டேன்" என்றார். நண்பர்களும் சந்தோஷத்துடன் வீடு திரும்பினார்கள்.



# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

## நெற்றிக் கொம்புமான்

அமெரிக்காவில் மெக்ஸிகோ பிரதேசத்தில் ஒருவகை மான் இருக்கிறது. இந்த மான் இனத்துக்கு இருகொம்புகள் கிடையாது. நெற்றியில் ஒரே கொம்புதானுண்டு. அது வலுவானது. அதை வேண்டும்போது வெளியே நீட்டவும், உள் இழுத்துக்கொள்ளவும் இந்தமானுக்கு சக்தி உண்டு. இந்த மான்ஜாதி வேறு தேசமெதிலும் கிடையாது.

.... .... ....

## விவசாயத்திலும் மின்சாரம்

ஆஸ்திரேலியாவில் சில கோதுமைப் பண்ணைகளில் மின்சார சக்தியால் பயிர் செய்கிறார்கள். இதனால் நிலங்களின் உற்பத்தி சக்தி அதிகரிக்கப்பட்டு வருஷத்துக்கு மூன்று போகங்கள்கூட சில நிலங்களில் பயிராக்கப் படுகின்றன.

... ... ...

## குருட்டு விவசாயி

கானடாவில் பீட்டர்பரோவில் 65 வயதுடைய ஒரு குருட்டு குடியானவன் நூறு ஏக்கர் பண்ணையைத்தானே கவனித்துவருகிறான். மாடுகளுக்குத் தீனிவைப்பது, கொட்டில்களைச் சுத்திசெய்வது, பால் கறப்பது எல்லாம் அவனே செய்கிறான். நல்ல லாபமும் கிடைக்கிறது. அவன் தோழன் ஒரு நாய்க்குட்டியே!

... .... ....

## சொப்பனப் போட்டோ

தூங்கும்போது கனவு காண்பதை படமெடுக்க ஒரு நூதனயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அக்கருவியைத் தலையில் போட்டுக்கொண்டு உறங்கவேண்டும். அந்தக் கருவியுடன் சேர்ந்த காகிதத்தில் கனவுகாட்சிகள் உருவகம் பெற்றுப் பதிவாகின்றனவாம்.

... ... ...

## பால், வெண்ணை மரம்

பால் கொடுப்பது பசு, ஆடு முதலிய மிருகங்கள். வெண்ணை பாலினின்றும் கிடைப்பது. ஆனால் மேற்கு ஆப்ரிக்காவில் ஒருவித மரமிருக்கிறது. அதற்கு வெண்ணை மரமென்றே பெயர். அது ஒருவித வெண்ணை பதார்த்தம் கொடுக்கிறது. அது பசு வெண்ணையைவிட ருசியாக விருக்கிறது. தென் அமெரிக்காவில் ஒருவகை மரமிருக்கிறது. அந்தமரம் ஒருவிதப்பால் கொடுக்கிறது. இது பசும்பால் போலவேயுள்ளது. கார்டில்லெரோ வாசிகள் இப்பாலைத்தான் அருந்துகின்றனர்.

.... .... ....

## கண்ணாடி உணவு

இருபத்தைந்து வயதுடைய ஜப்பானியச்சிறுவன் மாங்லோ மினோமியோ கண்ணாடித்துண்டுகளையே ஆகாரமாகச் சாப்பிடுகிறான். எலக்ட்ரிக் லைட் பல்புகள் அவனுக்குப் பிரியம். தினம் ஆறுபாட்டில் கள்தான் அவனுக்கு ஆகாரம்.

.... .... ....

## 70 வருஷம் தூங்கிய ஸ்திரீ

பெட்டினுபியரி என்னும்சிறுமி இத்தாலியில் 1864ம் வருஷம் தூங்குவதற்கு படுக்கைக்குச் சென்றாள். அவள் இன்னும் எழுந்திருக்கவில்லை. சில சமயங்களில் சில

விஞடிகள்மட்டும் கண்விழிப்பதுண்டு. அப்பொழுது அவளுக்கு வயது 15, இன்று 88.

... ... ...

## கிழவியாக மாறும் சிறுமி

பர்மிங்ஹாமில் லாபமா என்னும் இடத்தில் 12 வளதுள்ள சிறுமி கேட்லயர் வருடத்திற்கு ஒருமுறை உருவமாறிக் கிழவி ஸ்வரூபமாகி வந்தாள். இந்த உரு மாற்றம் சீதோஷ்ணநிலையை ஒட்டியுமிருக்க வேண்டுமென நம்பப்படுகிறது. மூன்று வயதிலிருந்தே இந்த மாற்றம் ஆரம்பித்து விட்டதாம். சில மாதங்கள்மட்டும்தான் இந்தக் கிழவியின் அம்சங்கள் பரிபூரணமாக அமைந்திருக்கின்றனவாம். வஸந்த காலம் வந்ததும் சிறுமியின் கிழரூபம் மாறி, மீண்டும் அவளுடைய சுந்தரசொரூபத்தை அடைந்துவிடுகிருள். இந்த அதிசய உருவமாற்றத்துக்குக் காரணம் எப்பேர்பட்ட டாக்டர்களாலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

... ... ...

## ஆங்கிலம் பேசும் நாய்

வாடர்வில்லியில் ஸ்ரீமதி மேபல் ராபின்ஸன் என்பவரிடம் இருந்த நாய் மனிதர் குரலில் இருபது இங்கிலீஷ் வார்த்தைகளைப் பேசும்சக்திவாய்ந்ததாய் இருந்தது. தன் எஜமானியின் விருந்தினர்களை அது "ஹல்லோ" என்றுகூறி வரவேற்கும். அவர்கள் போகும்போது "போய் வாருங்கள்" என்றுகூறி அனுப்பும். அது இறந்தவுடன் அதன் கழுத்தை யுனிவர்ஸிடி டாக்டர் ஜான் ஹாப்கின்ஸ் பரிசோதித்துப்பார்த்ததில் அதன் கண்டம் மனிதர் கண்டத்தைப் போலிருந்தது. அதனுல்தான் அது மனிதரைப்போல் பேசியது.

... ... ...

## காதல் அளக்கும் கருவி

புகாரெஸ்ட் நகரில் உள்ள புரொபஸர் மான்ஸனே என்னும் ஒரு வைத்திய மேதாவி ஒரு நூதனயந்திரம் கண்டுபிடித்திருக்கிருர். ஒரே மனிதன் ஒன்றுக்கு மேல்பட்ட மங்கையரைக் காதலிக்கின்ருன் என்ற சந்தேகம் ஏற்பட்டால் அவன் காதல் அளவைக் கண்டுபிடிக்க அந்தக் கருவி உபயோகப் படுகிறது. பல தாரப் புருஷர்கள் பாடு இனித் திண்டாட்டம்தான்!

... ... ...

## இடியோசை

இடியோசை 18 மைல்களுக் கப்பால் கேட்காது; சாதாரணமாக 9 மைல் தூரத்துக்கு அதிகமாக அது கேட்பதில்லை.

... ... ...

ஹாலந்தில் ஒரு மனிதனுக்கு ஒரு பசு வீதம் இருக்கிறதாம்.

... ... ...

## 120 பேரை மணந்தவள்

ஸ்ரீமதி வினிப்ரட் என்னும் 30 வயதுள்ள அமெரிக்கப்பெண் சமீபத்தில் 120 வது முறையாகக் கல்யாணம் செய்திருக்கிருள். 119 கணவர்களுக்கு விவாஹ விடுதலை அளித்துவிட்டாள். சராசரி இரு மாதங்களுக்கு ஒருமணம். 17 வயதிலிருந்து அவள் கல்யாண வேட்டையில் இறங்கிஞள்.



# செய்தித்திரட்டு

## இ—ஐங்

இ—ஐங் என்ற சீனமாது ராயல் பெக்கிங் யுனிவர்ஸிடியில் இங்கிலீஷ் ஆசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிருர். சைஞவில் பல்கலைக்கழகத்தில் (யுனிவர்ஸிடி) பூராக் காலத்தையும் செலவழிக்கும்படி அமர்த்தப்பட்ட சீனமுதல் ஸ்திரீ இவரே.

... ... ...

## பால் கறக்கும் யந்திரம்

பசு மாடுகளிடம் நம் நாட்டில் பால் கறப்பதற்குக் கையையே உபயோகிக்கிரேம். ஆனுல் மேல் நாடுகளில் பால் கறப்பதற்கும் ஒரு நூதனக் கருவி கண்டுபிடித்து உபயோகப் படுத்துகிருர்கள். பசுவின் மடியில் அந்த ரப்பர் கருவியை மாட்டி விட்டால் பால் தானுகவே சுரந்து ரப்பர் கோப்பைகளில் நிறைகின்றது. ரப்பர் கோப்பைகள் மடியில் இருக்கும்போது மிஷினை மூட்டி விடவேண்டும். ஆஸ்திரேலியா, நியூஸிலந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் இம்முறை அதிகமாகக் கையாளப்பட்டு வருகிறது.

... ... ...

## மதுரை சேவாசங்க விழா

மதுரையிலிருக்கும் ஸ்ரீமீஞக்ஷி சேவா சங்கத்தின் (உள்ளூர் மாதர் கழகம்) 14-வது வருஷ விழா ஏப்ரல்மீ 10உ வெகு விமரிசையாக ஸ்ரீமதி கௌரி சங்குண்ணி யம்மாளின் தலைமையில் கொண்டாடப்பட்டது. சிறுமிகளும், வனிதையரும் பலவித விநோதங்களின் மூலம் சபையோரைப் பரவசப் படுத்தினர். காரியதரிசி ஸ்ரீமதி ஜார்ஜ் ஜோசப் வருஷாந்திர அறிக்கையைப் படித்தார். சங்கத்தின் வளர்ச்சிக்கான சொற்பொழிவுகள் பல நிகழ்த்தப்பட்டன.

... ... ...

## காப்பி, டீ, கோகோ

இன்று பெரும்பான்மையான மக்கள் அருந்தி அனுபவிக்கும் காப்பி ஆதியில் யாரால் கண்டுபிடிக்கப்பட்டதென்று தெரியவில்லை. ஒரு ஆட்டிடையன் காப்பிக் கொட்டையின் அபூர்வ குணுதிசயங்களை ஆதியில் கண்டு பிடித்தான் என்று வதந்தி உலாவுகிறது. சரித்திர பூர்வமாகக் கண்டு பிடித்தவர் ஆல்பினஸ் என்னும் வெனிஸ் நகரத்து வைத்தியர் என்று சொல்லப்படுகிறது. 1652-ம் வருஷம் துருக்கியில் வியாபாரம் செய்து வந்த எட்வர்ட் என்னும் வியாபாரி காப்பியை இங்கிலாந்தில் புகுத்திஞர். பிரான்சில் அது 1664-ம் வருஷம் முதன் முதலில் உபயோகப் படுத்தப்பட்டது. டீ ஆதியில் சைஞவில் தான் உபயோகப் படுத்தப்பட்டதாம். கோகோ முதன் முதலில் மெக்ஸிகோவில் தான் கண்டுபிடிக்கப்பட்டது.

... ... ...

## லேடி எர்ஸ்கின் நன்கொடை

லேடி எர்ஸ்கின் திருமணியிலிருக்கும் குஷ்ட ரோகிகள் நிலையத்துக்கு தன் சொந்த ஹோதாவில் 1500 ரூபாய் நன்கொடை அளித்திருக்கிருர். அவரது அனுதாபம் பாராட்டத்தக்கது.

... ... ...

## நங்கையர் நல்வழிச் சங்கம்

புதுச்சேரியிலுள்ள மேற்படி சங்கத்தின் ஐந்தாவது வருஷாந்திர விழா வெகு விமரிசையாக ஏப்ரல் முதல் வாரத்தில் கொண்டாடப்பட்டது. இதன் அக்கிராசனர் ஸ்ரீமதி ஜி. தாம்பே. ஒரு தேக் கச்சேரியும் நடை பெற்றது. இவ்வனிதையர் மன்றத்தில் சுமார் ஐம்பது அங்கத்தினர்கள் இருந்து வருகிறார்கள். சமூக முன்னேற்றத்துக்கான அநேக வேலைகளில் இச்சங்கத்தார் ஈடுபட்டு உழைத்து வருகிறார்கள்.

... ... ...

## அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ்

சமீபத்தில் டில்லியில் நடை பெறப் போகும் அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ் கூட்டத்தின் வரவேற்புக் கழக அக்கிராசனராக ஸ்ரீமதி சாந்தபிபி தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார். மேற்படி காங்கிரஸின் வரவேற்பு அக்கிராசனராக நியமிக்கப்பட்ட முதல் ஸ்திரீ இவரே.

... ... ...

## தாயின் வீரம்

யூகோஸ்லோவியாவைச் சார்ந்த நிக்கோலா மார்க்கெவித் என்னும் வாலிபன் ராணுவப் பயிற்சிக்குப் பயந்து தன் தேசத்தை விட்டு ஓடி புடாப்பெஸ்டில் ஒரு சிவில் உத்தியோகத்திலமர்ந்தான். பின் விவரங்களைத் தன் தாய்க்கு எழுதி கொஞ்சம் பணமும் அனுப்பினான். தாயின் பதில் அவனைத் திடுக்கிடச் செய்தது. அவள் அவனைப்பேடி என்று கூறித் தற்கொலை செய்து கொள்ளச் சொன்னாள். நிக்கோலாவும் வெட்கித் தற்கொலை செய்து கொண்டான். தாய் சொல் காத்த தனயன்!

... ... ...

## 1936 பிரிட்டிஷ் பெண்களின் அதிர்ஷ்ட வருஷம்

1936-ம் வருஷம் பிரிட்டிஷ் மாதர்களுக்கு மிகவும் மங்களகரமான வருஷம். பெண்கள் எழுதிய அநேக நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன. நன்றாக விற்பனையான நாவல்களை நங்கையர்களே எழுதினார்கள். எட்டாவது ஹென்றிக்குப் பிறகு ஒரு சாமான்யப் பெண் மஹாராணியாய் வந்ததும் இந்த ஆண்டிலேயே!

... ... ...

## ஸ்ரீமதி மோனா ஹென்ஸ்மன்

சென்னை மாகாண உயர்தர சபைக்கு **(Madras Legislative Council)** சர்க்கார் ஸ்ரீமதி ஹென்ஸ்மன் அவர்களை மூன்று வருஷங்களுக்கு நியமித்துள்ளார்கள். இவர் டாக்டர் எச். எஸ். ஹென்ஸ்மனின் மனைவி. வெகுகாலமாக கல்வி, சமூக, சுகாதார முன்னேற்றத்துக்காக உழைத்துவருகிறார்.

... ... ...

## ஆரியசமாஜிகள் விவாஹ சட்டம்

பல ஜாதியினரும் ஆரிய சமாஜிகளாக ஆகலாம். பல மதத்தினர்களும் ஆரிய சமாஜத்தில் சேரலாம். அவர்களிடை நிகழும் மணங்களைச் சட்ட பூர்வமாக அனுமதித்து சில குறைகளை நீக்கும் பொருட்டு இந்தியா சட்டசபையில் நிறைவேறிய ஆரியசமாஜ விவாஹ அனுமதி மசோதா ஏப்ரல்மீ 7உ இராஜாங்க சபையிலும் நிறைவேறியது.





லோத்ரா மகிமையை எழுதி முடியாது

# லோத்ராவின் மகிமை

### சிறந்த ஔஷதம்

ஸ்ரீமதி அன்னு சாண்டி, எம்.ஏ., பி.எல்., அட்வகேட், ஆசிரியை, "ஸ்ரீமதி", திருவனந்தபுரம்:—"நான் தங்கள் லோத்ராவை உபயோகித்தேன். சூதகசம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் லோத்ராவே தலை சிறந்த ஔஷதம். அது அருந்த ருசியாயிருப்பதும், பத்தியமில்லாமலிருப்பதும் மேலும் குறிப்பிடத்தக்கது."

### தடைப்பட்ட மாதவிடாய்

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி அம்மாள், கொள்ளேகால், மைசூர்:—"கடந்த மூன்று வருஷங்களில் எனக்கு மாதவிடாய் சரியாக ஏற்படவில்லை. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் தூரம் வந்தது. இதனால் எனக்கு இடுப்பிலும், கணுக்களிலும் நோவு ஏற்பட்டது. நான் ரொம்பவும் மெலிந்து விட்டேன். என் உடல் எனக்கு பெரும் பாரமாகத் தோன்றியது. உடனே உங்கள் லோத்ரா இரண்டு புட்டி யருந்தினேன். என் வியாதி என்னை விட்டு நீங்கியது. இன்னும் ஓரிரண்டு பாட்டில் மருந்து சாப்பிட நான் விரும்புகிறேன். மேலும் என்னைப் போன்ற உபாதைகள் உள்ள எல்லோரும் லோத்ராவை உபயோகிக்குமாறு நான் சிபார்சு செய்கிறேன்."

### சகோதரிகளின் அனுபவம்

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—"லோத்ராவை உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருதுசூலை கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்."

### ஆச்சரியமான குணம்

ஸ்ரீமதி கர்த்தா, கொரளி அம்மஞத் ஹவுஸ், இரிஞ்சலக்குடம், கொச்சி:—"கடந்த பத்து வருஷங்களாக நான் மாதவிடாய் சம்பந்தமான தொந்தரவால் ரொம்பவும் கஷ்டப்பட்டு வந்தேன். உங்கள் லோத்ரா என்னை ஆச்சர்யப்படத்தக்கவிதத்தில் அக்கஷ்டத்தினின்றும் விடுவித்து விட்டது."

### கர்ப்பாசய ரோக நிவாரணி

ஸ்ரீமதி மிஸ். அம்மாகுட்டி அம்மாள், சங்கீத உபாத்தியாயினி, சர்க்கார் ஹைஸ்கூல், திருச்சூர்:—"நான் நெடுநாட்களாகப் பலவிதமான கர்ப்பாசயரோகத்தினுல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். அநேக விதமான வைத்தியங்கள் செய்தும் குணம் கொடுக்கவில்லை. கடைசியாக உங்களது (கேசரி) லோத்ராவை உபயோகித்த ஒரு வார தினத்திற்குள் காரடி வித்தையைப்போல் குணம் அடைந்தேன். அதன் மகிமை சொல்லமுடியாது."

எங்கும் கிடைக்கும்.

**கேஸரி குடீரம், சென்னை**


# ஆசிரியர் குறிப்புகள்

### அரசியல் நெருக்கடி

புது அரசியல் சீர்திருத்தம் ஏப்ரல் மாதம் 1உ அமுலுக்கு வந்து விட்டதென்று சர்க்கார் கூறுகிறார்கள். ஆனால் தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று ஜனப்பிரதிநிதிகள் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட காங்கிரஸ் கட்சி மெஜாரிட்டியாக இருக்கும் ஆறு முக்கிய மாகாணங்களில் அக்கட்சியார் மந்திரி சபை அமைக்க மறுத்துவிட்டார்கள். ஏன்? மஹாத்மா காந்தியடிகளின் யோசனைப்படி அவர்கள் கவர்னர்களை ஒரு வாக்குறுதி கேட்டார்கள். தங்கள் சட்டத்துக்குட்பட்ட நடவடிக்கைகளில் கவர்னர் குறுக்கிடக் கூடாதென்பதுதான் அவ்வுறுதியின் உட்கருத்து. கவர்னர்கள் அவ்வித உறுதிமொழி கொடுக்க சட்டப்படி தங்களால் முடியாதெனக் கூறிவிட்டனர்.

முடிவு என்ன? இந்த ஆறுமாகாணங்களிலும் பேருக்குச் சிலரை மந்திரிகள் என்று அந்தந்த மாகாண கவர்னர்கள் நியமித்து நிர்வாஹம் நடைபெற்று வருகிறது. இந்த நிலையை சர்க்காரும் விரும்பவில்லை. பொது மக்களும் விரும்பவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகளையும் கவர்னர்கள் கூட்டவில்லை. இது நியாயமென்று யாரும் சொல்லமுடியாது.

இந்த அரசியல் நெருக்கடியை சமாளிக்க வேண்டியது அத்தியாவசியமென்று பழுத்த மிதவாதிகள் கூட விரும்புகிறார்கள். இது விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்காரின் மனப்பான்மை மாறுதல் அடைந்தால் இருதேசங்களுக்கும் நன்மை விளையுமென்று திருவாளர் ஸ்ரீனிவாச சாஸ்திரி, சர் மஹமது உஸ்மான், சர் சிவஸ்வாமி அய்யர் போன்றவர்களே நினைக்கிறார்கள். லார்ட் ஸெட்லந்து பிரபு (இந்தியாமந்திரி) பரந்த நோக்கத்துடன் விஷயத்தைப் பரிசீலனை செய்து பார்த்தால் மஹாத்மா காந்தியடிகளுடனும் சமாதானம் செய்து கொள்ள ஒரு கௌரவமான மார்க்கமும், வழியும் கட்டாயம் கிடைக்குமென்பதே நமது அபிப்பிராயம். மஹாத்மா காந்தியடிகளின் செல்வாக்குக் குன்றுமுன்னரே இந்தியப் பிரச்சினையை சமரஸமாகத் தீர்த்து விடுவது இருதேசங்களுக்கும் நல்லது. தீவிரவாதிகளின் ஆதிக்கம் அப்பொழுது தான் குறையும். பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் தங்களது பொய்க்கௌரவத்தையும், பிடிவாதத்தையும் கைவிட்டு தாராளமனது காட்டி இந்தியர்களின் அன்பைப் பெறுவார்களாக!

... ... ...

### ஸ்திரீ உப அக்கிராசனர்

புதிய சீர்திருத்தத்தின்படி அமைக்கப்பட்டிருக்கும் அஸாம் மாகாண சட்டசபைக்கு ஸ்ரீமதி ரஹிமான் என்பவர் உப தலைவராக ஏகமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார். ஒரு ஸ்திரீயை, அதிலும் முஸ்லீம் மாதை உப அக்கிராசனராகத் தேர்ந்து எடுத்தற்காக அஸாம் சட்டசபை அங்கத்தினர்களுக்கு எமது மனப்

பூர்வமான வந்தனங்கள். இந்தத் தேர்தல் அம்மாகாண வாசிகளுக்கு மட்டு மன்றி நம் தேசம் முழுமைக்கும் ஒரு கௌரவ மாகும். தேச அரசியலில் ஸ்திரீகள் எவ் வித உயர்ந்த ஸ்தானங்களையும் கண்ணியத் துடனும், கௌரவத்துடனும், திறமை யுடனும் வகிக்கமுடியும் என்பதே நம் கருத்து. இது வரையில் அவர்களுக்கு சந் தர்ப்பங்கள் அளிக்காதது ஆடவர்களின் குற்றமே. சரித்திரத்தை ஆராய்ந்தால் ராஜரீகத்தில் சிறந்து விளங்கிய நாரீரத் தினங்கள் அனேகர் இருந்திருக்கிறார்கள் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்கும். இதர மாகாணசட்டசபைகளும் அசாம் சபையைப்பின்பற்றி ஸ்திரீகளைக் கௌர விக்கவேண்டு மென்று கேட்டுக் கொள் ளுகிறோம். ஸ்ரீமதி ரஹிமானும் தன் ஸ்தா னத்தை திறமையொடு நிர்வகித்து தன் குலத்துக்குப் பெருமை தேடுவாரென்று நம்புகிறோம்.

... ... ...

## மற்றொரு எட்வர்ட்

ருமேனிய இளவரசர் நிக்கோலஸ் முடி துறந்தார். நாட்டையும் விட்டு நீங்கி பர தேசங்களில் தனது வாழ்க்கையை நடத் தும்படி வற்புறுத்தப்பட்டிருக்கிறார். ஏன்? தான் காதலித்த ஒரு சாமான்ய குடும்பத் தில் பிறந்த நங்கையை அவர் மணந்து கொண்டதால் தான். அரசர்கள் தங்க ளுக்கு விருப்பமான இல்லக் கிழத்தியை மணந்து கொள்வது மாபெருங்குற்றமாக ஐரோப்பிய ராஜதந்திரிகள் கருதுகிறார் கள். அக்குற்றத்துக்கு தண்டனை முடி துறவு மட்டுமல்ல. நாட்டை விட்டும் துறத்தப்படுகிறார். முற்போக்குக் கொள் கைகள் உள்ள ஐரோப்பியரின் மனப் பான்மைக்கு இது இன்னொரு திருஷ் டாந்தம்! இவர்கள் தான் ஜனநாயகத் தைக் காப்பவர்களாம். சமூகத்துக்கு ஒரு தனிமனிதன் அல்லது நங்கையின் விவாஹ உரிமையில் தலையிட அதிகாரம் கிடையாது. விவாஹம் என்பது சமூகத் தின் இன்பத்துக்கல்ல. சதிபதிகளின் இன்ப வாழ்வுக்கென்பதை சமூகமும், ராஜ தந்திரிகளும் உணராமல் மன்னர்களையும் மக்களையும் கஷ்ட நிஷ்டூரங்களுக்குட் படுத்துவது தர்மமல்ல. காதலின் வேகத் தையும் போக்கையும் கனல், கடல், காற்று எதுவும் தடுக்க முடியாது. என்று தான் ஐரோப்பிய அரசியல் அதிகாரிகள் இந்த உண்மையை உணரப் போகிறார் களோ? எத்தனை மன்னர்கள் முடி துறந்து நிற்க வேண்டுமோ?

... ... ...

## லேடி எர்ஸ்கின்

நமது கவர்னர் பிரபுவின் மனைவி லேடி எர்ஸ்கின் இளகிய மனதும் ஏழை மக்க ளின் முன்னேற்றத்தில் ஆர்வமுங் கொண் டவர் என்பதும் இதுவரையில் அவர் செய்துவந்த பல பொதுக் காரியங்களால் தெரிந்ததே. சமீபத்தில் அவர் தன் சொந்தஹோதாவில் திருமணியிலிருக்கும் குஷ்டரோக நிலையத்துக்கு ரூபாய் 1500 நன்கொடை யளித்திருக்கிறார். இவ்விதம் தன் செல்வத்தை மக்களின் நன்மைக்காக தாராளமாகச் செலவு செய்ய முன் வந்த லேடி எர்ஸ்கினுக்கு எங்கள் வாழ்த்துதலை யும் போற்றுதலையும் பணிவுடன் தெரிவித் துக் கொள்ளுகிறோம். இவ்வித சமூக வேலைகளில் ஈடுபடுவதால் லேடி எர்ஸ்கின் நம் மாகாணவாசிகளின் மெய்யன்பையும், விஸ்வாசத்தையும் பெறுவாரென்பது நிச் சயம்.



# பஞ்சாங்கம்

| இங்கிலீஷ் | தமிழ் | வாரங்கள் | 1937ளு மேமீ ஈசுவரளு சித்திரை - வைகாசி. திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவை. |
|---|---|---|---|
| 1 | 19 | சனி | பஞ் 8-6, பூரா 53-7, தி 13-31, பார்த்தசாரதி ரதம். |
| 2 | 20 | ஞாய | ஷஷ் 12-19, உரா 57-44, தி 14-43, ஸப்தமி திதி. |
| 3 | 21 | திங் | ஸப் 14-53, ஸ்ரீவ 60-0, தி 8-12, பொன்னேரி தீர்த்தம். |
| 4 | 22 | செவ் | அஷ் 15-35, ஸ்ரீவ 0-33, தி 10-41, நவமி திதி. |
| 5 | சித்திரைமீ 23 | புத | நவ 14-12, அவி 1-24, தி 19-3, திருநாவுக்கரசு. |
| 6 | 24 | வியா | தச 10-48, சத 0-15, உப 56-59, தி 15-57. |
| 7 | 25 | வெ | ஏகா 5-33, உப 53-11, உட் 52-36, தி 19-23. |
| 8 | 26 | சனி | திர 50-41, ரே 46-40, தி 19-38, சிவராத்திரி. |
| 9 | 27 | ஞாய | சதி 41-50, அசு 39-52, தி 31-0, வடுகநம்பி. |
| 10 | 28 | திங் | ●32-28, பர 32-33, தி 0-56, சோம அமா. கிரு. |
| 11 | 29 | செவ் | பிர 22-59, * 25-10, சே 2-52, திதிதுவயம். |
| 12 | 30 | புத | து 14-8, ரோ 18-17, தி 0-35, தி 30-53, அக்ஷ. திரி. |
| 13 | 31 | வியா | திரி 5-34, உப 53-20, மிரு 12-15, ரா 0-5, அவமா. |
| மேமீ 14 | 1 | வெ | பஞ் 53-15, ஆரு 7-22, ரா 4-10, ரிஷபரவி 0-46. |
| 15 | 2 | சனி | ஷஷ் 49-14, புந 3-55, தி 23-20, ராமசந்திரர். |
| 16 | 3 | ஞாய | ஸப் 46-59, பூச 2-11, ரா 2-39, ஸப்தமி திதி. |
| 17 | 4 | திங் | அஷ் 46-32, ஆயி 2-11, ரா 1-31. |
| 18 | 5 | செவ் | நவ 47-50, மக 3-56, தி 25-4, தஞ்சை கருடன். |
| 19 | 6 | புத | தச 50-41, பூர 7-19, தி 26-45. |
| 20 | 7 | வியா | ஏகா 54-48, உத் 12-6, ரா 3-35, கரிநாள். |
| 21 | வைகாசிமீ 8 | வெ | துவா 59-56, ஹஸ் 18-4, ரா 8-44, மிதுனயனம் 29-28. |
| 22 | 9 | சனி | திர 60-0, சித் 24-55, ரா 9-1, பிரதோஷம். |
| 23 | 10 | ஞாய | திர 5-45, ஸ்வா 32-24, ரா 16-29, ஸ்ரீநரசிம்மஜயந்தி. |
| 24 | 11 | திங் | சதி 12-2, விசா 40-3, ரா 19-40, ஸ்ரீ நம்மாழ்வார். |
| 25 | 12 | செவ் | ○ 18-23, அநு 47-51, கஞ்சி கருடன், பட்டர். |
| 26 | 13 | புத | பிர 24-41, கேட் 55-19, தி 3-36, வைசாகபகுளம். |
| 27 | 14 | வியா | துவி 30-28, மூல 60-0, தி 17-37, துவிதியா திதி. |
| 28 | 15 | வெ | திரி 35-33, மூல 2-13, சே 1-46, தி 28-40. |
| 29 | 16 | சனி | சது 39-36, பூரா 8-20, தி 30-1, கஞ்சி, சேலம், பூவிருந்த வல்லி, காலடிபேட்டை ரதம். |
| 30 | 17 | ஞாய | பஞ் 42-26, உரா 13-22, தி 23-59, பஞ்சமி திதி கரிநாள். |
| 31 | 18 | திங் | ஷஷ் 43-46, ஸ்ரீவ 17-6, தி 27-28, கஞ்சி தீர்த்தம். |

## பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்க்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரியீ 1௳ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர்மீ 8௳ குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்ப்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஜூன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

# சினிமா குறிப்புகள்

## நவயுவன்

அஸன்தாஸ் கிளாஸிகல் டாக்கீஸாரின் நவயுவன் அல்லது கீதாசாரம் என்ற படத்துக்கு வேண்டிய லண்டன் காட்சிகள் அனேகமாய் எடுக்கப்பட்டு விட்டன. சில மகுடாபிஷேக சீன்கள் எடுக்கப்பட்டபின் கூடிய சீக்கிரம் தமிழ் மக்களை மகிழ்விக்க இவ்வுன்னதப் படம் எல்லா நகரங்களிலும் காண்பிக்கப்படும்.

## "கள்வனின் காதலி"

"ஆனந்த விகடன்" ஆசிரியர் "கல்கி" சினிமாவுக்காக எழுதிய "கள்வனின் காதலி" என்ற கதையைப் படமாகப் பிடிக்க வேண்டிய ஏற்பாடுகளை கோயம்புத்தூர் பரமேஸ்வர் சவுண்டு பிக்சர்ஸ் லிமிடெட் செய்து வருகிறார்கள். திரு. எல்லிஸ் ஆர். டங்கன் படத்தை டைரக்ட் செய்கிறார்.

## வல்லாள ராஜன்

வேல் பிக்சர்ஸார் "வல்லாள ராஜன்" என்னும் கதையைத் தமிழில் படம் பிடித்து வருகிறார்கள். பட்டினத்தாரில் தன் பெருமையை நிலை நாட்டிய திரு. தண்டபாணி தேசிகரே இதில் பிரதம நடிகர். படம் நிச்சயம் நன்றாகத் தானிருக்கும் என்பதற்கு வேறு அத்தாட்சி தேவையில்லை.

## சாரதி பிலிம்ஸ், சென்னை

பெரிய புராணத்தில் சிறந்து விளங்கும் பக்த சிரோன்மணிகளில் திலகமாக விளங்கும் சைவத்திருமகள் காரைக்காலம்மையாரின் சரித்திரத்தை சினிமாப் படமாக சென்னை சாரதி பிலிம் கம்பெனியார் தயார்செய்து வருகிறார்கள்.

## ஜோதி பிலிம்ஸ், திருச்சி

முருகதாசராகிய ஸ்ரீ அருணகிரிநாதரின் திவ்ய சரித்திரத்தை வாடியா மூவிடோனில் மேற்படி கம்பெனியார் சிறந்த முறையில் தயாரித்து வருகிறார்கள். கூடிய சீக்கிரம் வெளிவரும்.

## சவுண்டு ஸிடி, மதராஸ்

"சிப்பாயின் மனைவி" என்ற படம் அநேகமாய் முடிந்துவிட்டது. கூடிய விரைவில் வெள்ளித் திரையில் காணலாம்.

## முருகன் டாக்கி பிலிம் கம்பெனி

இக்கம்பெனியார் சென்னை சீனிவாச சினிடோனில் திரு. ஏ. நாராயணன் அவர்களின் டைரக்ஷனில் "ஸ்ரீ கிருஷ்ண துலபாரம்" என்னும் படத்தைத் தயார் செய்து வருகிறார்கள்.

## மாயா ஜோதி

திரு. ஆர். பத்மனுபன் நூதனக் கதையான "மாயா ஜோதி"யைப் படம் எடுக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார். தகுந்த ஆக்டர்களைப் பொறுக்கி எடுத்து பம்பாயில் சிறந்த ஒரு ஸ்டுடியோவில் படம் எடுக்கப்படும் எனத் தெரிகிறது. இக் கதையின் போக்கு வெகு அழகாயிருக்குமென்று தெரிகிறது.

## க்ஷீரபலா

(101 தடவை பாகம் செய்யப்பட்டது)

**பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி**

எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. தேசமெங்கும் புகழ்பெற்றது.

அவுன்ஸ் 1க்கு 3 8 0

**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ், 107, பிராட்வே, சென்னை.**

Trade Mark

Regd. No. 1983

விலை தோடு சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா எட்டு

விலை பேசரி சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா ஆறு

ஒரிஜினல்

**கல்ச்சர் வைரங்கள்**

கல்ச்சர் வைரம் எங்களிடம் தவிர வேறு இடங்களில் கிடையாது.

கேட்லாக் இனாம்!

சொ. அருணாசலம் செட்டி,

மு. ராமசாமி செட்டி,

ஷுரூப்பு வியாபாரம், திருச்சினாப்பள்ளி

உங்களுக்கு தேவையான ஆப் டோன், லயன், அழகிய கலர் பிளாக்குகள் முதலியவைகளை கைதேர்ந்த ஆட்களைக் கொண்டு, சேர்த்தியாகச் செய்து குறித்த காலத்தில் கொடுப்போம். வெகுகாலமாக எம். எஸ் எம். ரயில்வே கம்பெனிக்கும் பிரபல பிலிம் கம்பெனிகளுக்கும், புஸ்தக பிரசுரங்களுக்கும் நாங்களே பிளாக்குகள் செய்து கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஒரு முறை தங்களது ஆர்டர்களை கொடுத்து பரீக்ஷியுங்கள்.

விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—

**கே. ரத்னம் அண்டு கோ.,**

*(Late of Klein & Peyryl),*

291, ஹைரோட்,

திருவல்லிக்கேணி, சென்னை.







சுவை மிகுந்த

**உண்டிகள் — பானங்கள்.**

இணையற்ற ரகம்—வகையான உபசாரம்—உல்லாசமான இடம்—நல்ல காற்றோட்டம் முதல் தரமான வசதி.

# சாஸ்திரி ஹோட்டல்

**89, சிக்பேட், பெங்களூர் சிடி.**



# டோங்ரேயின் பாலாமிருதம் என்றால் என்ன?

1. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளுக்கு மேன்மையான டானிக்.
2. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளின் கனச்சூட்டையும், பலஹீனத்தையும் குணப்படுத்தும்.
3. டோங்ரேயின் பாலாமிருதம் எலும்பை வளர்க்கும் சக்தியைக் கொடுக்கிறது.
4. டோங்ரேயின் பாலாமிருதம் ஜீரணசக்திக்கு உதவுகிறது.
5. டோங்ரேயின் பாலாமிருதம் பலத்தைத் தந்து சுகத்தைக் கொடுக்கிறது.
6. டோங்ரேயின் பாலாமிருதம் அநேக நாட்களாய் கஷ்டப்படுத்தும் இருமலையும் சாதா ஜுரத்தையும் போக்கும்.
7. டோங்ரேயின் பாலாமிருதம் தித்திப்பானதால் குழந்தைகளால் சந்தோஷத்துடன் சாப்பிடப்படுகிறது.
8. எவ்விதத்திலும் "டோங்ரேயின் பாலாமிருதமே" வளரும் குழந்தைகளுக்கு சரியானதாக யிருக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்




ஏன் நீங்களும் இன்றிருந்தே
இதைக் கையாண்டு இதன் அபார
மான பலனை அடையக்கூடாது?

அநேக தங்கமெடல்கள் பரிசுபெற்ற பிரக்யாதியான

# கேஸரியின் பற் பசை

சகல விதமான பல் வியாதிகளையும் அறவே நீக்கி, பற்களை பளிங்குபோல் வெண்மைப் படுத்தி, அழகு செய்வது மன்னியில் பற்களுக்கு வசீகரத்தையும், ப்ரகாசத்தையும், மதுரத்தையும், அரிய பலத்தையும், தேகத்திற்கு சுகத்தையும் தருகிறது.

விலை டியூப் 1-க்கு அணா 8




2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |